1931 டிஸ்டர் தெ. 2041

தனிப்பிரதி விலை ஒரு அணா.

குடி அரசு

ஜூட சந்தா முன்பணம்	— ரூ.	3—0
6-மாத சந்தா ,,	— ,,	1-12
வேனி நாட்டிற்கு ,,	— ,,	5—0

ஞாயிறுதோறும் வெளிவருவது.

வியாபாரிகள் விளம்பரம் அங். 1 க்கு ரூ. 1.
கோர்ட் விளம்பரம் அங்குலம் 1 க்கு ரூ. 2.
நீடித்த விளம்பரத்துக்கு தனி விகிதம்

மாலை 7 | ஈரோடு, பிரஜோத்பத்தி மீ 5உ (20—12—1931) | மலர் 34

பலமுள்ளவீரபுருடனுக,

தமரனுக, வாலிபத்தன்மையடைய, ஆண் பேண் மன மோத்துவாழ, இல்லற, இன்பம் அனுபவிக்க, பத்திர பாக்கியம் பெற வழியில்லையென வருந்துபவர்கள்

தங்க பஸ்பம்.

சாப்பிடுங்கள்.

அபார தாது புஷ்டியும், பலமும், பசியும், ரத்தவிர்த்தியும் உண்டாகும் இல்வாழ்வில் அதியற்புத சுகந்தரும்.

48-நாள் பஸ்பம் விலை ரூ. 20. 24-நாளுக்கு ரூ 10.

மாதர்களுக்கு

இது தான் வேண்டியது

கொர்ப்பண எண்ணெய்

மாதாந்தர காலத்தில் உண்டாகும் வலி ற்றுவலியை உடனே நிறுத்தும். சரியாய் பஹிஷ்டையாகும். சொப்பாசயம், இனைப்பை இவற்றிலுள்ள சகல கெடுதல்களும் நீங்கி சொர்ப்பம் உண்டாகும். மிக்க அருபவமானது.

புட்டி 1-க்கு ரூ. 2.



அந்நிய தேசவாசிகள் மருந்திற்கு ஆர்டர் செய்யும்போது முன்பணம் ரூ. 5 அனுப்பவேண்டும்.

வைத்திய ஆசிரியர் C. மலையப்பசாமி, நித்தியானந்த மெடிக்கல் ஹால், பழனி, S. I.

ஜோதிமுத்து.

டாக்டர் B. A. எதிராஜுலுல் தயாரித்து 31 ஆண்டு களாக அனுபவித்து கைகண்ட, கோஷாயி மேக எண்ணை.

(கோஷாயி ஒருவரால் அனுக்கிரகிக்கப்பெற்றது)

சகோதர, சகோதரிகளே! வெட்டவாய்வு (அஷ்ட) எட்டு விதங்களாக, கர்ப்ப,—விந்து ஸ்தானங்களில் தங்கி, வெளியாகிக்கொண்டிருப்பதை அக்காலங்களில் கண்டித்து நீக்காமல் விட்டு நீடித்து நின்று மேக வாய்வு என்று பெயர் பெற்ற கொடியோன் கபாலத்தில் தங்கி, கபால இடி, குத்தல் நேத்திரத்தில் பார்வை மங்கல், பல குற்றங்களும், காசி, செவி, தந்தங்கள், கண்டம் இவைகளில் குற்றங்களும், நெஞ்சில் தங்கி, மாரடைப்பு, தமரகவாய்வு, திணரல், கொக்கிருமல், காசமாகவும், கீல்களில் தங்கி, சூலைகளாகவும், நரம்புகளில் தங்கி முன்-பின் (வீச்சுகள்) பலவித இழுப்புகளாகவும் வயற்றில் தங்கி; சகலவித குன்மங்கள் வாய்வு, சூதகக்கட்டிகள், பக்க வலி இழுப்பு குத்தல் நெர்ப குற்றங்கள் நித்திரை அற்ற நீர்தாரை ரோகங்கள், மூலங்கள், திமிர், மத மதப்பு, சகலவித மேகங்கள், சிட்டைகள் ரண குஷ்டங்களாகவும், மலப்போக்கு அல்லது சிக்கல் பட்டுஜனிக்கும் [விரிக்கிர் பெருகும்] அனந்த மேக வாய்வு ரோகிகளும், 3 நேரம் நம், கோஷாயி மேக எண்ணை சாப்பிட்ட 7வது நாளே, எல்லா உபத்திரவத்திலிருந்து விலகி 15வது நாள்பாலியதே ஜசுடன், விருத்தரும் பாலிய உணர்ச்சிபெற்றுவருவது பிரத்தியகும்

யோகாப்பியாசிகளுக்கு சடலத்திலுள்ள துர்நீர்களை அகற்றி எல்லா அவயவங்களிலும் சுத்த இரத்தத்தை ஊட்டி, அறிவு இடத்தில் புத்தியை நிறுத்தி (ஜோதியாகிய) தன்னை தெரிசிக்க, காயத்தை இருச்செய்து காக்கும் காயகர்பம். 3 நேரம் உபயோகிக்கும். கோஷாயி மேக எண்ணை கொண்ட சீசா 1க்கு ரூ. 7—0—0. பத்திய விபரம் மருந்துடன். பார்சிலுக்கு செலவு பிரத்தியேகம். மலாய் வாசிகள் ஆர்டருடன் ரூ. 8—12—0 அனுப்பவேண்டும்.

கோஷாயி வைத்தியசாலை,

தென்னூர், திருச்சி.

சென்னை லோக்கல் போர்டு ஆக்டு.

(1930ம் ஆண்டு வரையிலுமுள்ள சீர்திருத்தங்களுடன் கூடியது)

M, S. பார்த்தசாரதி அய்யங்கார், B. A., B. L.,

அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டது.

விலை ரூபா 2—0—0. வி. பி. செலவு ரூ. 0—5—0

மானேஜர்,

குடி அரசு புத்தகசாலை, ஈரோடு

சுயமரியாதைத் தலைவர்கள்.

நமது இயக்கத் தந்தை பெரியார் உயர்திரு. ஈ. வெ. ரா. இயக்கத் தலைவர் உயர்திரு. W. P. A. சௌந்திர பாண்டியன் இவர்களின் போட்டோ பேட்ஜ்கள் (Photo Lockets) 1" இஞ்சி 1 1¼" இஞ்சி ரவுண்டு சைஸ்களிலும் உயர்திரு இராமசாமிப் பெரியார் அவர்களின் டேபிள் போட்டோ Photo Medallion oval size with Easel) 5" X 3 5/8" சைஸில் ஒவ்வொரு சுயமரியாதை இயக்க அன்பர்களின் டேபிள்களின் பேரிலும் அமர்ந்து உற்சாகத்தை ஊட்டும் முறையில் தயாராகி வந்துவிட்டது. விலை விபரங்களுக்கு எழுதவும்.

அ. ப. அர்த்தனரி & பிரதர்,

ஜலகண்டபுரம். (சேலம் ஜில்லா)

டாக்டர் சிங்காரம் அவர்களின்

மிகவும் குணமுள்ள மருந்துகள்

உலகப் பிரசித்திபெற்ற

மஹா சந்தனுதித் தைலம்

அநேக பச்சிலை மூலிகைகள் சேர்ந்தது. கண் பார்வை குறைவா யிருந்த அநேகருக்கு இந்தத் தைலத்தின் உபயோகத்தினல் நல்ல பார் வை ஏற்பட்டிருக்கிறது.

கை, கால், கண் எரிச்சல், கண் சிகப்பு, கண்ணில் நீர்வடிதல், கண் பூ, பீளை சாருதல், மேக நீர், வெள்ளைமூத்து, ஸித்திரையின் மை, ஒருத்தலை நோய், பீனிசம், காதிரைச்சல், காதுமந்தம், மண்டைக் குத்து முதலிய சிரசிலுண்டாகும் பல நோய்களைக் குணம் செய்யும். வெட்டைச் சூடு, திரேக காங்கை முதலிய எல்லாவித உஷ்ணத்தையும் போக்கி சரீரத்திற்கு குளிர்ச்சியையும் நல்ல சுகத்தையும் கொடுக்கும்.

24 அவுன்ஸ் டின் ரூ. 4 12 அவுன்ஸ் டின் ரூ. 2—2—0

சாலாமிசிரி லேகியம்

சிறந்த தாதுபுஷ்டி மருந்து.

கை கால் அசதி, சோம்பல், இடுப்பு வலி, நரம்புத் தளர்ச்சி, சொற் பன ஸ்கலிதம், சம்போக காலத்தில் எற்படும் துரித ஸ்கலிதமும், முத லிய கொடிய வியாதிகளை நீக்கி தளர்ந்த நரம்புகளை கெட்டிப்படுத்தி வீரிய விர்த்தியை உண்டாக்கும். மதுக்கு உற்சாகத்தையும் சுற சுறுப்பையும் உண்டாக்கும். சம்போக இன்பத்தை முற்றிலும் அநுப விக்கச் செய்யும். சாப்பிட மதுரமூள்ளது.

ஒரு சேர் டப்பி விலை ரூ. 2—8—0

மகா வில்வாதி லேகியம்.

அஜீரணம், வயிற்றுப்பிசம், பசிமந்தம், நெஞ்சில் கரகரப்பு, குலை எரிவு, வாயில் ஜலம் ஊரல், நெஞ்செரிவு, வாந்தி, தலைசுற்றல் வயிற்று வலி, அஜீரணத்தால் எற்படும் வயிற்றுப்போக்குகள், நாவரோசிகம், மயக்கம், கை, கால் குடைச்சல், முதலிய பித்தம், பித்த வாய்வு சம்பந்த மான பலவித வியாதிகளை நிவர்த்தி செய்து நல்ல பசிதீபனத்தையும், ஜீர்ண சக்தியையும் உண்டாக்கும். பத்தியமில்லை.

ஒரு சேர் டப்பி விலை ரூ. 2.

அமிர்த சஞ்சீவி லேகியம்:

மனிதருக்குண்டாகும் நோய்களுக்குப் பல காரணங்கள் இருந்தா லும் மலச்சிக்கல் ஓர் முக்கிய காரணமாயிருக்கிறது. ஆதலால் மலச் சிக்கலை உடனே நிவர்த்திக்கவேண்டும். இந்த லேகியம் எவ்வித மலச் சிக்கலையும் நீக்கி, தாராளமாய் காலை, மாலை மலம் வெளியாகும்படி செய்வதுடன், வாய்வு, தொந்தரவுகளையும் போக்கும்

பலவித பழச் சத்துக்களும், சிறந்த மூலிகைகளும் சேர்த்து தயார் செய்யப்பட்டது. சாப்பிட மதுரமுள்ளது, பாலர் விருத்தாப் பியர்யாவரும் சாப்பிடலாம்.

ஒரு சேர் டப்பி விலை ரூ 2

எல்லா மருந்துகளுக்கும் பாங்கிங் தபால் செலவு பிரத்தியேகம். மலாய் நாட்டு வாசிகள் ஆர்டருடன் முன்பணம் அனுப்பவேண்டும் விலாசம் தெரிவித்தால் முழு விவரமடங்கிய கேட்லாக் இனமாய் அனுப்பப்படும். கமீஷன் ஏஜண்டுகள் தேவை.

டி. சி. சிங்காரம் அண்டு கோ,

தெப்பக்குளம்போஸ்டு, திருச்சினாப்பள்ளி

புதிய சந்தாதாரர்களுக்கு இனம்!

"குடி அரசு"க்குச் சந்தாவாக ஒரு வருஷத்திய கட்டணம் 3 ரூபாயை மணியார்டர் செய்பவர்களுக்கு பத்திரிகையுடன் 0—8—0 அணவிலையுள்ள குடி அரசு வெளியீட்டுப்புத்தகங்கள் இனமாகக்கொடுக்கப்படும்.

வெளியிடுவோர் "குடி அரசு" ஈரோடு.

சுயமரியாதை இயக்கப் பிரமுகர்கள்.

திருவாளர்கள், 1. ஈ. வெ. ராமசாமி, 2. W. P. A. சௌந்திர பாண்டியர், 3. ஆர். கே. ஷண்முகம், 4. எஸ். ராமநாதன் 5. கைவல்ய சாமியார், 6. ஈ. வெ. ரா. நாகம்மாள், 7. இந்திராணி பாலசுப்பிரமணியம். 8. சிவகாமி, சிதம்பரனர், 9. குரு சாமி குஞ்சிதம், 10. நீலாவதிராம சுப்பிரமணியம் 11. சுலோசனை, பொன்னம்பலனர், 12. சிவாநந்தம். ஆகியவர்களின் போட்டோ படங்கள் 6½ x 4¾ சைஸ் படம் 1-க்கு 0—8—0. ஈ. வெ. ரா. 8½ x 6½ 1-க்கு 1—0—0. மொத்தமாய் வாங்குகின்றவர்களுக்கு 100க்கு 6—4—0வீதம் கமிஷன்கழித்துக் கொடுக்கப்படும். தனி காப்பி வேண்டியவர்கள் விலைக்கு மேல் 4 அணா ஸ்டாம்பு அனுப்ப வேண்டும். விலாசம்:—

பாலு & Co., No. 3
ஒப்பணக்காரத்தெரு, ஈரோடு.

சுயமரியாதை இயக்கப் பத்திரிகைகள்.

—:0:—

'குமரன்'

வாரப்பதிப்பு

உள்நாடு வருடசந்தா 5—0—0
வெளிநாடு வருடசந்தா 6—0—0

மாதப்பதிப்பு.

உள்நாடு வருடசந்தா 0—12—0
வெளிநாடுவருடசந்தா 1—0—0

ஆசிரியர்: சோ. முருகப்பா.
விலாசம்:—
மானேஜர், "குமரன்" காரைக்குடி
ராமநாதபுரம் ஜில்லா

"நாடார் குலமித்திரன்"

வாரப்பதிப்பு

உள்நாடு வருடசந்தா 4—0—0
வெளிநாடு ,, 5—0—0

ஆசிரியர்: சு. அ. முத்துநாடார்
விலாசம்:— மானேஜர்,
"நாடார்குல மித்திரன்"
அருப்புக்கோட்டை
ராமநாதபுரம் ஜில்லா.

'புதுவைமுரசு'

வாரப்பதிப்பு

உள்நாடு வருடசந்தா 3—0—0
வெளிநாடு ,, 4—0—0

மானேஜர், "புதுவைமுரசு"
4 லல்லிதொலாந்தால் வீதி
புதுச்சேரி.

'தமிழன்'

வாரப்பதிப்பு

உள்நாடு வருடசந்தா 3—0—0
வெளிநாடு ,, 4—0—0

ஆசிரியர்: ஜி. அப்பாதுரையார்
விலாசம்:—
மானேஜர் "தமிழன்"
ஹண்டர்சன் பேட்டை P.O.
கோலார் தங்கவயல் (S. I.)

God and the Universe.

கடவுளும், பிரபஞ்சமும்.

கடவுளுக்கு உலகில் ஏதாகிலும் வேலை உண்டோ?

(தோழர். ம. சிங்காரவேலு B. A., B. L.)

V.

மன் விஷயத்தில் கடவுளுக்கு நமது திரேகவளர்ச்சியிலாவது அல்லது அதன் நடத்தையிலாவது யாதொரு வேலையும் இல்லை என்பதைக் கண்டோம். திரேகத்திற்கு அன்னியமாகஉள்ள நமது பூமிநிகழ்ச்சிகளில் யாதாமொரு சம்பந்தமாவது கடவுளர்க்கு உளதா எனப்பார்ப்போம். நமது பூமியில் நிகழும் தோற்றங்கள் பல உள. மழை, காற்று, புயல், வெள்ளம் முதலிய நிகழ்ச்சிகள் யாவும் இயற்கையாகவே நடந்தேறிவருகின்றன. பௌதீக பூகோள நூலில் பூமியின்மேல் நிகழ்ந்து வரும் பிரகிருதசம்பவங்கள்யாவும் நடந்து வரும்முறையை நன்றாக விளக்கப்பட்டிருக்கின்றன. பூமி சூரியனைச்சுற்றி ஓடும் மார்க்கத்தில் சற்று அசைந்து ஓடுவதால், நான்கு காலங்களாகிய கோடைக்காலம், மாரிக்காலம், வேனிற்காலம், உதிர்காலம் உண்டாகின்றன. இந்தக்காலங்களுக்குத்தக்கவாறு வெயிலும், மழையும், பனியும் உண்டாகின்றன. மழைக்காலங்களில் மின்சார சக்தியால், இடி, மின்னல் உண்டாகின்றன. வெயில்காலத்தில் பூமியின் மேலுள்ள ஜலம் நீராவியாகி, குளிர் காற்றுபட்டவுடன், இரவில் பனியாக நிலத்தின் மேல் விழுகின்றன. குளிர்ச்சி அதிகரித்தால், காற்றுமேல் எழுகின்றது. மேலெழுந்த காற்று, குளிர்ச்சி அடைந்தால், புயலாக அடிக்கின்றது.

இவ்விதமாக, காற்று, மழை முதலிய பிரகிருத சம்பவங்கள்யாவும், கடவுளோ அல்லது தெய்வங்களோ, அல்லது பேய் பிசாசுகளோ, யாருடைய உதவி, ஒத்தாசையுமின்றி, நிகழ்ந்துவருகின்றன. கடலில் அடிக்கும் அலைகளும், சமுத்திரங்களில் எழும் சத்தம், வெள்ளம் யாவும் சாதாரண காரணங்களால் நடக்கின்றன. மழை பெய்தால், ஆற்றில் வெள்ளமும், ஏரி முதலிய பள்ளங்களில், ஜலமும் காண்கின்றோம். கால மழையால் வெள்ளாமையும், அதில்லாவிட்டால், பஞ்சமும் நேரிடுகின்றன. பிரகிருதத்தில் நிகழ்ந்து வரும் சகல சம்பவங்களும் நாம் பார்க்கக்கூடிய காரணகாரிய முறையில் நடைபெறுகின்றன. எதன் மத்தியிலும் கடவுளோ, அல்லது, தெய்வமோ, அல்லது பிரமமோ, பிரவேசிப்பதை யாரும் அறியார். சில புராணங்களில், சில அபூர்வ நிகழ்ச்சிகள் கடவுளால் நிகழ்ந்ததாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஊமைப்பெண்ணை, பேசவைத்ததாகவும், எலும்பைக்கொண்டு பெண்ணை, உயிர்ப்பித்ததாகவும், குஷ்டரோகிகளை ஸ்பரிசத்தால் சுகப்படுத்தியதாகவும், சமைத்து சாப்பிட்ட பிள்ளை உயிருடன் தோன்றியதாகவும், இறந்தமூன்றும் நாள் உயிர்த்தெழுந்ததாகவும், சூரியனை ஓடாமல் நிறுத்தியதாகவும், ஜலத்தைத் பெண்ணாக்கி, தலையில் வைத்துக்கொண்டதாகவும் இன்னும் இவைபோன்ற அற்புதங்கள் நிகழ்ந்ததாகவும், அவை, கடவுளாலோ, அல்லது கடவுள் அனுக்கிரகத்தாலோ, நிகழ்வுற்றதாகவும், அநேக மதஸ்தர்கள் எழுதிய புத்தகங்களில், படிக்கின்றோம். இந்த அபூர்வக் கதைகளை, மெய்யென பல கோடி பாமர மக்கள், நம்பியும், அந்த நம்பிக்கை மேல், தங்கள் வாழ்வையும் நடத்துகின்றார்கள். அறிஞர்களில் சிலரும், பண்டைக் காலங்களில் இவைபோன்ற அற்புதங்கள், நடந்திருக்கலாமென்னவும், கூறுகின்றனர். இன்னுஞ் சில அறிஞர்கள், முற்காலங்களில் நிகழ்ந்தனவாகச் சொல்லும் அபூர்வ நிகழ்ச்சிகள் அநேகம், கற்பனை கதைகளாயினும், சில மாத்திரம், உண்மையாயிருக்கலாமெனக் கூறுகின்றனர். விசாரணைக்குப் பகுத்தறிவை அஸ்திவாரமாகக்கொண்ட அறிஞர் இவ்விதஅபூர்வ நிகழ்ச்சிகளுக்குச் சாட்சியம் போதாதென சிலவற்றை த்தள்ளியும், சிலவற்றைமாத்திரம் உண்மையாய் இருக்கலாமென, அந்தந்த வேத புத்தகங்களிலிருந்தே ருசுசெய்வதாகக் கூறுகின்றனர். இந்தியாதி வாதத்திற்கு இரண்டு திருஷ்டாந்தங்களை எடுத்துக்கொள்ளலாம். முதலாவது, ஏசு மூன்றும் நாள் உயிர்த்தெழுந்தது ஒன்று, இரண்டாவது பிரகலாதன்கதை மற்றொன்று. இதன் சம்பந்தமாக ஒரு பிரச்சினையைக்குறிக்க வேண்டும்.

பஞ்ச தந்திரக்கதைகளில் சொல்லியிருக்கும் கதைகளோ, உண்மையென நம்பும் குழந்தைகளுக்கும், வேத, புராண விதிப்படி நூல்களில் சொல்லும் கதைகளை உண்மையென நம்பும் மனிதர்களுக்கும், என்ன வித்தியாசம்? இந்த சங்கதியை, தத்துவ ஞான ஆராய்ச்சியிலும், மத வாதங்களிலும் மறக்கிறபசங்கையாகும். இவ்விருதரத்தாருடைய நம்பிக்கைகளில், எது உண்மை? இந்த பிரச்சினை விஷயமாக கோடானகோடி நூல்கள் இயற்றியுள்ளனர். மதங்களில் கூறப்பட்டுள்ள கடவுளர்கள் உண்மையாயின், புராணங்களில் கூறப்பட்டுள்ள கதைகள் உண்மை என்று ஏற்படும், அல்லது புராணங்களில் கூறியுள்ள கதைகள் உண்மையாயின், அந்த திருவிளையாடல்களைச் செய்துவந்ததாகச்சொல்லும் கடவுளரும், உண்மையாவர். ஆதலால், புராணக்கதைகளின் உண்மையில் கடவுள் உண்மையும் அடங்கியுள்ளது. ஏதே பிரகாரம், புராணக்கதையின் உண்மை இன்மையில் கடவுள் இன்மையும் அடங்கி உள்ளதென அறியவும். உலகில் மதவாதிகளும், தத்துவ ஞானிகளும் பகுத்தறிவு சித்தாந்திகளும் வாதங்களில் இதுவுமொன்று. இது மத தத்துவ விசாரணையில், முக்கிய பிரச்சினையாதலால், இவ்விடத்தில் சற்று விபரமாக இதனைக் குறிப்பிடுவோம்.

பஞ்ச தந்திரக்கதைகள் சிறு குழந்தைகளுக்கு விளையாட்டாக எழுதப்பட்ட கதைகளாதலால், அதனைக்குழந்தைகள் சிலகாலம், உண்மை யென நம்பி வந்த போதிலும், வயது வந்தவர்களுக்கு அவை கதைகளே. மிருகங்கள மனிதரைப்போல் பேசுவதுகூடாமையால், அப்படி மனிதரைப் போல் நடித்ததாகச்சொல்லுவதும் வெறும் கதைகளே யாகும். ஆனால், வேதங்கள் தெய்வவாக்கானபடியால், அவைகளில் கூறியுள்ள கதைகள் உண்மையாகக் கொள்ளல்வேண்டுமென்பார். இந்த வாதத்தின் முதல் வழுக்கு என்னவெனில், வேதங்கள் தெய்வவாக்கென்று ருசுப்பிக்கும்வரை இவர்கள் கூறும் வாதம் பொருந்தாது. ஆதலின் இந்த வாதம் முற்றுந்தவறு. இரண்டாவது, வேத புராணங்களில் கூறியுள்ள அபூர்வ காரியங்கள் தற்காலத்தில் நடவாமையால், ஈஸாப்கதைகளைப் போன்ற (Esops Fables) கதைகளெனவே ஏற்படும். இந்த கண்டனைக்கு என்ன விடை கூறுகின்றார்கள் எனில், சரித்திரங்களில் கூறியுள்ள முற்கால சம்பவங்களை உண்மையென கொள்வது போல், அதே நியாய முகத்தானே, வேத புராணக்கதைகளையும் நம்ப வேண்டுமென்பார். ஆதலின், சரித்திரங்களில் கூறியுள்ள கதைகளின் மேல் வைத்துள்ள நம்பிக்கையின் விசேடத்தை, வேத புராணக்கதைகளின் மேல் வைக்கலாமா? என விசாரிப்போம்.

சரித்திரத்தின் மேல் வைத்துள்ள நம்பிக்கையின் விசேடமென்ன? முதலாவது சரித்திர சம்பவங்கள் இன்றைக்கும் நடந்தேறி வருகின்றன. இரண்டாவது, அந்த சம்பவங்களில், யாதும் அபூர்வமில்லை. மூன்றாவது, அச்சம்பவங்களுக்குத்தகுந்த சாட்சியும் இருக்கின்றன. முக்கியமாக, சரித்திரசம்பவங்களை, அதே காலத்து சரித்திர வாதிகளோ, அல்லது பார்த்தவர்களோ தான் அந்த சம்பவங்களை எழுதி இருக்கின்றனர். இதை Contemporaneous evidence என்பார் ஆங்கிலத்தில். சில சம்பவங்கள் சில சாலணங்களில் வரையப்பட்டுமுள்ளன. செப்பேடுகளில் சிலதை குறிப்பிட்டிருக்கவும் காணலாம். சரித்திரங்கள் கூறும் கதைகளுக்கு சாட்சியம் அவை எழுதியுள்ள புத்தகங்களிலேயே ருசுவாக்கப்படுகின்றது. இவை போன்ற காரணங்களைக்கொண்டு, பகுத்தறிவு சித்தாந்திகள், சரித்திரக்கதைகளை நம்புவதற்கு இடமுண்டு என்று கூறுகின்றனர். இவ்விதசாட்சியங்கள், வேத புராண சம்பவங்களுக்குக்கிடைக்காமையால், அவைகள் வெறும் கட்டுக்கதைகளெனவே கொள்ள வேண்டுமென்பார். இந்த நியாயத்தை மேற்குறித்த இரண்டு திருஷ்டாந்தங்களிடையே காணலாமா வென்று பார்ப்போம். ஏசுநாதர் உயிர்த்தெழுந்தாரென்று விவிலிய நூலில் எழுதியுள்ளதாகக் கூறுகின்றார்கள். முத

தொடர்ச்சி 18ம் பக்கம் பார்க்க.

சீவகாருண்யச் சமயம் மகளிர் உரிமையை மறுக்குமா?

(தோழர். அ. இராகவன்.)

(சென்ற வாரத் தொடர்ச்சி)

சொத்துரிமை:—பெண் மக்கள் அடிமை வாழ்க்கையிலீடுபடுவதற்கும், விபசாரத் தலையிலிடுவதற்கும் முக்கிய காரணம் பெண்களுக்குச் சொத்துரிமை மில்லாததேயாகும். பெண்களுக்குச் சொத்துரிமை இருந்தால் அவர்களின் பிள்ளைகள் தான் இன்னான் மகன் என்று கூறுது, நான் இன்னான் மகன் என்று கூறுவர். பெண்களுக்குரிமையுள்ள காலத்தில் முற் காலத்திலும், இக்காலத்திலும் ஆண்மகன் தான் இன்னான் மகன் என்றே கூறி வந்திருக்கிறான். இதனையே ஒழுக்கும் நீதியுமாகும். இவ்வாறு பெண்களுக்குச் சொத்துரிமை மறுக்கப்பட்டதினாலேயே சில சமயங்களில் கோமான்பரனின் மகனும் பிச்சைக்காரியாய் தெருவினின்று திரட்டித் தனித்து வேண்டியிருக்கிறது. இரண்டாயிரம் தச்சைக்கும். பின்னர் தஞ்சமான நகர்களுக்கும், மணமான பின் கணவனுக்கும், கணவனிறந்த பின் மக்களுக்கும், மக்களும் கணவனுமின்றேல் தன் சோதரன் வீட்டையடைக்கு தன் காத்திமார் நிலைச் சோற்றையுண்டு பரிதாரு உரிமையு மற்ற அடிமைப் பொருளைப் போல் வாழ வேண்டியதாகிறது. இனி ஆயிரம் கூறினும் மிருகம் பாலையும் விலைவனிதை பெண்களினத்தின் அனுபவத்திற்கு உரிமையும் நிலையை நிறுவுடைய பெண்களுக்கில்லை.

"பொருளில்லார்க் கிப்பய னில்லை;
புண்ணியமில்லை; என்றும்
மருவுறு கீர்த்தியில்லை;
மாந்தருட் பெருமையில்லை
கருதிய கருமம் இல்லை;
கதியிலை வழியும் இல்லை,
பெருகிலத்தினிடை நடமாடும்
பிணமெனப் பயிலாண்மே."

என்ற முதுமொழிப்படி இவ்வுலக வாழ்வில் மகளிர் சொத்துரிமையில்லாமல் எவ்விதத் இன்பமும் நுகர்ந்து இனிது வாழ முடியாது நடைப்பிணங்களாய் வாழ்ந்து வருகின்றார்கள் என்பது மெய்யே. பாலைடைக்காலச் சரித்திரங்கள் சிலவற்றில் பிற்கால விடங்களில் பெண்கள் சொத்துரிமை பெற்று வாழ்ந்தனர் என்பது மாலாற்று நூற்கள் மூலமாய் காமறிந்தாலும் பிற்காலத்தே தோன்றிய மதச் சட்டங்களால் தன்னலம் கொண்ட ஆண்மக்கள் பெண்ணுரிமை கழித்து அவர்கள் எக்காலமும் அடிமையாய் மனுஷிய உரிமையற்ற பேதைகளாய் வாழும்படி செய்திருக்கிறார்கள் என்பதை யூகித்தறியலாம். இப் பிரதான பெண் உரிமையில் ஆண் மக்கள் மனைவிகளைப் போட்டு விட்டதினால் பெண் சுதந்திரமிழந்த காரணமும் கடையாய் மதிக்கப்படுதற்கு காரணமாயிற்று. இன்று புதுமையிய நாடாகிய இப்பாரத கண்டத்திலே ஜீவகாருண்ய வழக்குகளென்று கணக்கற்ற தாவாக்கள் கடை பெறுகின்றது. நூலைகளினும் கோடிக்கணக்கான ரூபாய் விரையமாகின்றது. இவ் வீண் விரையத்திற்கும் காரணம் பெண்ணிற்குச் சொத்துரிமையில்லாத பெருங்குறையல்லவா? இவை எல்லாம் ஓர்ந்து இல சீர்திருத்த வாதிகள் பெண்களுக்குச் சொத்துரிமை வழங்க வேண்டுமென்று கூறினால் சனாதனப் பேய்கள் பெருங் கூப்பாடு போட்டு 'பெண்களுக்குச் சொத்துரிமை வழக்கமா? அவ்வுரிமை வழங்கினால் உலகமே கெட்டுப் போய் விடும். பெண்கள் ஆண்களுக்கு அடங்கி நடக்கமாட்டார்கள். கலகம் கெட்டுப் போய் விட்டது. எல்லாம் கலிகாலக் கூத்து' என்றெல்லாம் கொல்லுகிறார்கள். சட்டஞ் செய்ய முனைந்தால் சூழ்ச்சி முறையால் அத்தடை ஊசலாடிப்போதால் அச் சுவழியில் சுபேட்ட சட்ட சபை அங்கத்தினராகவே பிள்ளைச் சட்டசபை உறுப்பினராகவோ பிரிட்ட விக்டோரியா பட்டது நாகளுக்குரிய சுல்லாக் சேல் வாக்கையுடையோடித்துக்கிறிருந்த வாதிகள் போலி யடையுடைய சிலத்துவிடுகின்றார்கள். இவ்வகை தீகக் குழுவினர் தாம் நடக்கைப் பெரிய சமய பந்தர்கள், தேசீயத் தலைவர்கள் என்று பெயரோடு மலை மிடங்களிலே தோன்றி நாம் நியாயமான வழக்கிலும், பொதுக் கூட்டங்களிலும் பேசவோட்டாது அரசாகளை மறியல் செய்யவும் துணியாதது தமிழ் நாட்டு மாதர்களின் தைரியக் குறைவும் உரிமைகேட்டலிலுள்ள குறைவும் ஆண மக்கள் (சீர்திருத்தவாதிகள்) பெண்களுக்குக் கூறும் உற்சாகக் குறைவும் பெருங் காரணங்களாகும். நாட்டிலே ஜீவகாருண்ய மதங்களென்று கூறிக் கொள்பவைகள் சொத்துரிமையை மகளிர்க்கு மறுத்துக் கொண்டு தன்னைச் சீவகாண்ய மதம் என்று கூறிக் கொள்ள தர்மசத்திற்கு (மத பக்தர்களுக்கு) ஒரு சிறிதும் வெட்கமில்லையா? இனி நாட்டில் எம்மதமும் தன்னை ஜீவகாருண்ய மதம் என்று சொல்லிக் கொள்ள விரும்பினால் பெண்களின் நியாயமான உரிமைகளை யெல்லாம் உடனே அளித்து விட வேண்டும். இன்றேல் மக்களுக்கு இத்துணை துன்பங்களாய் நிலைத்து வந்த கொடுஞ் செயலால் கொடுத்துள்ள மாதருரிமையும் மதமொழிப்பு வேலை மிலிருந்திலிடும். இவ்வாறு செய்ய வேண்டியது நீதிபேயாரு மென்று ஸரசு மகப்பாள்மையை யுடைய தக்கோர்கள் எவரும் சாற்றுவர். நீதி நெறியைக் கடைப்பிடித் தொழுகும் ஆதலோர் எவரும் பெண் உரிமையை மறுக்கும் மதத்தையும் சாஸ்திரங்களையும் சட்டத்தையும் ஒப்புவரல்.

நெய்தலிடம் ஒரு சிறிதும் கருணை காட்டாது மதச்சட்டத்தின் போராலும், ஜாதாங்கத்துச்சட்டத்தின் போராலும் பெண்ணுரிமைக்கு முறையில்லாதபடி அடிமைத்தளையில் இறைப்பதற்கிவிட்டு இன்னையதுணையல்ல விதவிலை விதவிலையல்லாது கூறியும், வேறுங்கள் எம்மையில் எங்காயும் தெய்வமாய்ப்போற்றி எழுதியிருப்பதாகக்கூறி சிலர் எழுதிதிருக்கிறார்கள். அவர்களுக்கு மாடிதுதே தேசீயக்கவிஞர் பாரதியார்

"பெண்ணுக்கு விடுதலையென்றிக்
கோர் கீதி
பிறப்பித்தேன் அதற்குரிய
பெற்றியே ளீர்
பெண்ணுக்குள் எவ்வகையிலும்
தெய்வமெச்சூல்
மனையளந்தெய்வமன்றே?
மறிவிலாட்டீரே?
விண்ணுக்குப்பறப்பதுபோற்
கனைதன் சொல்வீர்,
விடுதலையென்பீர்
காரணமென்னவென்பீர்
பெண்ணுக்கு விடுதலை
கீரிலையென்றும்
பெண்டாட்டிதனையடிமைப்
படுத்தலென்கிறீர்"

"பெண்குலத்தை முழுநடிலம்ப
படித்தலாமோ
பின்னிந்த வுலகினிலே
வாழ்க்கையில்லை"

என்று கூறியிருப்பவைகளெல்லாம் தேசீயப்புலிகள் என்போர்களும், ஜீவகாருண்யச்சமயத்துதச்சார்ந்தோர் எவரு கூறும் எல்லாம் ஆராய்ந்து பார்ப்பார்களாக.

ஜீவகாருண்ய மதங்கள் என்று கூறிக்கொள்பவைகள் பெண்களுக்குள்ள இயற்கை உரிமையாகிய கலப்புமணம், காதல்மணம், மறுமணம், விவாகரத்து, சொத்து முதலியவைகளையும், இன்னும்பலவற்றையும் மறுத்துவருவதுடன் இளமைமணத்தால் அவர்களை வருத்தியும், பொட்டுக்கட்டி விபசாரஞ்செய்யத்தூண்டிப் புண்ணும் பொடியும் பெற்று இவ்வுலகிடையே அவர்களை எரியாய் நரகில் வீழ்ந்து கவிக்கவும், சென்ற நவம்பர் மாதம் 16ம் நாள் வெளியான 'சண்டமாருதத்தில்' 'தேதாராத் என்னும்பார்ப்பான் தனது பத்து வயது மனைவியாகிய ராமகாளி என்னும் சிறுமியை புலவந்தமாகவும் இயற்கைக்கு விரோதமாயும்புணர்ந்து அதனால் பலதொல்லைகளுக்குட்பட்டு நோயுற்ற 4 அடி உயரமும், 44 பவுண்டு நிறையுமுள்ள அச்சிறுமி கடக்கமுடியாது தன் இருகால்களாலும் இருமுழங்கால்களாலும் நகர்ந்து சர்க்கார் ஆஸ்பத்திரிக்குவந்து சிகிச்சை செய்யவந்ததும் பின்னர் கேஸ் கலடைபெற்று, அவளைப்பலவந்தமாய்ப்புணர்ந்த புருஷனுக்குப் பத்துவருஷம் நியாயநியமவால் கடுங்காவல் தண்டனையடைந்தது போன்றசபவங்கள் பலவடைபெற்று வெளிக்குத்தெரியாமல் மறைந்துபோயிருக்கின்றன' என்று கூறியிருப்பதும் கவனிக்கத்தக்கது. இவ்வியாயக்கொடிய இளமைமணத்தினால் பதிக்கையறையிலே பல சிறுமிகள் உயிர்நீத்திருக்கின்றனர். ஜீவகாருண்ய மதங்கள் பெண்களுக்கு எத்துணையோடு கொடுமைகளும், பழமும் புரிந்துவருகின்றது.

ஒவ்வொரு காட்டின் உயர்வும் அக்காட்டிலுள்ள பெண்களின் காகரீகத்தைப் பொறுத்தே முடிவு செய்ய வேண்டும். எனவேதான் மேனாட்டறிஞர்களெல்லாம் பெண்ணுரிமை கடியும் இந்திய காட்டுமக்களையும், மதங்களையும் காகரீக நட்பமுணராத மிலேச்சர், அஞ்ஞான மதம் என்றெல்லாம் இழிவுபடுத்திக்கூறிவருகிறார்கள். மேயோ போன்ற பெண்மணிகள் பெண்ணுரிமைமறுக்கும் இந்திய காட்டு மதங்களையும், மக்களின் தன்மையையும் பற்றியும் இழித்துக்கூறி எழுதிய புத்தகங்கள் லட்சக்கணக்காய் விற்றுவருகிறது. நமது தேசீய வீரர்களும், வைதீகமதத்தலைவர்களும் மேயோபோரில் சரிவிழுந்தார்களே யொழிய அவர்கள் கூறிய குறைகள் உண்மைதானா? என்று ஆராய்ந்து அதை நீக்க முயற்சித்தார்களாவென்றால் ஒரு சிறிதுமில்லையென்ற பதிலேகிடைக்கும். உரிமையற்ற நடைப் பிணங்களாகிய மகளிர்களின் வயிற்றில் தோன்றிய ஆண்மக்கள் எவ்வாறு சுதந்தர உணர்ச்சியுடன் உரிமைபெற உயிரைத்தியாகஞ்செய்யக் கூடிய வீரர்களாய்வரக்கூடும். தேசீய விடுதலைக்காதலால் காந்தியவர்களால் 'காந்தீயம்' என்று இவ்விருபதாம் நூற்றாண்டில் சிறுவியபுதிய அஹிம்சாதர்மம் என்ற மதத்தின்படியொழுகும் ஜீவகாருண்ய சமயத்தார் ஆராய்ந்துபார்க்கட்டும். 'பெண்மக்கள் எவ்

தொடர்ச்சி 1/ம பக்கம பார்க்க.

நாம் என்ன சொல்லுகிறோம்.

(எஸ். வி. தோந்தி)

சுயமரியாதை இயக்கம் தோன்றிய சிறிது காலத்திற்குள் பெரும்பாலான மக்கள் அவ்வியக்கத்தின் உண்மைகளைத் தெரிந்து அதில் ஈடுபட்டிருக்கிறார்களென்பது யாவரும் அறிந்தவிஷயமாகும். அதேபோல் மக்களிடம் தெருக்கிப்பழகும் மிருகங்களில் சிலதும் தங்கள் தங்கள் சுயமரியாதையைக் காப்பாற்றிக்கொள்வதற்கு முன் வந்திருக்கின்றன. அஃதெதன்னவெனில், சுயமரியாதை மகாநாடு நடக்குமிடங்களில் சிலதிலும், சுயமரியாதைப் பிரசாரம் நடைபெறுமிடங்களில் சிலதிலும் நாய் முதலிய மிருகங்கள் தங்களுக்கும் சுயமரியாதை வேண்டுமென்பதைக் காட்டிக்கொள்ளுகின்ற முறையில் சுயமரியாதைவாக்கியம் பொறித்த போர்டுகளைத் தங்கள் மேல்போட்டுக்கொண்டு வருவதை நண்பர்கள் அறிவார்கள். ஆனால், அவைகளுக்குச் சுயமரியாதை உணர்ச்சியை மூட்டி, போர்டுகளையும் கட்டிவிடும் அறிவற்ற சோணகிரிகள் சுயமரியாதை இயக்கத்தைப் பழித்துக்கொண்டும், தங்கள் சுயமரியாதையை விலைக்கு விற்றுக்கொண்டும், அந்த மிருகங்களிலும் கேவலமான நிலைமையில் இருப்பதைக் கண்டு மிகவும் வருந்துகிறோம். கூடிய சீக்கிரத்தில் அக்கண்பர்கள் தங்கள் அறிவை விசாலப்படுத்தி மிருகங்களிலும் நாம் என்ன கேவலமா? என்பதை யோசித்துப்பார்த்து உணர்ச்சிகொண்டு சுயமரியாதையை தேடிக்கொள்ளுவார்களென்று நினைக்கிறோம்.

ஃஃ ஃஃ

உலகத்திலுள்ள எல்லா மதங்களிலும் இந்து மதமே சிறந்தமதமென்று சொல்லுவதற்கும், சுவாமி விவேகானந்தர் அமெரிக்கா சென்று அங்கும் இந்து மதமே சிறந்த மதமென்று நிலைநாட்டி வந்ததற்கும் காரணமென்ன வெனில், மற்ற மதங்களைக்காட்டிலும் அதிகக்கொடுமை செய்வதிலும், மூடப்பழக்க வழக்கங்களிலும், பகுத்தறிவற்ற தன்மையிலும் இந்து மதம் தலைசிறந்து விளங்குவதேயாகும்.

ஃஃ ஃஃ

மதம்பிடித்த யானையிடத்தில் என்ன எதிர்பார்க்கமுடியுமோ அதையேதான் மதத்தை நம்பி அதன் கொள்கைகளை அநுஷ்டித்துவரும் மக்களிடமும் எதிர்பார்க்க முடியும். இதன் உண்மைகளை சமீபகாலத்தில் நடந்த இந்து--முஸ்லீம் சண்டைகளிலும், சரித்திர சம்பந்தமாகப் பல மதசச்சண்டைகள் நடந்திருப்பதாலும், புராணங்களில் ஒவ்வொரு மதத்தை உயர்த்தியும், ஒவ்வொரு மதத்தைத் தாழ்த்தியும் எழுதிவைத்திருப்பதோடு அநேகரை மதத்தின் பெயராலேயே கொலைசெய்ததினாலுமே அறியலாகும்.

ஃஃ ஃஃ

விதவை மணம், விவாகரத்து, காதல்மணம் போன்ற புனிதமான கொள்கைகளை எதிர்ப்பதற்குக் காரணமென்னவெனில், இதுவரையும் அநேகபெண்களிடம் விபசாரித்தனமாக காமஇன்பத்தை அநுபவித்துவந்த காமாந்தகர்களுக்கும், அறிவீனர்களுக்கும் மேற்சொல்லிய விதவைமணம், விவாகரத்து, காதல்மணம் போன்றவைகள் அதிக இடஞ்சலாக இருக்குமென்ற ஒரே எண்ணத்தைத் தவிர வேறில்லை. எந்த உண்மையான யோக்கியனும் மேற்சொல்லிய விதவைமணம், விவாகரத்து, காதல்மணம் போன்ற புனிதமான கொள்கைகளுக்கு ஒருபோதும் மனத்தினாலும் கூட எதிர்ப்பு நினைக்கமாட்டார்களென்பது மாத்திரம் உறுதி.

ஃஃ ஃஃ

காரச்சி காங்கிரசுக்குப் பின்பு சுயமரியாதை இயக்கம் என்று ஒன்றிக்க வேண்டிய அவசியமில்லை என்று அதிகார் பேசிக்கொள்ளுகிறார்கள். அதற்கு அவர்கள் சொல்லும் காரணமெதுவெனில், காராச்சிக் காங்கிரசின் தீர்மானமும், சுயமரியாதை இயக்கத்தின் கொள்கைகளும் ஒன்றாக இருக்கிறதென்றும், ஆனதால் இனி சுயமரியாதை இயக்கம் காங்கிரசுடன் சேர்ந்து வேலை செய்யலாமெனச் சொல்லுகிறார்கள். அப்படியானால், அதை நாமும் வரவேற்கத்தான் செய்கிறோம். காராச்சி காங்கிரசின் தீர்மானமும், சுயமரியாதை இயக்கத்தின் கொள்கைகளும் ஒன்றாக இருக்குமானால் ஏன் சுயமரியாதை இயக்கத்துடன்காங்கிரஸ் சேர்ந்து கொண்டுவேலை செய்யக்கூடாதுஎன்று கேட்கும்போது அக்கண்பர்கள் மௌனம் சாதிக்கிறார்கள் இல்லையேல் தத்துவார்த்தமாகப்பேசுகிறார்கள். இந்த நயவஞ்சக நெஞ்சமுடையோர்களைவஞ்சகமாகப் பேசுமந்திரம்தானென்ன? ஆனால், இவர்களின் வஞ்சக நெஞ்சத்தையும், எமாற்றும்தன்மையையும் தெரிந்துகொள்ளாத சுயமரியாதை வீரர்கள் இக்காலத்தில்லில்லை. என்றேநாம் துணிந்து கூறுவோம். யார் யார் எவ்வளவு வஞ்சகமாகப்பேசினாலும்உண்மைச் சுயமரியாதை வீரர்கள் தன்மையை உணர்ந்து கொள்ளுவார்களென்றுநம்புகிறோம். அவரவர்களுக்குத்தேவையான பலனைவிரும்பியும், சக்திக்குத்தக்கபடியும், இஷ்டம்போலும்காணிக்கை, உண்டியலுபணமுதலியவைகள்செலுத்துவதாகபிரார்த்தனை செய்துகொண்டு கடவுளேவணங்கவேண்டுமென்பது புராணசம்மதமும், தற்காலஉலகவழக்கமுமாகும். அப்படியானால், கடவுளேஇந்த காட்டிலில்லாது ஓடிப்போகவேண்டுமெனவிரும்பி அதற்குக்காணிக்கையாக அக்கட்டவுளின்உருவம் என்றுசொல்லப்பட்டகல்சிலைகளையும், செம்புவிக்கிரகங்களையும் கோயிலில்இல்லாதபடிபெயர்த்து வெளியேஎரிந்துவிடுகிறேன் என்றுவணங்கிஎல்லாதடியார்களுக்கு(அஸ்திகர்களுக்கு) கோபம்வருவானேன்? மடத்தனமாகஎனக்கு அதுவேண்டும், இதுவேண்டும் எனபிரார்த்தித்துக்கொண்டு அதற்குக்காணிக்கையாகரூபாய்தருகிறேன், கோவில் கட்டுகிறேன், குளம்வெட்டுகிறேன், ரதைசெய்துவைக்கிறேன், ரதம்செய்துவைக்கிறேன், வாகனம்செய்துவைக்கிறேன், காவடிஎடுக்கிறேன், காவடியாடுகிறேன், அக்கினிச்சட்டிஎடுக்கிறேன். தலைமயிர்க்கொடுக்கிறேன், உபவாசமிருக்கிறேன் என்றும், இன்னும் என்னென்னவோஇழிவான செயல்களெல்லாம் செய்கிறேன்எனச்சொல்விக்கொண்டும், செய்துகொண்டும் வரும்போது, அறிவுடையஒருமனிதன்கடவுள்தொலையட்டும்; அதற்குக்காணிக்கையாக அதன்உருவம் அழியட்டும்என்றுசொல்லுவதிலும், செய்வதிலும்என்னகுற்றமுண்டு? மேலும், அரசாங்கத்தார் சக்திக்குத் தக்கபடியும், இஷ்டம்போலும் பிரார்த்தனைசெய்துகொள்ளலாமென்பதில் இதுவும்சேர்ந்ததுதானே. கடவுளே செருப்புக்காலால்மிதித்ததாகவும், கல்லைக்கொண்டெரிந்ததாகவும் புராணங்களே சாதிகூறிசொல்லுவதால், நாமும் கடவுள் தொலையட்டும், அதன்உருவம் அழியட்டும்என்று சொல்லுவதிலும், செய்வதிலும்குற்றமேஇல்லை.

ஃஃ ஃஃ

மஹாத்மா காந்தியவர்கள் "ராமராஜ்ய" மே வேண்டுமென்பதுஉண்மையானால்அவர் இப்பொழுதே தற்கொலைசெய்து கொள்ளவேண்டியது அவசியமாகும். ஏனெனில், அவர் என்னமஹாத்மாபட்டம் வாங்கினாலும்சரி, அதற்குமேற்பட்ட பட்டம்வாங்கினாலும்சரி அவர்ஒரு அசல்சூத்திரனேயாகும் (வைசியனென்று சொல்லிக்கொள்ளலாம் அச்சாதியேகிடையாது) அப்படியிருக்க அவரைப்பெரியதபசியென்றும், நீதிக்கதரிசி என்றும், பெரிய மகாத்மாவென்றும்பேசிக்கொள்வதால் அவர்விரும்பும் "ராமராஜ்யத்தில்" சூத்திரனுக்கு அப்பேற்பட்டமகிமையோ, பட்டமோ, பதவியோ இருக்கக்கூடாதென்பது நடத்துபோனவிஷயமாகும். அவர்விரும்பும் "ராமராஜ்யம்" வந்தால் பார்ப்பனர்கள் கட்டாயமாக அவரைக்கொலை செய்யத்தான் செய்வார்கள். அந்தஉண்மைகளைஎல்லாம்தெரிந்தும் "ராமராஜ்ய" மேவேண்டுமென்று கேட்பாரேயானால்இப்பொழுதே தற்கொலைசெய்துகொள்ளவேண்டும். இல்லையேல் "ராமராஜ்யம்" என்றகூச்சலிவிட்டுவிடவேண்டும்.

ஃஃ ஃஃ

சுயராஜ்யம் வந்தால் சமூகசீர்திருத்தத்தைஒரு சிறு சட்டத்தின்மூலம் சரிப்படுத்திவிடலாமென காங்கிரஸ் கட்சியார்மொழிகின்றனர். சமூகசீர்திருத்தம்வந்தால்,அரசியல் சீர்திருத்தம்தானேவருமென்ற சயமரியாதைக் கக்ஷியார்சொல்லுகின்றனர். இவை இரண்டும் வேண்டிது அவசியமென்பதை எல்லோரும் ஒப்புக்கொள்ளுவார். ஆனால், முதலில் வேண்டியது எது என்பதுதான் கேள்வி. சுயராஜ்யம் என்ற அழகிய கோட்டையை அடைய வேண்டியது அவசியம்தான். ஆனால், அக்கோட்டையைச் சுற்றி நாலுபக்கமும் அடர்ந்த முள்புதர்கள் [சமூகசீர்கேடுகள்] இருக்கின்றதே, சுயராஜ்யம்என்ற கோட்டைக்குள்புகவேண்டுமாயின் அம்முள்புதர்களை (சமூகசீர்கேடுகளை) எல்லாம் வெட்டி (சமூகசீர்திருத்த மென்னும்) பாட்டை போட்டாலன்றி அக்கோட்டைக்குள் புக முடியுமா என்பதை வாசகர்களே யோசித்துப் பாருங்கள். ஒருவாறு ஆகாயவிமானத்தின் மூல்யமாகப் போய்விடலாம் என்று சொன்னாலும் அவை எல்லோருக்கும் சாத்தியமாகாதே? முதலாளி வர்க்கத்தார்களுக்கு மட்டும் ஒருவாறு சாத்தியப்படலாம் (இப்போது அப்பேற்பட்ட சுயராஜ்யம் தான் கேட்கப்படுகின்றன) முதலாளி வர்க்கத்தார்களுக்கு சாத்தியப்படும்படியான சுயராஜ்யம் நமக்கு எதற்கு? ஆனதினால், சமூகசீர்திருத்தம் வந்தால் அரசியல் சீர்திருத்தம் தானே வருமென்பதில் கொஞ்சமும் குற்றமில்லை!

ஃஃ ஃஃ

குழந்தை இல்லாதவர்கள் ராமேஸ்வரம் போய்ப் பார்ப்பனர்களைக் கொண்டு காகப்பிரதிஷ்டை செய்து பிரசதோஷம் நிவர்த்தி செய்துகொண்டு அவர்களுக்குத் தானங்கொடுத்தால் குழந்தை பிறக்குமென்று சொல்லப்படுகிறது. இது உண்மையானால், ராமேஸ்வரத்திலுள்ளவர்களுக்கும், குறிப்பாக பார்ப்பனர்களுக்கும் குழந்தை இல்லாது போனால் எங்கேபோய் என்ன செய்வது? அங்குள்ளவர்களுக்குக்குழந்தையில்லாது போகுமானால் அதன் காரணமென்ன? அதைபோய் சகலமும் சரிவரச் செய்தவர்களுக்குக் குழந்தை பிறவாது போவதற்குக்காரணமென்ன? ஆங்கிலேயே சத்திரம் கட்டி, தானங் கொடுத்துவந்தவர்களுடைய சந்ததியே இல்லாது போனதற்குக் காரண மென்ன? ராமேஸ்வரம் போய் சகல கிரிகைகளும் முடித்து விட்டு யாருடனும் சேர்கை இல்லாது போனாலும் குழந்தை பிறக்குமா? என்று கேட்கின்றோம்.

ஃஃ ஃஃ

ஹெபிரான் தாயில்லாப் பள்ளிக்குட்டிகளுக்கு முலை கொடுத்து ரக்ஷித்ததோடு, அவைகளை மனிதராக்கி

தொடர்ச்சி 16ம் பக்கம் பார்க்க.

உதிர்ந்த மலர்கள்.

அறிவுவிடுதலை இயக்கமும் திரு. முஹம்மத்நபி அவர்களின் நன்மொழிகளும்.

அ. இ.

அறிவானது சீனதேசத்திலிருந்த போதிலும் (அஃதாவது இவ்வுலகின் எந்த மூலையிலிருந்த போதிலும்) அதைத்தேடிச்செல்லுங்கள்.

ஃஃ ஃஃ

தொட்டிலிலிருந்து கட்டைகருச் செல்லுமட்டும் அறிவை நாடிச்செல் லுங்கள்.

ஃஃ ஃஃ

அறிவுகிடைக்கக்கூடிய வழியை நாடிச்செல்பவன் ஆண்டவனுல் சுவர்க்கத்தை நோக்கி நடத்தப்படுவான். மேலும் அறிவில்லாத ஒருவணக்கக் காரனைக்காட்டிலும் கற்றறிந்தவனுடைய மேன்மையானது எல்லா நட்சத்திரங்களைக்காட்டிலும் பூரணச் சந்திரனது மேன்மையுற்றதை ஒத்திருக்கிறது.

ஃஃ ஃஃ

கற்றோரின் வசனங்களுக்கு செவி சாய்ப்பதும், அறிவுநூலின் உண்மை களைப்பிறருக்குப்போதிப்பதும் மதானுஷ்டானங்களைக்காட்டிலும் சிரேஷ்டமானதாகக்ராணப்படுகின்றன.

ஃஃ ஃஃ

அறிவைப் பெறும்பொருட்டுத்தன் வீட்டைவிட்டு வெளிப்படுவோன் ஆண்டவன் பாதையில் யாத்திரை செய்கிறான்.

ஃஃ ஃஃ

அறிவையடைய வேண்டுவது ஆணேயாயினும், பெண்ணேயாயினும் ஒவ்வொரு முஸ்லிமின்மீதும் கடமை யாயிருக்கிறது.

ஃஃ ஃஃ

அறிவைத்தேடிக்கொள்க. அறிவு எவனை அவ்வறிவானது நன்மை தீமை இன்னதென உணர்ந்து கொள்ளும்படி செய்கின்றது. அதுசுவர்க்கம்புகுதற்குவேண்டிய வழியைத் தூயக்குகின்றது. தனித்த பாலைவனத்தில் அவ்வறிவு நமக்கு நண்பனாயும், எதிரியாயிருக்கும்போது நமக்குத் துணைவனாயும்நேயர்களில்லாதபோது நமக்கு நண்பனாயுமிருக்கிறது. போரானந்தமடைவதற்குப் பேருதவி புரிகின்றது. துன்பம் நேருங்கால் நம் துயரத்தை மாற்றுகின்றது. நண்பர்களுக்குன் ஓர் ஆபரணமாயும், எதிரிகளின் முன்னே ஒருகவசமாயும் அவ்வறிவு அமைந்திருக்கிறது.

ஃஃ ஃஃ

அறிவைக்கொண்டு மனிதன் நன்மையில் உச்சஸ்தானத்தையும் அந்தஸ்தின் உயர்பதவியையும் அடைகிறான். இவ்வுலகில் அரசர்களுடன் அந்யோன்யமாகிறான், மறுவுலகில் சோர்ன்பத்தில் பரிபூரணத்தையடைகிறான்.

ஃஃ ஃஃ

அதிகமான தொகையைகாட்டிலும் அதிகமான அறிவே சிலாக்ய மானதாயிருக்கிறது.....ஆதலின் இராமுழுவதும் எண்ணம் புரிவதைக் காட்டிலும் அந்த இரவில் ஒருமணி நேரம் அறிவு புகட்டுவதானது அதிக நன்மை பயக்கக்கூடியதாயிருக்கிறது.

ஃஃ ஃஃ

ஓ மனுஷ்ய! நீர் எமன் தேசத்தில் ராஜ்ய பரிபாலனம் புரியும்போது யாருடைய சட்டதிட்டங்களைப்பின் பற்றி யொழுகுவீர் என்று முகமத் நபி அவர்கள் கேட்டார்கள். அதற்கு அவர் "குர் ஆன் ஷரீபில் கூறப்பட்டிருக்கும் சட்டதிட்டங்களைப்பின் பற்றி நடப்பேன்" என்று மறுமொழி கூறினர். ஆனால் உமக்கு வேண்டிய ஏதேனுமோர் விஷயம் குர்ஆன் ஷரீபில் காணப்படாவிடின் பிறகு என் செய்வீர்?' என்று முஹமத்நபி அவர்கள் வினவினர்கள். அதற்கு அந்த மனுஷ்ய, 'ஆண்டவனது திருத்தூதர் வர்களைப்பின்பற்றி நடப்பேன்' என்று விடைபகர்ந்தார். மறுபடியும் நபிகள் நாயகம் அவர்கள் 'அந்த த்திருத்தூதருடைய உதாஹரணத் திலும் உமக்கு வேண்டியவழி புகப் படாவிடின் அப்போல் என் செய்வீர்? என்று வினவினர்கள். அதற்கு அவர் யாரஸுலுல்லாஹ் பிறதுயாள் என்னுடைய சொந்தமான பதந்தறி வையும், நியாயமான முறையையும் பின்பற்றுவேன்.' என்று சற்றும் தயங்காமல் விடைபகர்ந்தார்.

ஃஃ ஃஃ

பகுத்தறிவைக்காட்டினும் மேலான தையாவது அல்லது அதைக்காட்டினும் முழுப்பரிபூரணமானதையாவது, அல்லது அப்பகுத்தறிவைக் காட்டினும் மிக அழகானதையாவது ஆண்டவன் இவ்வுலகில் யாதொன்றையும் படைக்கவில்லை. இப்பகுத்தறிவின் பயனுகத்தான் ஆண்டவன் நமக்கு நன்மையை அளிக்கிறான். காரியாகாரியங்களில் நன்மை தீமையும் இத்தப்பகுத்தறிவினுல் தான் உண்டாகின்றன. மேலும் ஆண்டவனுடைய கோபமும் சம்முடைய பகுத்தறிவைச்செவ்வனே உபயோகிக்காததனுல்தான் உண்டாகின்றது. இன்னும் இதன் காரணமாகத்தான் நமக்குச்சன்மானமும் தண்டனையும் கிடைக்கின்றன.

ஃஃ ஃஃ

நிச்சயமாகவே ஒருமனிதன் ஐந்து வேளை தொழுதுகொண்டும், வருஷ மொன்றுக்கு மூப்பது நோன்பையும் நோற்றுக்கொண்டும், எல்லாவிதமான தானதர்மங்களைச்செய்து கொண்டும் மக்காவுக்குச்சென்று ஹஜ்ஜு செய்தும், இன்னும் இப்படிப்பட்ட வேறெய நற்செய்கைகளே யெல்லாம் செய்து கொண்டும் இருக்கலாம். ஆனால் அவன் தன்னுடைய காரியங்களில் எத்துணை பகுத்தறிவைச்செலுத்து கிறானோ அதற்குத்தக்கவாறு தான் சன்மானத்தையும் பெற்றுக்கொள்ளுவான்.

ஃஃ ஃஃ

(மனிதகோடிகளுக்கு யாதொரு விதமான) பிரயோஜனத்தையும் தராமாட்டாத அறிவானது ஆண்டவன் பாதையில் யாதொருவிதமான தர்மமும் செய்யாத புதையலே ஒத்திருக்கும்

ஃஃ ஃஃ

குறிப்பு;—இதில் கூறப்பட்டுள்ள வைகளில் சில நமக்கு உடன்பாடல் லாததாயிருப்பினும் பதின்மூன்று ண்டுகளுக்கு முன்னர் திரு. முகமத் நபி பகுத்தறிவிற்கு ஈய்ந்த பெருமையை நினைந்து போற்றவேண்டிய திருக்கிறது. இல்லாத்திற்கும் பகுத்தறிவிற்கும் சம்பந்தமிகலேயென்று கூறும் முல்லாக்கள் இதைஉணர்ந்து பார்ப்பார்களாக.

"காதல் கலாசாலை"

சமீபத்தில் பாரிஸில் சாம்ஸ் எலிசே என்ற இடத்திலுள்ள ஓர் வீட்டை போலீசார் பரிசோதனை செய்தனர். இவ்வளவு நாள்வரை அவ்விடம், 'காதல் கலாசாலை'யாக விளங்கியது. அதற்கு ஹென்றி லாவேஜ் என்பவர் தலைவராக விளங்கினர். போலீசார் அவ்விடத்தை பரிசோதனை செய்யச் சென்றதும் ஹென்றிலாவேஜ் அவ்விடத்தைவிட்டு நழுவி, பெல்ஜியத்திற்கு சென்றுவிட்டார். ஷி 'கலாசாலை' யிலிருந்தபோது அவர் உலகத்தில் பலவிடங்களிலுமுள்ள ஆடவர்களுடனும், பெண்களுடனும் கடிதப்போக்குவரத்து நடத்தி வந்தார். அக் கலாசாலையிலுள்ள பதிவு புத்தகத்தில் 800 மாணவர்களின் பெயர்கள் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. இதற்கு மூன்றரும் அங்கு பல மாணவர்கள் பயிற்சி பெற்றிருப்பதாகத்தெரிகிறது. ஹென்றிலாவேஜ் 5 ஆண்டுகளுக்கு முன் மேற்படி கலாசாலையை ஸ்தாபித்தார். பிறகு அது சம்பந்தமான கடிதப்போக்குவரத்துகளே சமாளிக்க சற்றேறக்குறைய 100 குமாஸ்தாக்கள்வரை நியமிக்கவேண்டியதாயிற்று! அவர் 'காதல் அமிர்தம்' என ஓர்மருந்து தயாரித்து சோவில் வைத்து, ஆடவர்களுக்கும், பெண்களுக்கும் கொடுத்து வந்தார். அம்மருந்தைபோலீசார் பரிசோதனை செய்ததில், அது கொடிய ஔஷதவிஷமெனத்தெரிந்தது. அந்த மருந்தை விடாது உபயோகிப்பவர்களில் 100க்கு 90 பேர்கள் வீதம் நிச்சயமாக மாண்டுவிடுவார்களென ரசாயன நிபுணர் ஆராய்ச்சி செய்து கூறியிருக்கிறார். சென்ற 1 வருஷத்தில் பிரிட்டிஷ் தீவுகளிலுள்ள 100 பேர்களுக்கு அவர் ஷி மருந்தை கொடுத்திருக்கிறாராம். அவருடைய மருந்தைப் பற்றிய விளம்பரங்கள் இன்னும் பத்திரிகைகளில் வெளியாகி வருகின்றன. சில வருஷங்களுக்கு முன் அவர் இங்கிலாந்திலும் மேற்கூறிய வாறு ஓர் சங்கம் ஆரம்பித்து தனிமையாக தவிக்கும் காதலர்களே சேர்த்து லக்ஷ உதவி செய்துவந்தாராம்.

"தமிழ்நாடு"

இந்திய கத்தோலிக்கர்களுக்கு ஐயவினு.

பெங்களூர் S. L. சிங்கராயன் வரைவது.

ஐயன்மீர், நமது கத்தோலிக்கு திறில்லாத தலைவர்கள் அல்லது ஆண்டவர்கள், பெங்களூரிலுள்ள கத்தோலிக்கர்களை ஐந்தாபங்கு விசாரணையாக வகுத்திருக்கிறார்கள். இதில் மூன்று பங்கைச்சார்ந்த இந்திய கத்தோலிக்கர்கள் தங்கள் பங்குகோவில் திருநாளைக்கொண்டாட வருஷா வருஷம் ஏழைப்பாமர மக்களிடம் கட்டாய வரிவிதித்து வசூலித்த தொகையைக்கொண்டு அலங்கார புஷ்பவிமானங்கள் ஜோடித்து வடக் கயிறிட்டு இழுப்பதும், சப்பரங்கள் ஜோடித்து ஆண்கள் கூடி தோளில் சுமந்து செல்வதும், கத்தோலிக்கப் பெண்கள் ஒன்றுகூடி ஆடையாபரணங்களால் தங்களை அலங்கரித்துக் கொண்டு தேருக்குப்பின்புறம் வரிலசக்கிரமமாக வெகு ஒழுங்காய் நடந்து ஊர்வலம் வருவதும், தேருக்கு முன் மேளதாள வாத்தியச்சருவிகளுடன் பஜனைமுழங்க பாணவேடிக்கை, மத்தாப்பு, சுருன்பாணம், அவுட்டுகளுடன் இரதோற்சவம் கோவில் சேர்ந்ததும் அதில் நிகழ்ந்தேறிய பறவைபோன்ற கிளி, புரு, அன்னப்பட்சி, பூச்செண்டு இவைகளைப் பறிக்க நிறுத்துவர்கள் தேர்கள்மேல் விழுவதும் அதைத்தடுக்க சிலவாலிபர்களும், போலீஸ் புலிகளும் தடி கொண்டுத்தாக்க அப்படி அடியுண்ட ஜனங்கள் குய்யோ! முறையோவென கூச்சலிட்டு வீடுதிரும்புவதும் அந்த வருஷமும் இதேமாதிரியாயும் அதற்கும் சிறிது மேலாயும் வழக்கமாக நடந்து வருவதை வாசித்தறிந்த பெரியார்கள் கண்கூடாகக்கண்டும் பொருட்படுத்தாது வாளாவிருப்பது நடுநிலையாகுமா? வெள்ளைக்கத்தோலிக்கரைச்சார்ந்த இரண்டு கோவில்களிலும் நடந்தேறும் விழாகாட்சிகளில் இவ்விதஅனுச்சாரங்கள் கடப்பதாக எனது மூப்பது வருட அனுபோகத்தில் காணவில்லை. ஆதலால் கத்தோலிக்கு வேதம் ஒன்றா? அல்லது இரண்டா? ஒன்றுனில் வெள்ளைக் கத்தோலிக்கர்கள் செய்யாத அட்டூழியங்களை கருப்புக் கத்தோலிக்கர்கள் அத்தியாவசியமாய் கடவுள் பெயரால் இப்படிச்செய்யானேன்? கத்தோலிக்கு வேதம் இரண்டானுல் யாருடையது சரியென்பதை உண்மைக்கத் தோலிக்கு வேதமறிந்த கனவான், எனது சந்தேகத்தை நிவர்த்திக்க முன்வரவேண்டுமென்று பணிவுடன் கேட்டுக்கொள்ளுகிறேன்.

மோட்சமென்பது பார்ப்பன வயிறு—மறு பிறப்பு என்பது கிறுகிறுப்பே-கடவுளை வணங்கத் தாசகர் ஏன்?—சுயமரியாதை பெற்றால் சுயராஜ்யம் பெறலாம்,

ஈ. வெ. ரா,

ஓ முத்தையா
ாலக அறக்கட்டளை

மதநடுநிலைமையின் ஆபத்து.

இரண்டு ஆச்சாரியார்கள்.

தனி உரிமையும் மதமும் வேண்டுமாம்.

(தேசீயத்துரோகி)

நாசிக்கில் உள்ள கோயிலில் பிரவேசிக்கவும், "ராமகுண்டம்" என்னும் தீர்த்தக்குளத்தில் குளிக்கவும் தீண்டாதார்கள் சத்தியாக்கிரகம் செய்து வருகின்றனர். இச்சத்தியாக்கிரகத்தை வைதீக இந்துக்கள் தடுத்து வருகின்றனர். இதைப் பற்றி "இந்திய சனாதன வைதீக சபை"த் தலைவர், திரு. காசி கிருஷ்ணமாச்சாரியார் என்பவர் ஒரு அறிக்கை விடுத்திருக்கிறார். அவ்வறிக்கையில்,

> "நாசிக்குக்காக மிஸ். மேயோவை மறுபடியும் இந்தியாவின் மீது கிளப்பி விட்டுவிடாதீர்கள். சனாதன தர்மிகளும், பஞ்சமர்களும் சுயநலக்காரர்களின் வார்த்தைகளைக் கேட்டு ஒருகாரியத்தையும் செய்யவேண்டாமெனக் கேட்டுக்கொள்ளுகிறேன். சத்தியாக்கிரகத்தின் நோக்கம், "சத்தியத்தைக் காப்பதே யாகும்" "ராமகுண்ட தீர்த்தம்" பொதுச் சொத்தல்ல. அது பொது சொத்தாக இருந்தால் தான், தீண்டாதார்களும் ஜாதி இந்துக்களைப் போல அதில் உரிமைகொண்டாட முன் வரலாம். காங்கிசும் மற்றும் பொறுப்புள்ள ஸ்தாபனங்களும், மூலாதார உரிமைகளை ஒப்புக் கொண்டிருக்கின்றன. சொந்த அதிகாரமுள்ள சொத்துக்களையும், தர்மஸ்தாபனங்களையும், பொதுச் சொத்துக்களாக மாற்ற மேற்படி ஸ்தாபனங்கள் ஒப்புக்கொள்ள முடியாது"

என்ற விஷயங்கள் காணப்படுகின்றன. இதிலிருந்து காங்கிரஸ் மத நடுநிலைமையின் ஆபத்தை உணரலாம். எத்தக் கோயில்களும், தருமஸ்தாபனங்களும், ஒருவர் அதிகாரத்திலேயோ, அல்லது ஒரு கமிட்டியின் அதிகாரத்திலேயோ அடங்கிதான் இருக்கும். அப்படிப்பட்ட ஸ்தாபனங்களில் மற்றவர்கள் பிரவேசிக்க உரிமையில்லை என்பதே திரு. ஆச்சாரியாரின் வாதம். இது தான் காங்கிரசின் நடு நிலைமைக்கும் வியாக்யானம். இந்நிலைமையில் தீண்டாதவர்கள் எப்படி பொது ஸ்தாபனங்களில் சமத்துவம் பெற முடியும்?

"மிஸ். மேயோவைக் கிளப்பி விடவேண்டாம்" என்று திரு. ஆச்சாரியார் கூறுகிறார். யார் மிஸ். மேயோவைக் கிளப்பிவிடுகிறவர்? ஒரு குளத்தில் தீண்டாதவர்களும் குளிப்பதற்காகத் தடைகூறும், திரு ஆச்சாரியார் போன்றவர்கள் மிஸ். மேயோவைக் கிளப்பி விடுகிறார்களா? அல்லது குளத்தில் குளிக்க எங்களுக்கும் பாத்தியம் வேண்டும் என்று கேட்கின்ற தீண்டாதவர்கள் கிளப்பி விடுகிறார்களா? நன்றாய் யோசித்துப்பாருங்கள். சத்தியாக்கிரகம் என்றால் சத்திபத்தைக் காப்பாற்றுவதாம்! எது சத்திபம்? நாசிக்கோயிலில் ஜாதி இந்துக்கள் மாத்திரம் செல்ல உரிமையிருப்பது சத்தியமா? "ராமகுண்டம்" என்னும் குளத்தில் ஜாதி இந்துக்களுக்கு மாத்திரம் குளிக்க உரிமையிருப்பது சத்தியமா? இவைகளில் தீண்டாதார்கள் பிரவேசிக்காமலிருப்பது சத்தியமா? திரு, ஆச்சாரியார் கருத்துப்படி தீண்டாதவர்கள், தீண்டாதவர்களாகவே ஒன்றிலும் சுதந்திரம் இல்லாமலிருப்பதும், ஜாதி இந்துக்கள் வழக்கமாகத் தங்களுக்குள்ள ஏகபோக உரிமைகளை அனுபவித்துக் கொண்டிருப்பதுந் தான் சத்தியம் என்று கருதுகிறார் எனத் தெரிகிறது.

இது சத்தியமானால், இதற்காக சத்தியாக்கிரகமானால், இதை மற்றொரு வருணச்சிரம தாமம் என்பதில் என்ன தவறு இருக்கிறது? ஆகையால் இத்தகைய சத்தியம் வேண்டவே வேண்டாம். இன்னும் எத்தனை மேயோக்கள் வந்தாலும் வரட்டும், அதைப்பற்றிக் கவலையில்லை. வேண்டுவது எல்லாருக்கும், எல்லா விடங்களிலும் சமவுரிமை தான். கோயில்களும், தரும ஸ்தாபனங்களும், சிலருடைய ஆதிக்கத்திலிருந்தாலும் அவைகள் பொதுச்சொத்துக்கள் தான். அவைகளைப் பொதுச் சொத்துக்களாக ஆக்கித் தேசத்திற்குப் பயன் படச்செய்ய வேண்டுமென்பது தான் நமது கொள்கை. இதற்குத் தற்கால நிலைமையில் சத்தியாக்கிரகம் சிறிதும் பயனளிக்காது.

மதத்தைக் காப்பாற்ற வேண்டும்.

நமது சனாதன வைதீக நண்பர், திரு. எம். கே. ஆச்சாரியார் அவர்கள் ஒரு அறிக்கை வெளியிட்டுள்ளார் அதில்,

> "அரசாங்கத்தார், மதவிஷயங்களில் நடுநிலைமை வகிக்க வேண்டும் என்பதை ஞாபகத்தில் வைத்திருப்பார்கள் என்றும், இதைப் பற்றி வட்டமேஜை மகாநாட்டில் வற்புறுத்த வேண்டிய அவசியமில்லை என்றும், லார்ட் இர்வின் இந்தியாவை விட்டுப் புறப்படுமுன் பாரத தர்ம மகா மண்டலத்திற்கு உறுதி கூறியதாகத் தெரிகிறது. ஆனால், சாரதா சட்டம் சம்பந்தமாக அவர் நடந்து கொண்டதிலிருந்து இவ்வுறுதிமொழி பயனற்றதாகும். சாதாரண ஐரோப்பியர்களுக்கும், நவீன நாகரிகத்தில் உள்ள இந்தியர்களுக்கும் "மதம்" என்பதன் கருத்து வைதீக இந்துக்களுக்கு இருப்பது போல் தோன்றுவதில்லை. "மதத்திற்கும் கல்யாணம் போன்ற சமூக விஷயங்களுக்கும் சம்பந்தம் இருக்கக்கூடாது" என்று அவர்கள் கூறுகின்றனர். இவர்கள் எது மத விஷயம்? எது மத விஷயம் அல்ல வென்பதில் தங்கள் அபிப்பிராயத்தை வைதீக இந்துக்களின்மேல் பலவந்தமாகச் சுமத்த அநுமதிக்கக் கூடாது. இதே மாதிரி காங்கிரசும் மத சுயேச்சை அளிப்பதாக உறுதி கூறியிருப்பதும் பிரயோஜனமற்றதாகும். காந்திக் கட்சியினர் "ஆலய சத்தியாக்கிரகம்" என்று கூறுவதைக்கொண்டும், "தீண்டாமையை ஒழிப்பதாகக்" கூறுவதைக்கொண்டும் மத விஷயத்தில் அவர்கள் நடு நிலைமை வகிக்கும் விதம் விளங்குகின்றது..... மேல் நாடுகளில் மதத்தையே ஒழித்து விட்டனர். இந்தியாவிலும் ஒழிக்க முயலுகின்றனர். அதற்கு நாம் இடங்கொடுக்கக் கூடாது"

என்று கூறியிருக்கிறார். இதிலிருந்து சீர்திருத்த விஷயத்தில் வைதீகர்களின் மனப்பான்மை எப்படி இருக்கிறது என்ற விஷயத்தைத் தெளிவாய் அறிந்து கொள்ளலாம்.

அரசாங்கத்தார் சாரதா சட்டத்திற்கு ஆதரவு அளித்து விட்டதனால், அரசாங்கம் மத நடுநிலைமை வகிக்கவில்லையாம்.

கல்யாணம் போன்றவைகள் மத விஷயங்களாம். அப்படியானால், சாப்பிடுவது, குளிப்பது, பல்விளக்குவது, ஒன்றுக்குப்போவது, வெளிக்குப்போவது முதலியவைகளும் மத விஷயங்கள்தான்போலும். இவைகளுக்கும் தான்சாஸ்திரங்களில்விதிகள் கூறப்படுகின்றன. "மற்ற வருணத்தாருடைய சொத்துக்கள் எல்லாம் பிராமணருக்கே சொந்தமானது" என்பது பார்ப்பனர்களின் ஸ்மிருதிக்கொள்கை. ஆகையால் இதுவும் மத விஷயமானதால், பார்ப்பனர்கள் யார் வீட்டில் கொள்ளையடித்தாலும், யாருடைய சொத்துக்களைக் கவர்ந்தாலும் அவர்களைப்பிடிக்கவோ விசாரிக்கவோ, தண்டிக்கவோ பொது ஜனங்களுக்கும், அதிகாரிகளுக்கும் அரசாங்கத்திற்கும் அதிகாரமில்லை என்றும் சொல்லலாம். இதுவும் மத விஷயந்தானே! இவற்றில் எல்லாம் அரசாங்கத்தார் நடு நிலைமை வகிக்க வேண்டும் என்று சொல்லுவது போலத்தான் சமூகச்சீர்திருத்த சட்டங்களுக்கு அரசாங்கத்தார் ஆதரவு அளிக்கக்கூடாது என்று சொல்லுவதும், ஆதரவு அளித்தால் அரசாங்கத்தார் மதத்தில் தலையிட்டு விட்டார்கள் என்று சொல்லுவதும் ஆகும்.

அடுத்தபடியாக மதம் என்பதன் கருத்து வைதீக இந்துக்களுக்குத் தோன்றுவதுபோல் நவீன நாகரீகமுடையவர்களுக்குத்தோன்றுவதில்லையாம். இது உண்மைதான் நவீன நாகரீகமும் ஆராய்ச்சியும், அறிவும் உடையவர்களுக்கு மதம் இன்னது சமூக விஷயம் இன்னது என்று தெரியும். ஆகையால் அவர்கள் சமூகச்சீர்திருத்தஞ் செய்வதற்குப் பின்வாங்கமாட்டார்கள். வைதீக இந்துக்கள் பகுத்தறிவற்றவர்கள். சுருங்கவும்விளங்கும்படியும் கூறவேண்டுமானால் 'மூட்டாள்கள்' ஆகையால் அவர்கள் சமூக விஷயங்களையும் மதம், மதம் என்று சொல்லிக்கொண்டு ஒரு சீர்திருத்தத்திலும் மனமில்லாமல் பழைய இருட்டு உலகத்திலேயே வசிக்கவிரும்புவார்கள். ஆகையால் வைதீகர்கள் அபிப்பிராயத்தை அலட்சியம் செய்தால் தான் சமூகம் முன்னேற்றம் அடையமுடியும் திரு ஆச்சாரியார் போன்றவர்களின் அபிப்பிராயத்தால் சமூகம், சமத்துவமும், விடுதலையும் பெறமுடியும்.

தொடர்ச்சி 14ம் பக்கம் பார்க்க.

மூடக்கொள்கைகள் ஒழியவேண்டும்.

—※—

(நவசக்தியிலிருந்து எடுத்தது.)

இலட்சுமணபுரி சர்வ கலாசாலைப் பட்டமளிப்பு விழாவில் ஸர் எஸ். இராதாகிருஷ்ணன் நிகழ்த்திய ஒரு சொற்பொழிவின் சாரம் வருமாறு:—

முதன்முதலாக இந்தியாவுக்கு வந்த பிரிட்டிஷார், இத்தேசத்தில் அதற்கு முன்னேற்பட்டிருந்த குழப்ப நிலைமையை மாற்றிச் சமாதானத்தை உண்டாக்கினர் என்பதை எவரும் மறுக்கமுடியாது.

※ ※

மேலுட்டுச் சரித்திரங்களைப்படித்ததன் பயனாக இந்தியர்களாகிய நமக்குச் சுதந்திர ஆவலும் தன்மதிப்புணர்ச்சியும் எற்பட்டிருக்கின்றன.

※ ※

நியாயமான அரசியல் உணர்ச்சியை அடக்குமுறையினால் அடக்கமுடியாது. பலாத்காரத்தினால் நாமும் சுதந்திரத்தை அடையமுடியாது. பலாத்காரத்தினால் இந்தியாவின் சுதந்திரமானது, பின் தள்ளிப் போகும் என்பதில் ஐயமில்லை. இந்தியா அரசாங்கத்தின் நிருவாகம் இந்தியர்கள் கைக்கு மாற்றப்பட்டுவிட்டதனாலேயே, இந்தியாவின் சுயராஜ்யப் பிரச்னை தீர்ந்துவிட்டதாகக் கருதமுடியாது. இந்திய சுயராஜ்யம் பெற்றவுடன் எல்லாரும் சந்தோஷத்துடனும், திருப்தியுடனும் இருப்பர் என்று எவரும் கருதவேண்டாம். சுயராஜ்யம் எல்லாத் துன்பங்களையும் பரிகரியாது. சுயராஜ்யம் வந்தவுடன் உண்பதற்கு அதிகமான ஆகாரம் கிடைக்கும்; குடிப்பதற்கு ஏராளமான தண்ணீர் கிடைக்கும்; நல்ல வஸ்திரங்கள், நல்ல வீடுகள், போதிய ஓய்வு முதலியன கிடைக்கும் என்று எவரும் நினைக்கவேண்டாம். சுயராஜ்யத்திற்கு அடிப்படையாயிருப்பது சரியான சமூக ஒழுங்கேயாகும். சத்தியம், சுதந்திரம், சமத்துவம் ஆகிய இவைகளை அடிப்படையாகக்கொண்ட ஒரு சமூகத்திட்டத்தை நாம் அமைக்கவேண்டும்.

※ ※

வகுப்புப் பிரச்னை சம்பந்தமாக ஒருவித சமரஸம் ஏற்படாதது பல சிக்கல்களை உண்டுபண்ணியிருக்கின்றது. உறுதி, பாதுகாப்பு, நம்பிக்கை இவைகளுக்குப் பதிலாக, அவநம்பிக்கை, கவலை, நிச்சயமின்மை இவைகளே இப்பொழுது முன்னிற்கின்றன. முன்னேற்ற மடையும் தேசங்களுக்கு அவசியம் இருக்கவேண்டியதைத்தியமும், பரிசோதனைகளில் காட்ட வேண்டிய உலகமும் நமக்கு இல்லை. காலநிலைக் கேற்றவாறு தங்களை மாற்றிக் கொள்ளாமல், பல நாடுகள் பாழடைந்து போயின. நாம் நம்மைக்காப்பாற்றிக் கொள்ளவேண்டுமானால், எரியும் தீவட்டியைப் பரிசுத்தப்படுத்தும் தீயை, எதிர்த்து நிற்கும் சக்தியை உபயோகப்படுத்திக் கொள்ளவேண்டும். நம்மை அடக்கி வைத்துக் கொண்டிருக்கும் பண்டைக்கால வழக்க ஒழுக்கங்களோடு, நம் தினசரி வாழ்க்கையையே அச்சுறுத்திக்கொண்டிருக்கும் மூடத்தன்மையான வைகளை ஒழுங்கான வாழ்க்கையை அநுசரிப்பதற்கு மாறுபாடாயுள்ள பலவற்றை நாம் எதிர்த்துப் போராடவேண்டும்.

※ ※

மூடப்பிடிவாதக் கொள்கைகளினால் உண்டாகும் ஆபத்தினின்று நீங்கள் உங்களைக் காப்பாற்றிக் கொள்ளாவிட்டால், உங்களுக்கு இதுகாறும் அளிக்கப்பட்ட கல்வி வீணானதேயாகும். நமது மூதாதையர்கள் காலத்தில் முதல் அநுசரிக்கப்பட்டுவந்த தென்ற காரணத்திற்காகவே, ஒரு கொள்கையை நாம் விடாப்பிடியாகப் பிடித்துக்கொண்டிருப்பதனாலேயே, அந்தக் கொள்கை உண்மையாகி விடாட்டாது.

※ ※

மதவிஷயங்களில் நம்மினின்று வேற்றுமைப்பட்டவர்கள் நேரே நரகத்திற்குச் செல்கிறார்கள் என்று நாம் கருதவேண்டாம். பிறரால் வழங்கப்படும் உண்மைகள், நீதிகள், கொள்கைகள் முதலியன நம்முடைய சக்திக்கும், மனோபாவத்திற்கும் அவை எவ்வளவு மாறுபட்டிருந்த போதிலும், அவைகளால் நன்மையுண்டு என்பதை நாம் ஏற்றுக்கொள்ளவேண்டும்.

※ ※

மத்தியகாலத்திலே, ஐரோப்பாவில் புரோகிதர்களே மனிதனுடையமுழு வாழ்க்கைக்கும் அதிகாரிகளாயிருந்தார்கள் என்று சொல்லவேண்டும். இப்பொழுது அவர்கள் அதேமாதிரி அதிகாரம் செய்யத் தொடங்கினார்களானால், யாரேனும் அதைக்கேட்பார்களா? ஆனால் நம்மில் படித்தவர் பலரும் இதற்கு இணங்கியவர்களாகவே இருக்கிறார்கள் நம்முடைய சமூக ஒழுங்கிலே, இன்னும் புரோகித வகுப்பாரே உயர்ந்த ஸ்தானத்தை வகித்துக்கொண்டிருக்கிறார்கள். இவர்களின் செல்வாக்கினின்று நாம் விடுதலையடைந்து, நமது ஜாதியைவிட, சமூகத்தைவிட தேசமே பெரிய தென்று நாம் கருதுகிறவரை உண்மையான ஜனநாயக ஆட்சிக்கு அருகதையற்றவர்களாகவே இருப்போம்.

※ ※

நமது பண்டைக்கால வாழ்க்கையே சிறந்ததென்றும், தற்கால வாழ்க்கை உலோகாயத்தைச் சார்ந்ததென்றும் கூறுவது சரியாகாது. நோயும், வறுமையும் குடிகொண்ட ஒரு வாழ்க்கை எப்படி ஓர் இலட்சிய வாழ்க்கையாகும்? மனிதர்களையே மிருகங்களைப்போல் நடத்துவது எப்படி மதசம்மதமாகும். மானிட சமூகத்தின் சந்தோஷ அபிவிர்த்திக்காக விஞ்ஞான சாஸ்திரத்தைத் துணையாகக் கொள்வது உலோகாயத நாகரீகமாகாது. மதவெறியையும், சிதறிப்போன சமூக வாழ்க்கையையும் எதிர்த்து மற்கும் இளைஞர்களே எதிர்காலத்தை நிர்மாணம் செய்யக்கூடியவர்கள். ஜனங்களின் சுவனக்குறைவினாலேயே உலகத்தில் அனியாயம் நிலைத்து நிற்கிறது.

※ ※

ஜனங்கள் நாம் எதைக்கூறவேண்டுமென்று எதிர் பார்க்கிறார்களோ அதையே நாம் கூறுகிறோமன்றி, நம்மனத்தில் தோன்றியதை நாம் கூறுகிறோமில்லை தைரியமான, ஆனால் அறிவுள்ள தலைவர்களை நீங்கள் தெரிந்தெடுக்கவேண்டும். பழைய தலைவர்கள் மறைந்த பிறகு அவர்களுடைய ஸ்தானத்தை நீங்கள் ஏற்றுக்கொள்ளவேண்டும்.

※ ※

கூர்மையாக நினைத்து தைரியமாக முயற்சிசெய்து, அறியாமையையும், சுயலாபத்தையும் நீங்கள் தகர்த்தெரியவேண்டும். சுயநல உழைப்பின் பயனாகவே நீங்கள் புதியதோர் ஜனசமூகத்தை உற்பத்திசெய்யவேண்டும்.

———

நவசக்தி.

சென்னை நகரத்தில் மட்டும் மாதம் 650 பெட்டி கற்பூரம் செலவழிகிறதாம். இந்தக கற்பூரப் புகையின் மீது ஏறிக்கொண்டு எத்தனை பேர் சுவர்க்கத்திற்குச் சென்றிருக்கின்றனர் என்பதை யாரேனும் கணக்கெடுத்து வைத்திருக்கின்றனரா?

ஆனால் கற்பூரத்தின் மூலமாக

மணத்திலும் ஆயுள் அதிகமாம்.

———

டாக்டர். வெஞ்ஜர்ட் ஹாலன்ட் என்ற விஞ்ஞான சாஸ்திரி, சமீபத்தில் லண்டனில் செய்த ஒரு பிரசங்கத்தில்கீழ்கண்டவாறு கூறினார்.

"சாசரி மனிதர்களுடைய வயது நூறு என்று வைத்துக் கொண்டால், இங்கிலாந்தில் இப்பொழுது ஆண்களுக்குச் சராசரி வயது 52 ஆகவும், பெண்களுக்கு 55 ஆகவும் இருக்கின்றன. ஆனால் கல்யாணமானவர்களின் தொகை பெருகப் பெருக மக்களின் சராசரி வயதும் உயரும். இதற்குக் காரணம் என்ன வென்றால் கல்யாணம் ஆனவர்களே தங்கள் உடல் நலத்தைப்பற்றி அதிக கவலை யெடுத்துக் கொள்ளுகின்றனர். துர்நடத்தையில்லாத ஒழுங்கான வாழ்க்கையை நடத்துகின்றனர். இல்வாழ்க்கையினால் உண்டாகும் நன்மை இவர்களுக்கு மிகுதியாகக் கிடைக்கின்றன. உதாரணமாக 27 வது வயதில் ஒருவன் கல்யாணம் செய்துகொள்வானாயின், அவன் இன்னும் 42 வருஷம் வாழக்கூடும். இவ்வயதில் கல்யாணம் செய்து கொள்ளாதவன் இன்னும் ஐந்து வருஷங்கள் குறைவாகவே வாழமுடியும்"

———

அன்னிய நாடுகளுக்கு எவ்வளவு பணம் அள்ளிக் கொடுக்கிறோம் தெரியுமா? சென்னையிலிருந்தும் மட்டும் வருஷத்தில் 25 லட்சம் ரூபாய்கள் செல்கிறதாம். ஆண்டவன் திருவருள் எவ்வளவு இறக்குமதியாயிற்று என்பது சிலர் கேள்வி.

———

இரும்! இரும்!!

1932-வரு காலண்டரும் மலையாள சித்த ஔஷத ஜாப்தாவும் இலவசமாக அனுப்புகிறோம்.

சித்த ஔஷதசாலை கம்பெனி,
தோயக்காவு P. O., S. பலயார்.

தேவை.

"ஒரு நற்குல இந்துவுக்கு ஒரு உத்தம உயர்குல இந்து பெண் தேவை. சீர்திருத்தத் திருமணம் முடிப்பதுவே பாங்கு. விபரங்களுக்கு கீழ்கண்ட விலாசத்திற்கு எழுதவும்.

அ. ஏகாம்பரம்,
பப்பு அவுஸ், சர்க்கார்பாளையம்,
தெப்பக்குளம் போஸ்டு,
திருச்சிராப்பள்ளி.

ராமசாமியின் ஐரோப்பா பிரயாணம்.

பாண்டிச்சேரியில் உபசாரம்.

(நமது நிருபர்.)

திரு. ஈ. வெ. இராமசாமியவர்களும், திரு. எஸ். இராமநாதன் எம். ஏ. பி. எல்., அவர்களும் 13-12-31ல் சென்னைத்துறைமுகத்தில், அம்போய்சி (Amboise) என்னும் கப்பலில் ஏறினார்கள். அன்றிரவே கப்பல் புதுவைத் துறைமுகத்தை யடைந்தது. ஏற்கனவே இச்சேதி அறிந்திருந்த புதுவைப் பிரமுகர்கள் நூற்றுக்கணக்கானவர்கள் 14ந் தேதி காலை படகுகளில் ஏறி இராமசாமிக்கு ஜே. இராமநாதனவர்கட்கு ஜே. என்ற கோஷத்துடன் கப்பலில் வரவேற்புப்பத்திரம், புஷ்பமாலைகள் சகிதம் அளவளாவினர். கப்பல் அதிகாரிகள் அனைவருக்கும் போராச்சரியமும், தலைவர்களின் விஷயத்தில் பெருமதிப்பும் ஏற்பட்டது. இதன் பிறகு கூட்டத்திற்குத் தலைமை வகித்த பிரஞ்சிந்திய சட்டசபை மெம்பரும், வக்கீலுமாகிய திரு. பெருமாள் கப்பல் உயர்தர அதிகாரிகளுக்கு திரு. ஈ. வெ. இராமசாமி, திரு. எஸ். இராமநாதன் ஆகிய இரு தலைவர்களையும் அறிமுகப்படுத்தினார்கள். பிறகு, பிரான்ஸ் தேசத்திலுள்ள அநேக தலைவர்கட்கும், பல சங்கங்கட்கும் நமது தலைவர்களை அறிமுகப்படுத்தக் கூடியதும், ஆதரவு செய்யக்கூடியதுமான அநேக சிபார்ஸ் லெட்டர்கள் ஓர் சிறிய தங்கச் சிமிழில் அடக்கம்செய்து கொடுக்கப்பட்டது. அந்தச்சிபார்ஸ் கடிதங்கள் பிரஞ்சிந்தியத் தலைவர்களால் அளிக்கப் பட்டவை.

அதன் பிறகு கையோடு கொண்டுபோயிருந்தசிற்றுண்டி அனைவருக்கும் வழங்கப்பட்டது. நடுப்பகல் 1 மணிக்கு நற்பிரயாணம் ஆகட்டும் என்ற கோஷத்துடன் அனைவரும் படகேறிக் கரைக்கு வந்தனர்.

இதற்கிடையில் தோழர்கள், பாரதிதாஸன், அல்போன்ஸ்லகாஷ், ம. நோயேல், பெருமாள் சட்டசபை மெம்பர், ஆகியோர் தலைவர்களிடம் தனிமையில் பேசியிருந்தனர்—தலைவர்கள் எகிப்தில் ஒரு மாதம் தங்கி, அதன் பிறகு ஐரோப்பா யாத்திரை செய்ய உத்தேசம் என்பதை மாத்திரம் பேசியிருந்தவர்கள் பலருக்கும் வெளிப்படுத்தினார்கள்.

கோளும்பில் உபசாரம்.

(நமது நிருபர்.)

திரு. ஈ. வெ. இராமசாமியும், எஸ். இராமநாதன் எம். ஏ. பி. எல். அவர்களும் அம்போய்சி என்னும் கப்பலில் 17-12-31ல் கொளும்பு துறைமுகம் வந்தடைந்தார்கள். அப்பொழுது கே. நாகலிங்கம், ஏ. எஸ். பரமசிவம் முதலிய பல சுயமரியாதை அன்பர்கள் வரவேற்று உபசரித்தனர். (விபரம் பின் வரும்.)

முனிசிபல் தலைவருக்கு விருந்து.

ஈரோடு முனிசிபாலிடிக்கு புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர் ஜனப், கே. எ. ஷேக்தாவுத் அவர்களுக்கும், உபதலைவர் திரு. ஈ. வி. நஞ்சப்ப செட்டியார் அவர்களுக்கும், இவ்வூர் முனிசிபல் கவுன்சிலரும், அர்பன்பேங்கு பிரசிடெண்டுமான திரு. எம். சிக்கையா நாயக்கர் அவர்களால் 13-12-31ந் தேதி ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு இவ்வூர் மஹாஜன ஹைஸ்கூலைச் சேர்ந்த சரஸ்வதி ஹாலில், ஒரு தேனீர் விருந்து நடத்தி வைக்கப்பட்டது. அவ்விருந்திற்கு புதிய கவுன்சிலர்களும், வியாபாரிகளும், உத்தியோகஸ்தர்களும், உள்ளூர் பிரபலஸ்தர்களும், பெண்களுமாக சுமார் 300 பேர்கள் விஜயம் செய்திருந்தார்கள். வந்திருந்த யாவர்க்கும் சிற்றுண்டி வழங்கியபின், ஒரு பாராட்டுக் கூட்டம் கூடியது.

அக்கூட்டத்திற்கு வக்கீல், கே. எஸ். கிருஷ்ணசாமி அய்யங்கார் தலைமை வகித்தார். தலைவர், சேர்மென், வைஸ்சேர்மென் முதலியவர்கட்கு மாலைகள் சூட்டப்பட்டன. தலைவர் அவர்கள், சேர்மென் ஜனப், கே. எ. ஷேக்தாவுத் அவர்களுடைய குணநிசயங்களையும், அவருடைய அரிய சேவைகளையும், வைஸ்சேர்மென் திரு. ஈ. வி. நஞ்சப்ப செட்டியார் அவர்களின், அரிய வழியத்தைப்பாராட்டி முகவுரையாகப் பேசினர்.

பின்னர், இவர்களுடையகுணநிசயங்களையும், அவர்களின் அரிய சேவைகளைப்பற்றிதிருவாளர்கள், ம. எம். நரசிம்மாச்சாரியார், ஈ. எஸ். கண்டபாணி அய்யர், எம். எஸ். முத்துக்கருப்பன் செட்டியார், ஈர்ஜி சேட், ஈ. எஸ். கணபதி அய்யர், எஸ். முத்துசாமி முதலியார், ஆர். எஸ். விசுவாசம் ஆகியவர்கள் பேசினார்கள். இவற்றிற்கு சேர்மென் ஜனப், கே. எ. ஷேக்தாவுத் சாகிப் அவர்களும், வைஸ்சேர்மென் திரு. ஈ. வி. நஞ்சப்ப செட்டியார் அவர்களும் தகுந்த முறையில் பதில் அளித்தார்கள். பின் தலைவர் முடிவுரை கூறினர். திரு. சிக்கையா நாயக்கர் வந்திருந்தவர்களுக்கெல்லாம் வந்தனோபசாரம் கூறக் கூட்டம் இனிது கலைந்தது.

14-12-31ந் தேதி மாலை 5 மணிக்கு பெரியக்கிராம சோமப் பஞ்சாயத்துப்பிரசிடெண்டுஜனப் எஸ். இ. ஜி. முஹமது இப்ராஹீம் சாயபு பகதூர் அவர்களால் இவ்வூர் முனிசிபாலிட்டிக்கு புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவா ஜனப், கே. எ. ஷேக்தாவுத் அவர்களுக்கும், உபதலைவர் ஈ. வி. நஞ்சப்ப செட்டியார் அவர்களுக்கும் தமது பங்களாவில் ஒரு தேனீர் விருந்து நடத்திவைத்தார். அதற்கு முனிசிபல் அங்கத்தினர்களும், உள்ளூர்பிரபலஸ்தர்களும் விஜயம் செய்திருந்தார்கள். தலைவரையும், உபதலைவரையும் பாராட்டி சிலர் பேசினார்கள் அவற்றிற்கு இருவரும் தகுந்த முறையில் பதில் சொல்லிய பின் கூட்டம் கலைந்தது.

15-12-31ந் தேதி மாலை 6 மணிக்கு இவ்வூர் மஹாஜன உயர்தர பாடசாலை உபாத்திமார் சங்கத்தின் சார்பாக ஷெ பாட சாலையின் நிர்வாக அங்கத்தினர்களில் பலர் முனிசிபல் அங்கத்தினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டதை முன்னிட்டு ஷெ ஸ்கூலைச் சேர்ந்த சரஸ்வதி ஹாலில் ஓர் தேனீர் விருந்து நடத்திவைத்தார்கள். இன்னும் பல நண்பர்களால் தேனீர் விருந்து நடத்தி வைக்கப் பட்ட தென்றும் இன்னும் பல இடங்களில் நடை பெறுமென்றும் ஒரு நிருபர் எழுதுகிறார்.

சென்னை

'சுயமரியாதை மகாநாடு'

திறப்பாளர்

தோழர், M. சிங்காரவேலு B. A., B. L.

தலைவர்

,, V. பார்த்தசாரதி.

வரவேற்புத்தலைவர்

புரோபஸர், P. லெக்ஷ்மிநரசு B. A. L. T.

'பெண்கள் மகாநாடு'

திறப்பாளர்

தோழர், S. V. B. கிரிஜாதேவி.

தலைவர்

,, G. A. அன்னபூரணி.

வரவேற்புத்தலைவர்

,, S. G. குஞ்சிதம் B. A.

மேற்படி மகாநாடுகள் 26, 27-12-31 தேதிகளில் சென்னை பச்சையப்பன் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

எஸ். வி. லிங்கம், சர்வாதிகாரி.

அறிவிப்பு

சென்னைநகரம் முழுமைக்கும் நமது பத்திரிகையின் சோல் விளம்பர ஏஜண்டுகளாக மெஸ்ர்ஸ் கற்பகம் கம்பெனியாரை நியமித்திருக்கிறோம். ஆகையால் இனி நமது பத்திரிகையில் விளம்பரம் செய்ய விரும்பும் சென்னையிலுள்ளவர்கள் கீழ்க்கண்ட விலாசத்தார்மூலமாகவே விளம்பரத்திற்கு ஏற்பாடுசெய்துகொள்ளவும்:-

Messrs. Karpaham & Co.,
Sole Advertising Agents,
257, Linghi Chetty Street,
G. T. Madras.

குடி அரசு

ஞாயிறு 1931 டிசம்பர் 20உ

தூங்குபவனை எழுப்பி விடலாம் தொட்டிலை ஆட்டுபவனை.

—:o:—

உலகம், கிளர்ச்சி, ஆர்ப்பாட்டம்

முதலிய காரியங்களைப் பார்ப்பதிலும், அவற்றில் ஈடுபடுவதிலும் சாதாரணமாக எல்லா மக்களுக்கும் ஒரு உற்சாகமும், ஆசையும் உண்டாவது இயல்பான விஷயமாகும். அமைதியாக—பொறுமையாக—அடைபடலான காரியம் ஒன்றுமில்லாமல்—இருப்பதால் மனத்திற்கு ஒருவித உற்சாகமும் இருப்பதில்லை; என்னமோ ஒருமாதிரியான மந்தமாகவே இருக்கும். ஆகவே அமைதியாக இருக்கும் மக்களை—கிளர்ச்சியான—கலகமான—ஆர்ப்பாட்டமான காரியங்களைச் செய்யும்படி தூண்டிவிடுவது மிகவும் சுலபமான விஷயமாகும். கொஞ்சம் பேசுந்திறமையுடைய—எழுதுந்திறமையுடைய எவராலும் இக்காரியம் செய்யமுடியும். மக்களை அடக்கி வைத்திருக்கின்ற ஒரு ஸ்தாபனத்தின் மீதோ, அல்லது ஒரு தலைவன் மீதோ, அல்லது ஒரு சமஸ்தானத்தின் மீதோ அல்லது ஒரு ஜமீன் மீதோ, அல்லது ஒரு அரசாங்கத்தின் மீதோ பொது ஜனங்கள் ஒப்புக்கொள்ளும்படியான விதத்தில் குற்றங்களையும், பழிகளையும் சுமத்திச் சாதுரியமாகப் பேசிவிட்டால் போதும். உடனே ஒன்றுந்தெரியாத அவர்கள் துவேஷமும், வெறியும், உணர்ச்சியுங்கொண்டு கலகஞ் செய்வதற்குத் தயாராகிவிடுவார்கள். இத்தனைய துவேஷத்தை உண்டாக்கும் தலைவர்கள் சொல்லுகின்றபடியெல்லாம் கேட்கப் பொது ஜனங்களும் பின் வாங்கமாட்டார்கள். இதுவே, நமது நாட்டில் மட்டுமல்ல, மற்ற எல்லா நாடுகளிலும் பொது ஜனங்களிடம் படிந்து கிடக்கும் இயற்கை சுபாவமாக இருந்து வருகிறது. உள்ள தெருப்பை விசிறிகொண்டு வீசிப்பற்றவைப்பதுபோல இயற்கை சுபாவத்தைப்பேச்சு வலிமையால் தூண்டிவிடுவது கஷ்டமான காரியமல்ல. ஆனால் ஒரு திட்டத்தை எற்படுத்தி அதன்கீழ் அடங்கி, உருவான வேலைகளைச்செய்யும்படி மக்களைத்திருப்புவது கொஞ்சம் கஷ்டமான காரியமேயாகும். முதலில் திட்டங்கள் வகுப்பதும், அத்திட்டங்களை எந்தெந்த வழிகளிலாவது நிறைவேற்றுவது என்பதுமே சாதாரணமானவர்களால் செய்யமுடியாதகாரியமாகும். அதிலும் அழிக்கின்ற தொழிலிலேயே ஈடுபட்டுவிட்ட மக்களால் இவ்வாறு ஒரு திட்டத்தின் கீழ் இருந்து வேலை செய்வது மிகவும் கஷ்டமான காரியமேயாகும்.

ஒரு நாட்டில் நல்ல அரசியல் நடைபெற வேண்டுமானால்—நல்ல பொறுப்பாட்சி—சுதாவ ஜனநாயகஆட்சி நடைபெறவேண்டுமானால் அந்நாட்டு மக்கள் மேலே கூறியபடி கலகத்திலும்—கிளர்ச்சியிலும்—ஆர்ப்பாட்டத்திலும் அதிகமாகப்பழக்கப்பட்டாமல் ஒருஸ்திட்டத்தின் கீழ் அடங்கி உருவான காரியங்களைச்செய்வதில் பழக்கப்பட்டவேண்டும். இவ்வாறு பழக்கப்பட்ட பொதுஜனங்களே ஜனநாயக அரசாங்கத்தில் அங்கம் வகித்து அதை வெற்றியோடு நடத்தக்கூடியசாமர்த்தியமும், அனுபவமும், தூரதிருஷ்டியும் உடையவர்களாயிருப்பார்கள். அவர்களால் நடத்தப்படும் அரசாங்கமே சிறந்த அரசாங்கமாகவும், மற்ற நாடுகளுக்குப்பின் வாங்காத அரசாங்கமாகவும், செல்வநிலையைப் பெருக்கக்கூடிய, தொழில்கள், விவசாயங்கள், முதலியவைகளைப்புதிய முறையில் விருத்தி செய்யக்கூடிய அரசாங்கமாகவும் இருக்கக்கூடும். நாட்டின் முன்னேற்றத்திற்குரிய புதிய சாஸ்திரங்களையும், சாஸ்திர ஆராய்ச்சி சாலைகளையும் ஏற்படுத்தக்கூடிய அரசாங்கமாக இருக்கக்கூடும். எல்லா மக்களும் சௌகரியமாக வாழ்வதற்கு நாடு முழுவதும் சுகாதார வசதிகளையும், வைத்திய வசதிகளையும் ஏற்படுத்தக்கூடிய அரசாங்கமாக இருக்கக்கூடும்.

இப்படியில்லாமல் கலகத்திலும், கிளர்ச்சியிலும்—ஆர்ப்பாட்டத்திலுமே போய்க்கொண்டிருக்கிறதிலேயே பழகிக்கொண்டிருக்கிற மக்களிடம் திடீரென்று பொறுப்புள்ள ஆட்சி வந்துவிட்டால், அவ்வாட்சி வெற்றியுடன் நடக்கமுடியாது. கலகத்திலும், —கிளர்ச்சியிலும், ஆர்ப்பாட்டத்திலுமே அந்த ஆட்சியும் கடைபெறக்கூடும். இப்படி நடைபெறக்கூடிய ஒரு அரசாட்சியில் ஜனங்களுக்கு எப்படி நன்மையுண்டாக முடியும்? அரசாங்கத்தாரால் கலகங்களை அடக்குவதைக்கவனிப்பதற்கு நேரமிருக்குமா? அல்லது நாட்டின் நன்மைகளுக்கான உருவான வேலைகளைச்செய்வதற்கு நேரமிருக்குமா? என்று யோசனை செய்து பாருங்கள்.

ஆனால் ஒரு நாடு சுதந்தரம் பெற முயற்சி செய்கின்ற காலத்தில் அந்நாட்டில் பெருங் கலகங்கள் நடப்பது சகஜந்தான் என்பதை எந்நாட்டிலும் நடைபெற்ற சரித்திர உண்மைகளைக்கொண்டு அறிகிறோம். ஆனால் நமது நாடோ நீண்டகாலமாகவே கலகத்திலேயே மூழ்கியிருந்தாலும், சுதந்தரம் பெறுவதற்குரிய வழியில் ஒரு சிறிதும் ஏற்பட்டதில்லை. இதற்குக்காரணம், ஜாதி மதவேற்றுமைகளும், அவைகளால் ஏற்பட்டதுவேஷங்களுமே யாகும். ஒற்றுமைக்கும் இவைகளே தடைகளாக இருந்து வருகின்றன. சமீ காலத்தில் நமது நாட்டில் அரசியல் கிளர்ச்சி ஏற்பட்டவுடன் இந்த ஜாதி, மதக் கிளர்ச்சிகளும், துவேஷங்களும் அதிகப்பட்டுக்கொண்டு வருகின்றதேயொழிய குறைந்தபாடில்லை என்பது நமக்குத் தெரியாத விஷயமல்ல. அரசியல் சுதந்தரம் சிறிது உண்டான பிறகும் அதிக அரசியல் சுதந்தரம் வேண்டுமென்ற கிளர்ச்சி ஏற்பட்ட பிறகுந்தான் இந்து முஸ்லீம் கலகம், பார்ப்பன பார்ப்பனரல்லாதார் சண்டை, தாழ்த்தப்பட்டவர்கள் உயர்ந்தவர்கள் சச்சரவு, வெள்ளையர் வெள்ளையரல்லாதார் துவேஷம் இவைகள் அதிகப்பட்டன என்பதை யாரும் பொய்யென்று சொல்லமுடியாது. ஆகவே, பல ஜாதிகளும், பலமதங்களும் ஆயிரக்கணக்கான வருஷங்களாக ஜென்மப்பகை கொண்டு அடிக்கடி சண்டை செய்துகொண்டு வாழுகின்ற நாட்டில் சுதந்தாக்கிளர்ச்சி தோன்றுகின்றபோது இந்த ஜாதி மதவேற்றுமைகளும் துவேஷங்களும் முன்வந்து சுதந்தாக்கிளர்ச்சியை நசுக்கி விடுவது இயல்பேயாகும். இதற்கு வேறு உதாரணம் தேட வேண்டிய கஷ்டம் வேண்டாம். நமது நாடே தகுந்த உதாரணமாக இருக்கின்றது.

இந்த நிலையில் உள்ள நமது நாட்டில் தற்போது நடைபெறும் அரசியல் கிளர்ச்சி உண்மையாக அரசியல் கிளர்ச்சியை உண்டாக்கும் பிரசாரமாக இல்லையென்பதுதான் நமது அபிப்பிராயம். உண்மையான அரசியல் சுதந்தர ஆசையுடையதலைவர்களும், தொண்டர்களும் இருந்தால் அவர்களுடைய எண்ணத்தில் நாம் ஒன்றும் குற்றம் கற்பிக்க முன்வரவில்லை. ஆனால், பெரும்பாலான அரசியல் வாதிகள் மக்களுக்குள் ஜாதித்துவேஷமும், மதத்துவேஷமும் உண்டாகும் வகையில் 'அஹிம்சாதர்மம்' என்ற பெயரால் பிரசாரஞ்செய்துகொண்டுவருகின்றனர் என்பதை யாரும் மறுக்க முடியாது. இவ்வாறு பிரசாரம் பண்ணுவதையே தேசாபிமானமாகவும், கருதுகின்றனர். இவ்வாறு பிரசாரஞ் செய்துவரும் வயிற்றுப்பிழைப்புத் தேசாபிமானிகளாலேதான் நமது நாட்டில் கலகங்கள் அதிகப்பட்டுக்கொண்டு வருகின்றன என்பதில் சிறிதும் சந்தேகப்பட வேண்டியதில்லை. 'அஹிம்சாதர்மம்' என்று சொல்லிக்கொண்டு, அந்திய நாட்டு மனிதர்கள் மேலும், அவர்கள் நிறத்தின்மேலும், அவர்கள் மதக்கொள்கைகள் மேலும், வெறுப்பும், துவேஷமும் உண்டாகும்படி பிரசாரஞ் செய்துவரும் பொறுப்பற்ற வயிற்றுப்பிழைப்புத் தேசாபிமானிகளின் செய்கையால் தான் நமது நாட்டில் புரட்சி இயக்கம் பலப்பட்டுக்கொண்டு வருகிறதென்று கூறுவோம். நீண்டகாலமாக வன்காளமாகாணத்தில் புரட்சியியக்கம் இருந்து வருவது உண்மையாலும், ஒத்துழையாமையும் "அஹிம்சாதர்மத்துவேஷப் பிரசாரமும்" ஏற்பட்ட பின்பு தான் இது அதிகமாகத் தலைவிரித்தாடுகின்றது என்பது உண்மையாகும்.

புரட்சி இயக்கத்தில் ஈடுபட்டிருப்பவர்கள் பெரும்பாலும் வாலிபர்கள். வாலிபர்கள் எந்தக்காரியத்தையும் முன் பின் யோசனையில்லாமல் உடனே செய்து முடி

த்துவிடவேண்டுமென்னும் எண்ணமுடையவர்கள். அதற்காகத் தமது உயிரையும் பொருட்படுத்தாமல் தியாகஞ்செய்ய முன்வரும் குணமுடையவர்கள். இத்தகைய குணமுடையவர்கள் துவேஷத்தை மூட்டும் அரசியல் கிளர்ச்சியின் பலனை அந்நியர்கள் மீது வெறி கொண்டு கொலைகளும், சதிகளும் தாராளமாகச் செய்ய முன்வந்து விட்டனர் என்பதில் ஒன்றும் ஆச்சரியம் இல்லை. இச்செய்கைகளே தேசாபிமானமுடைய தென்றும், சுயராஜ்யம் அளிக்கக்கூடிய தென்றும் அவர்கள் கருதக்கூடிய நிலைமையைமது அரசியல் கிளர்ச்சி ஏற்படுத்திவிட்டதென்று கூடக் கூறலாம். இவர்களுடைய இக்கலகச்செயல்களைத் தேசாபிமான மாகவும் தியாகமாகவும் ஆரம்பத்தில்மமது நாட்டுத் தேசீயப்பத்திரிகைகள் என்பன பாராட்டவும் தொடங்கின. தேசீயவாதிகள் மேடைகளில் புகழவும் தொடங்கினர். இவர்களுடைய படங்களை வைத்துக் கொண்டாடவும், இவர்களுக்காக விழாக்கள் நடத்தவும் ஆரம்பித்தனர். ஆனால், அப்பொழுதே சில பொறுப்புள்ள தலைவர்கள் இச்செயல்களைக் கண்டித்தனர். நாணயமும், பொறுப்பும் உள்ளவரும் இச்செயல்களை ஆதரித்து, மேலும் மேலும் வாலிபர்களுக்கு இத்தகைய விஷயங்களில் ஊக்கம் உண்டாக்க முன்வரமாட்டார்களென்பது நிச்சய மாகும்.

"தேசாபிமானம்" என்னும் பெயரால் வெறிகொண்டு, நிரபராதிகளையும், உத்தியோகஸ்தர்களையும் இரக்கமின்றிக் கொலை செய்யும் இத்தப்புரட்சி ஒழிய வேண்டுமானால், பொறுப்புள்ள தேசப்பிரமுகர்கள் அனைவரும் இதனைக் கண்டிக்க வேண்டும். இதனால் வரும் தீமையை வாலிபர்கள் உணரும் படிசெய்ய வேண்டும். அப்படியில்லாமல் ஒரு பக்கத்தில், அந்நியர்கள் மீது துவேஷத்தைக் கிளப்பி விடும் அஹிம்சாதர்மப் பிரசாரமும், ஒரு புறத்தில் புரட்சியைக்கண்டிப்பதான அறிக்கைகளும் செய்துகொண்டிருந்தால் எப்படி புரட்சி அடங்கும்என்று கேட்கின்றோம். இது, குழந்தையின் தலையையும் கிள்ளிவிட்டுத் தொட்டிலையும் ஆட்டிவிடுவது போலத்தானே ஆகும்?

சில "தேசீய"ப் பத்திரிகைகள் பொறுப்பின்றிக் கொலைக் குற்றங்களையும், கொலை செய்தவர்களையும் தேசாபிமானமாகவும், தேசாபிமானிகளாகவும் போற்றி உற்சாகப்படுத்தும் முறையில் நடந்து கொண்ட காரணத்தால் தானே அச்சுச் சட்டம் ஏற்பட்டது? இவ்வாறு "தேசீய"ப்பத்திரிகைகள் என்பன பொறுப்பற்றதனமாக நடந்து கொண்டிராவிட்டால் அச்சுச் சட்டம் பிறந்திருக்க முடியாது என்பது உண்மை அல்லவா?

அடுத்த படியாகத் துவேஷத்தைப் பெருக்கிவிடும் முறையில் "அஹிம்சை"ப் பிரசாரம் பண்ணியதன் பலனால் வங்காளத்தில் புரட்சி இயக்கமும் தலைவிரித்தாடத் தொடங்கவும், அதை அடக்க அரசாங்கத்தார் வங்காள அவசரச்சட்டத்தை ஏற்படுத்தும் படியான நிலையும் ஏற்பட்டு விட்டது அல்லவா?

இப்பொழுது ஐக்கிய மாகாணத்தில் வரிகொடாமை இயக்கம் ஆரம்பித்தவுடன் அரசாங்கத்தாரும் அவசரச்சட்டம் ஒன்றை ஏற்படுத்தி விட்டனர். இந்த அவசரச் சட்டங்களை அரசாங்கத்தார் வாபீஸ் பெற்றுக்கொள்ள வேண்டும் எனப் பெரும் கிளர்ச்சி செய்கின்றனர். புரட்சி இயக்கத்தையும், வரிகொடா இயக்கத்தையும் நிறுத்துவதற்கு ஒரு முயற்சியும் செய்யாமல், அவற்றை அடக்க ஏற்பட்ட சட்டங்களின் மேல் மாத்திரம் பழிபோட்டுக் கிளர்ச்சி செய்வதில் என்ன பலனிருக்கிறது? அவசரச் சட்டங்களுக்கு நிரபராதிகளும் ஆளாகிக் கஷ்டப்பட நேரும் என்பதை நாமும் ஒப்புக்கொள்ளுகிறோம். அவசரச் சட்டங்களால் இன்னும் அக்கிளர்ச்சிகள் கொஞ்சம் அதிகப்படும் என்பதிலும் உண்மை இல்லாமல் இல்லை. ஆனால், அவசரச் சட்டம் உண்டானதற்கான காரணங்களையும் ஒழிப்பதற்கு முயற்சி செய்து கொண்டு அவசரச்சட்டங்களையும் வாபீஸ் வாங்கிக்கொள்ளுமாறு கிளர்ச்சி செய்வதே நியாயமும், ஒழுங்குமாகும்.

இவையல்லாமல் மீண்டும் நாட்டில் வரிகொடா இயக்கமும், பகிஷ்கார இயக்கமும் பலமாக ஆரம்பிக்க வேண்டுமெனப் பிரசாரஞ் செய்யப்பட்டும் வருகிறது. திரு. காந்தியும், சத்தியாக்கிரகச் சண்டை ஆரம்பிப்பதாகச் சொல்லிக் கொண்டு வருகிறார். "காந்தி-இர்வின் ஒப்பந்தம்" முடிந்ததுமுதல், "மறுபடியும் சத்தியாக்கிரகப் போர் ஆரம்பிப்பதற்குத்தயாராய் இருங்கள்" என்றே பொறுப்புள்ள காங்கிரஸ் தலைவர்களெல்லாம் சொல்லிக்கொண்டு வந்தனர், வருகின்றனர். "தேசத்தின் அமைதியையும், சட்டத்தையும், நிரபராதிகளையும் காப்பாற்றுவது அரசாங்கத்தின் பொறுப்பு. ஆகையால், அரசாங்கம் சட்டத்தையும், அமைதியையும் நிலைநிறுத்தப் பின்வாங்காது" என மேன்மை தங்கிய வைசிராய் தாம் பேசும் இடங்களில் கர்ஜித்துக்கொண்டு வருகிறார்.

இந்த நிலையில் தேசத்தில் மறுபடியும் கலகம் ஏற்படுமாயின் பாமர ஜனங்களுக்குத்தான் அதிகமான கஷ்டமும், நஷ்டமும் உண்டாகுமென்பதில் ஆட்சேபனையுண்டா?

"சுயராஜ்யம்" "காங்கிரஸ்" "காந்தி" "அஹிம்சை" "தேசாபிமானம்" என்னும் பெயர்களால் காலிகளும், நாணயமற்றவர்களும், பிழைப்பற்றவர்களும் மறுபடியும் எமாற்றப் புறப்பட்டு விடுவார்கள். இப்பெயர்களைச் சொல்லி பாமர மக்களிடம் பொருள் பறிக்கத் தொடங்கி விடுவார்கள். இவர்கள் செய்யும் ஜால்பாட்டங்களினால் மறுபடியும், புரட்சியும், அடிதடிகளும் துவேஷங்களும் அதிகப்படக்கூடும். ஆகவே அரசாங்கத்தார் இவற்றை அடக்கச் சென்ற உப்புச்சத்தியாக்கிரகத்தின் போது அவரச்சட்டங்கள் பிறப்பித்தது போல இன்னும் பல அவசரச்சட்டங்களைப் பிறப்பிக்கவும் கூடும்.

இவ்வாறு காங்கிரஸ் தலைவர்கள் செய்து கொண்டு வரும் பிரசாரங்கள் ஒருபுறமும், புரட்சிக்காரர்கள் நடத்திக்கொண்டு வரும் அக்கிரமங்கள் ஒரு புறமும, அரசாங்கத்தார் இவைகளை அடக்க வெளியிடும் அவசரச் சட்டங்களும், தண்டயுத்தாவுகளும் ஒரு புறமும சேர்ந்து நாட்டுமக்களைச் சமாதானமின்றிக்கஷ்ட நிலையில் வாழும்படி செய்வதைத் தவிர வேறு ஒரு பலனையும் எழைமக்கள் காணப் போவதில்லை, அடையப் போவதில்லை என்பதுதான் நமது அபிப்பிராயம். இதனால், தற்போது உள்ளதைவிட இன்னும், நமது நாட்டின் வியாபார நிலையும், செல்வ நிலைமையும் கஷ்டநிலைமைக்கு வந்து சேருமென்பதும் நிச்சயம். மற்றபடி இந்த மாதிரியான வீண் கலகங்களால் ஒரு கடுகளவும் பிரயோஜனம் உண்டாகப் போவதில்லை. நமது நாட்டுச் சாதி மத வேற்றுமைகளுக்கு அழிவுவராமல் இன்னும் கெட்டியாக ஆணியடித்துக்கொண்டு "சுயராஜ்யம்" வேண்டும் என்று கேட்பது கையாலாகாத்தனம் என்று தான் கூறுவோம். சுயராஜ்யத்திற்காகச் செய்யப்படும் கிளர்ச்சியில் ஒருபாகத்தை சாதி, மதங்களை ஒழிப்பதில் செலவு செய்திருந்தால் இதுபோது நாம் எவ்வளவோ மேலான நிலையில் போய் இருந்திருக்கலாம். போதிய சுதந்தரமும் கூடப்பெற்றிருக்கலாம். ஆனால் தேசத்தைக் காட்டிலும், வருணாச்சிரம தருமத்தையும், மதத்தையும் உயிரினுஞ்சிறந்ததாக எண்ணிக் கொண்டிருக்கின்ற "தேசத்தலைவர்" களால், நமது நாடு சாதி, மத வேற்றுமை ஒழியப்போவது எது? இவைகள் ஒழியாதவரையில் பூரண சுதந்திரம் கிடைப்பது எங்கே? ஒரு சமயம் கிடைத்தாலும் அதை வைத்து ஆளுந்திறமை தான் இருக்க முடியுமா? என்று தான் கேட்கிறோம்.

ஆகையால் இனியும் உண்மையான சமூக சகோதரத்துவ ஆசையும், உண்மையான தேசமுன்னேற்ற ஆவலும் உள்ளவர்கள் அனைவரும் தேசத்தின் அமைதிக்காக உழைக்க முன் வரவேண்டும். புரட்சிச் செயல்களும், கலகங்களும் நடவாமல் பெற வெட்டாமல் எல்லாமக்களுக்குள்ளும் சகோதரத்துவமும், சுயமரியாதையும் தாண்டவமாடக்கூடிய பிரசாரஞ் செய்யவேண்டும். குற்றமற்ற மனமுள்ள வாலிபர்கள் மனத்தில் வெறியை உண்டாக்க மல் அன்பையும், சமதர்ம எண்ணத்தையும் உண்டாக்கவேண்டும். இவ்விஷயங்களைப் பொறுப்புள்ள தலைவர்களும், தொண்டர்களும் மேற்கொள்ள வேண்டுகிறோம்.

யார் செயல்? யாருக்கு நன்மை?

காங்கிரசில் உள்ள பார்ப்பனர்கள் அனைவரும், வருணாச்சிரம தருமத்தையும், மதத்தையும், கடவுளையும், வேதங்களையும், புராணங்களையும் பிரசாரம் புரிந்து, நமது இயக்கத்தால் சிறிது கண் திறந்து வருகின்ற பாமர மக்களை மீண்டும் மூட நம்பிக்கையில் கட்டுப்படுத்தி வைக்கவே காங்கிரசை உபயோகப்படுத்திக் கொண்டு வருகின்றனர் என்று நாம் அடிக்கடி கூறிவருவதில் சிறிதும் தவறில்லை யென்பதற்கு மற்றொரு உதாரணம் கிடைத்திருக்கிறது.

"தென்னாட்டுக் காந்தி" எனக் காங்கிரஸ் கூலிகளால் கொண்டாடப்படும் திரு. சி. ராஜகோபாலாச்சாரியார் அவர்களைப்பற்றி நாம் ஒன்றும் அதிகமாகக்கூற வேண்டியதில்லை. அவர் ஒரு பழுத்த வருணாச்சிரம தரும வாதியாகிய

"கடவுள் பக்தர்" ஆக விளங்குகிறார் என்பது பலருக்கும் தெரிந்த விஷயமாகும். குடுகுடுப்பைக்காரன் போகுமிடந்தோறும், தனது குடுகுடுப்பையையும், தன் தோளின் மேல் ஒரு மூட்டைக் கந்தைத்துணியையும் சுமந்து கொண்டு போவதைப்போல, திரு. ராஜகோபாலாச்சாரியாரவர்களும் எங்கே போனாலும் புராணங்களையும், கடவுளையும் சுமந்தே தான் செல்லுவார். அவர் எந்த அறிக்கை வெளியிட்டாலும், எங்கே என்னென்ன பேசினாலும், கடவுளைப்பற்றியும், புராணங்களைப்பற்றியும் பேசாமல் விடவே மாட்டார். அவருடைய அரசியல் பிரசாரத்துடன் கூடவே கடவுள் பிரசாரமும், புராணப்பிரசாரமும் நடந்துதான் தீரும். அவருடைய சகாக்களாகிய மற்ற அய்யர், அய்யங்கார், ஆச்சாரியார்களும் இம்மாதிரியே பிரசாரம் பண்ணிக்கொண்டே வருகின்றனர். இதற்கு உதாரணமாகச் சமீபத்தில் அவர் வெளிட்டிருக்கும் ஒரு அறிக்கையைக் கவனிக்க வேண்டுகிறோம். அவ்வறிக்கை வருமாறு:—

"நாளது டிசம்பர் மாதம் 28-தேதி மகாத்மா காந்தி பம்பாய் வந்து சேருவார். அன்றையதினத்தைத் தமிழ்நாடெங்கும் திருநாளாகக் கொண்டாட வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். அன்று மாலை சாதி, மத, கட்சி பேதங்கள் எல்லாவற்றையும் மறந்து, தமிழ்நாட்டில் உள்ள ஆண்கள், பெண்கள் ஆனவரும் பொதுக்கூட்டத்தில் கூடவேண்டும். நமது ஒப்பற்ற தலைவர் அளவில்லாத தேக சிரமங்களுக்கு உள்ளாகியும், சௌக்கியமாகத் திரும்பி வந்ததைக் குறித்து ஆண்டவனுக்கு நன்றி செலுத்திப் பிரார்த்தனை செய்யவேண்டும். அன்றைய தினம் நமது மகிழ்ச்சிக்கு அறிகுறியாகச் சொந்த வீடுகள், பொதுக்கட்டிடங்கள் எல்லாவற்றிலும் தேசியக்கொடி பறக்க விடவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். (இந்தியா)

என்பது அவ்வறிக்கையாகும்.

இந்த அறிக்கையின் சுருக்கமான கருத்து, "திரு. காந்தியவர்கள் பிரயாணஞ் செய்த காலத்தில் உடம்பு சௌக்கியமாக இருந்தது ஒன்று. பிரயாணஞ் செய்து திரும்பி வந்தது ஒன்று. ஆகிய இந்த இரண்டு காரியங்களைச் செய்து விட்டார். இதற்காக "ஆண்டவனுக்" என்பவனுக்கு குநன்றியும் பிரார்த்தனையும் செய்வது ஒன்று. தேசியக்கொடி பறக்க விடுவது ஒன்று. ஆகிய இந்த இரண்டு காரியங்களையும் செய்யவேண்டும்" என்பதாகும்.

உண்மையிலேயே திரு. காந்தியவர்களுக்கு ஒருஜித ஆபத்தும் உண்டாகாமல் இருந்ததற்குக் காரணம் ஆட்டுப்பாலும் பேரீச்சம்பழங்களும், நிலக்கடலைகளும், டாக்டர்களும், ஆங்கில அரசாங்கத்தார் அவருக்கெனத் தனியாகப்பாது காப்புக்கென ஏற்படுத்தியிருந்த போலீசுமேயாகும்.

இரண்டாவது, குறிப்பிட்ட இடங்களுக்குப் பிரயாணம் செய்து குறிப்பிட்ட இடத்திற்குத் திரும்பி வந்ததற்குக்காரணம் ரயில், கப்பல், மோட்டார் முதலியவைகளேயாகும்.

ஆகவே திரு. காந்தி அவர்கள் சௌக்கியமாகப் பிரயாணஞ்செய்து திரும்பியதற்காக நன்றி செலுத்தவேண்டுமானால் ஆங்கில அரசாங்கத்தார் போலீஸ்காரர்கள், ரயில்வே அதிகாரிகள், கப்பல் அதிகாரிகள், மோட்டார் ஓட்டிகள் ஆகிய இவர்களுக்கும், அவருக்குப்பால் சப்பி செய்த ஆடுகளுக்கும், பேரீச்ச மரங்களுக்கும், நிலக்கடலைகளுக்குமே நன்றி செலுத்த வேண்டும், இதுதான் உண்மையும், அறிவுடைமையுமாகும். இதை விட்டு விட்டு ஒன்றுமில்லாத ஏதோ ஒன்றைச்சொல்லி அதற்காக நன்றி செலுத்துங்கள்; பிரார்த்தனை செய்யுங்கள் என்று கூறுவதும், தேசியக்கொடி பறக்கவிடுங்கள், என்று சொல்லுவதும் மக்களை மூட நம்பிக்கையில் முழுகவைக்கவா? அல்லவா? என்றுதான கேட்கின்றோம்.

தேசியக்கொடி பறக்கவிடுவதில் ஒரு குறும்புத்தனமான விஷயமும் அடங்கியிருப்பதையும் எடுத்துக்காட்ட விரும்புகிறோம். சொந்த வீடுகளில் தேசியக்கொடி பறக்கவிடுவதைப் பற்றி யாரும் ஆட்சேபிக்கமாட்டார்கள். ஆனால் பொது இடங்களில் பறக்க விடுவதைப்பற்றி தான் மக்களுக்குள் மனவேற்றுமைகளும், தகராறுகளும், விரோதங்களும் விளையக்கூடும். ஆகவே இவ்விஷயத்தின் மூலம் சிறிது கிளர்ச்சியும் உண்டாக்கூடும் என்பதும் நிச்சயம்.

அன்றியும் இம்மாதிரி பிரார்த்தனை செய்வது, நன்றி செலுத்துவது, தேசியக்கொடி பறக்கவிடுவது என்பவைகளின் மூலம் இதுவும் ஒரு பண்டிகையாகவும், திருவிழாவாகவும், கொண்டாடப்பட வேண்டுமென்பதும் திரு. ராஜகோபாலாச்சாரியார் அவர்களின் கருத்தாகும். நாம் திருவிழாக்களும், பண்டிகைகளுமே ஒழிய வேண்டுமென்று பிரசாரஞ் செய்து வருகின்ற காலத்தில் காங்கிரஸ் பார்ப்பனர்கள் இப்மாதிரி அரசியலின் போல், திரு. காந்தியின் பெயரால்—காங்கிரசின் பெயரால் புதுப்புதுப் பண்டிகைகளை ஏற்படுத்தி வருகிறார்கள் என்பதைக்காட்டவே இதை எழுதினோம். ஆகையால் இவைபோன்ற மூட்டாள்தனமான செயல்களுக்கு ஏமாறுமலிருக்குமாறு பொதுஜனங்களுக்கு எச்சரிக்கை செய்கிறோம்.

திரு. படேலின் வைதீகம்.

திப்பாரா ஜில்லா மாஜிஸ்திரேட்டை இரண்டு மாணவிகள் அக்கிரமமாகச் சுட்டுக்கொன்ற கொடுஞ் செயலைக்கண்டிக்கும் பொருட்டு பம்பாயில் பெண்களின் கண்டனக்கூட்டம் ஒன்று கூடிற்று. அதில் காங்கிரஸ் தலைவர், திரு. வல்லபாய் படேல் அவர்கள் பேசும் போது கீழ்க்கண்டவாறு கூறினர்.

"இது மிகவும் கொடிய குற்றம். இந்தியப் பெண்களின் பாரம்பரை வழக்கத்திற்குத் தகுந்த செய்கையாகாது. இந்தியப்பெண்கள் சமூகத்திற்கே இது ஒரு நீங்காத பழியாகும். அவர்களுடைய புகழுக்கே கேடுவிளைக்கின்றது. உயிர்களை அழிக்கக்கூடிய கருவிகளைப் பெண்கள் கையில் எடுப்பதே தகாத காரியம். உயிரை உற்பத்தி செய்வதும் காப்பாற்றுவதுமே அவர்களுக்கு இடப்பட்ட கட்டளையே யன்றி, கொல்லும்படி கட்டளையிடப்படவில்லை"

என்பது திரு. படேல் அவர்களின் பேச்சு. இதிலுள்ள அபிப்பிராயங்களில் கொலை செய்யும் அக்கிரமத்தன்மையைக் கண்டிக்கும்சொற்கள் முழுவதையும்நாம் பாராட்டுகிறோம். இவ்வாறு கொலை செய்த—வெறி பிடித்த பெண்களின் கொடுந்தன்மையை நாம் பலமாகக் கண்டிக்கின்றோம். ஆனால் "உயிரை உற்பத்தி செய்வதும் அதைக்காப்பாற்றுவதுமே அவர்களுக்கு இடப்பட்ட கட்டளை" என்று கூறிய பழைய வைதீக அபிப்பிராயத்தை நாம் சிறிதும் ஒப்புக்கொள்ளமாட்டோம். பெண்கள் பிள்ளை பெற்று வளர்க்கக்கூடிய வெறும் யந்திரங்கள் அல்லர். அவ்வாறு யந்திரங்களாக வைக்கப்பட்டிருப்பதும் தவறு; ஆண் மக்களின் சுயநலம்; இந்து மதத்தின் ஆபாச வழக்கமாகும். பெண்கள் ஆண்களைப்போலவே சகல உரிமைகளையும் பெறத்தகுதியுடையவர்கள் என்பது திரு. படேல் அவர்களின் பாந்த அறிவுக்குத்தோன்றாமல் போனதைக்கண்டு ஆச்சரியப்படுகின்றோம்.

விருதுநகர் முனிசிபல் சேர்மென்.

விருதுநகர் முனிசிபல் கௌன்சிலுக்கு விருது நகரில் நடைபெற்ற மூன்றாவது சுயமரியாதை மகாநாட்டின் காரியதரிசியாயிருந்த திரு. வி. வி. ராமசாமி அவர்கள் சேர்மனாகவும், மகாநாட்டில் பெரிதும் ஈடுபட்டு உழைத்த திரு. எம். எஸ். பி. எஸ். பெரியசாமி அவர்கள் வைஸ்சேர்மனாகவும், தேர்ந்தெடுக்கப்பட்டதைக்கேட்டு மிகவும் மகிழ்ச்சியடைகிறோம். விருது நகரில் நமது இயக்கத்தின் ஆணிவேராக இருக்கின்ற திரு. எம். எஸ். பி. சென்தில்குமார நாடார் அவர்கள் வாலிபர்கள் கையில் நிர்வாகங்களை ஒப்புவிக்கவேண்டும் என்னும கொள்கையுடன் திரு. வி. வி. ராமசாமி அவர்கள் சேர்மனாகவும், எம். எஸ். பி. எஸ். பெரியசாமி அவர்கள் வைஸ்சேர்மனாகவும் இருக்கும்படி செய்த பெருந்தன்மையையும் பாராட்டுகிறோம்.

ஈரோடு முனிசிபல் சேர்மென்.

ஈரோடு முனிசிபாலிட்டிக்கு ஜனப், கே. எ. ஷேக்தாவுது அவர்கள் இரண்டாம் முறையும் சேர்மனாகத் தேர்ந்தெடுக்கப்பட்டதையும், திரு. ஈ. வி. ஈஞ்சப்ப செட்டியார் அவர்கள் வைஸ்சேர்மனாகத் தேர்ந்தெடுக்கப்பட்டதையும்பற்றி நாம் சந்தோஷத்துடன் பாராட்டுகிறோம். ஒரு சிலர் திரு. ஷேக்தாவுது அவர்கள் சேர்மனாக வராமல் திரு. சீனிவாச முதலியார் அவர்கள் சேர்மனாக வாவேண்டுமென்று ஆசைப்பட்டார்களானாலும் அவ

ர்கள் எண்ணத்திற்குஎள்ளளவும் இடமில்லையென்பதைத்தெரிக்து கொண்டு, அவர்கள் சேர்மென்எல க்ஷன் முடிவுபெறும் வரையிலும் சில வீண் புரளிகளைப் பொதுஜன ங்களிடம் பரப்பிச்சந்தோஷப் பட்டுக்கொண்டிருந்தனர். அதா வது திரு. சீனிவாச முதலி யார் முனிசிபல் கௌன்சிலில் ஸ்தானம் பெற்றபின் 'இனி சேர் மென் கட்சிகலைந்துபோய்விடும் திரு. முதலியாருக்கு மெஜாரிட்டி கௌன்சிலர்களின் ஆதரவு ஏற் பட்டுவிட்டது. இனி அவர் தான் சேர்மென்' என்று சொல் லிக்கொண்டிருந்தனர். இதில் சிறிதும் உண்மையில்லையென்று பொது ஜனங்களுக்குத்தெரிந்த பின் 'திரு. ஷேக்தாவுது அவர் களின் பேரில் இன்னும் பல பொய்யான புரளிகளை எற்படுத்தி விட்டுச்சந்தோஷப்பட்டுக்கொண் டிருந்தனர். கடைசியில் சேர்மன் எலக்ஷன் நடந்த அன்றும் திரு. ஷேக்தாவுது அவர்களைச் சேர் மென் ஸ்தானத்திற்குப் பிரே பணை செய்தபோது அவருக்கு எதிராகத் திரு. சீனிவாச முதலி யார் அவர்கள் பெயரை திரு. ராகவேந்திராவ் என்னும் பார்ப்ப னர்பிரேபணை செய்தார். அதை ஆதரிக்க யாரும் முன் வரவில்லை. இதற்குள் திரு. முதலியார் அவ ர்களே தன்னைப்பிரேபிக்க வே ண்டாமென்றும், தான் விலகிக் கொள்வதாகவும்கூறியதும், இறு தியில் திரு. ஷேக்தாவுது அவர் களே போட்டியின்றி எல்லாக் கௌன்சிலர்களாலும் ஏகமன தாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட தும் பாராட்டக்கூடியதாகும். ஆகவே இவ்வாறு பெரும் வெற் றியுடன் சேர்மனாகவந்த திரு. ஷேக்தாவுது அவர்களும் அவரு டைய இணைபிரியா சகாக்களான மற்ற கௌன்சிலர்களும் இது போலவே என்றும் எதிரிகளுக்கு இடங்கொடாமலிருந்து நகர நல த்தைக் கவனிப்பார்களென்று நம்புகின்றோம்.

நன்றி கூறல்.

திரு. ஈ. வெ. இராமசாமி அவ ர்கள்உடல் நிலைசரியில்லாதுஇருந் ததை முன்னிட்டு வருந்தியும், அவர் ஐரோப்பாப் பிரயாணமாகி யிருப்பதைக் குறித்து க்ஷேமம் விசாரித்தும், பல அன்பர்களிட மிருந்து கடிதங்கள் வந்துகொண் டிருக்கின்றன. அவற்றிற்குத் தனி த்தனியே பதில் எழுதமுடியா மல் இருப்பதால் கடிதம் எழுதிய அன்பர்கட்கெல்லாம் இதன் மூலம் எனது வந்தனத்தைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

ஈ. வெ. ரா. நாகம்மாள்.

சென்னை சுயமரியாதை மகாநாடு.

பண்டிதர். திருஞானசம்பந்தர் எழுதியது.

சுயமரியாதையன்பர்களே! நா ளை 26, 27-12-31 டிசம்பரில் சென்னை பச்சையப்பன் கல்லூரி ஹாலில் நடைபெறப்போகிறது. இம்மகாநாடு சென்னைக்கு மட்டு மாயினும் இம்மகாநாடு வெளி ஜில்லா வாசிகட்கும் இன்றியமை யாத மகாநாடாகும். ஏனெனில் நமது ஈ. வெ. ராமசாமியார் ஐரோப்பாகண்டத்திற்குச் சென் றிருக்கும்தருணத்தில்நமதுஇயக் கத்தைப் பலப்படுத்த சுயமரியா தை வீரர்களை ஒன்று சேர்ப்ப தற்கு அடிகோல்வேண்டிய மகா நாடு ஆதலால் தளர்ச்சியின்றி வெளியூர்களிலுள்ள சுயமரியா தைச்சங்கத்தினர்களும் மற்றவர் களும் தவறாமல் விஜயம் செய்து நமது தலைவர் வருகிறவரையில் யாம் செய்யவேண்டிய திட்ட த்தை வகுக்கவேண்டியது அவசி யமானபடியால், எல்லா அன்பர் களும் இளைஞர்களும் விஜயம் செய்யக்கேட்டுக்கொள்ளு கிறேன்.

தோழர் இராகவனின் இலங்கை விஜயம்.

நமது சுயமரியாதைத்தொண் டர் தோழர், அ. இராகவன் 19-12-31ல் இலங்கைக்கு விஜ யஞ் செய்வார். மூன்று வாரம் கொழும்பு யூனியன் பிளேசி லுள்ள டி. வி. கே. காதர்மீரு சாகிப் அண்டு கம்பெனியில் தங் கியிருப்பார் இதனிடையே காலி, கண்டி, நுவரெலியா முதலிய விடங்களுக்கும் செல்வார்.

போலீஸ் ஸ்டேஷன் பக்கத்திலுள்ள சலவைச் சாலையில் திருட்டு.

ஈரோடு கோர்ட்டு வீதி 41-ம் நெம்பர் கட்டிடத்தில் (போலீஸ் ஸ்டேஷன் பக்கம்) சலவைச் சாலை வைத்திருக்கும் சின்னத் தம்பி மேஸ்திரி சலவைச்சாலை யில் 13-12-31ந்தேதி இரவு திரு டர்கள் மொகுட்டைப்பிரித்து உள் சென்று சுமார் ரூபாய் 200 மதிப்புள்ள சலவைத் துணிகளைக் களவு செய்து கொண்டு போய் விட்டார்கள். இதனைப்போலீசார் புலன் விசாரித்து வருகின்றார்கள் என ஒரு நிருபர் எழுதுகிறார்.

நாகை தேசபக்த சமாஜம்.

8-12-31ல் நடை சமாஜ பொ துக்கூட்டம் தோழர் ஜி. சீனிவா சன் அவர்கள் தலைமையில் கூடி யது. பெரும்பான்மை அங்கத்தி னர்கள் விஜயம் செய்திருந்த தோடு வெளி ஸ்தாபனங்களைச் சேர்ந்த அன்பர்களும், ஏராள மாக குழுமி இருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. கூட்ட ஆ ரம்பத்தில் சமாஜ முன்னேற்றத் திற்கான பல விஷயங்கள் ஆலோ சித்து தீர்மானிக்கப்பட்டது. இரண்டாவதாக "பிரபல சமூக சீர்திருத்தக்காரரான தோழர் ஈ. வெ. ராமசாமி அவர்கள் தேச சேவைகள் அடைந்துவருவதை க்கேட்டு இச்சமாஜம் சந்தோஷப் படுகிறது" என்ற தீர்மானம் ஏக மனதாய் தீர்மானிக்கப்பட்டது.

அதோடு "தற்காலம் காங்கிரஸ் காரர்களாலும், மற்றவர்களாலும் பொதுவாக நடத்தும் சத்தியாக் கிரகங்களும் குறிப்பாக மதுமறி யத்தும் இன்னும் இது போன்ற செயல்களும் வெறும் அரசியல் ஆதாயமாக உபயோகிக்கப்பட்டு அதனால் வைதிக வர்ணாச்சிரமத் தையும், மத நடு நிலைமையும் அ ழிக்கும் காங்கிரஸ் ஸ்தாபனத்த க்கு ஆதிக்கத்தை தேடுவதாகத் தெரிவதால் அம்மாதிரி ஆதிக்கத் திற்கு இடம் கொடுப்பது சமாஜ கொள்கைகளுக்குப்பெரிதும் வி ரோதமானதாலும், மறியலால் சிறிது நன்மைஎற்படுவதாகச்சிலர் சொன்னாலுங்கூட அதையும் இனி இச்சமாஜம் ஆதரிக்கக்கூடாதென அபிப்பராயப்படுகிறது; எனி னும் இதனால் எந்த தனி அங் கத்தினர்களின் சுதந்தரத்தையும் பாதிக்கக்கூடாதென்றும், நமது சமாஜக் கொள்கைகளுக்கு முரண் படுவதாக இருக்கும் எந்த ஸ்தா பனத்தின் குறிப்பிட்ட கொள்கைகளைசமாஜம்எதிர்த்துப் பிரசாரம் செய்யவேண்டுமென் றும் தீர்மானிக்கிறது" என்ப தாகத் திருத்தி அமைக்கப்பட்ட தீர்மானமானது பலத்த விவாதத் திற்குப்பிறகு திருத்தத்திற்கு எதி ர்த்த ஒருவரைத்தவிர மற்றெல் லோராலும் தீர்மானம் அங்கீகரி க்கப்பட்டு நிறைவேறியது. அசல் தீர்மானமே ஆலோசனைக்கு வரா தபடி எதிர்த்த காங்கிரஸ் மாயை யில் சிக்குண்ட இரண்டொரு அன்பர்கள் மாத்திரம் தங்கள் பிரயத்தனம் பலியாதென அறி ந்தும் கூட்டத்தில் கலந்து கொ ள்ளாமல் ஒதுங்கி இருந்து விட் டனர் என்றும் தெரிகிறது; எனி னும் கூட்டம் இனிது முடிந்தது என மெ சங்கக் காரியதரிசி எழு துகிறார்.

சுயமரியாதையின் அரிய நோக்கங்கள்.

டி. எஸ். மாணிக்கம் (வயது 12)

சுயமரியாதை இயக்கமானது 6, 7 வருடங்களுக்கு முன், தோன்றிய இயக்கமாகும். இவ்வியக்கம் தோழர் ஈ. வெ. இராமசாமிப் பெரியாரால் ஏற்படுத்தப்பட்டது. இவ்வியக்கத் தின் கொள்கையெல்லாம் மனிதரின் மூட நம்பிக்கையை தகர்த்தி வைக்க ஏற்பட்டவை. முக்கியமாக இங்கு இரண்டொன்றை மாத்திரம் குறிப் பிடுகிறேன். (1) மதப்பேய் பிடித்த வனை அவற்றினின்றும் நீக்குவது. (2) கோயில் குளங்களை நம்பி மோசம் போனவர்களை அவற்றினின்றும் நீக் குவதற்கு வேண்டிய வழிகள். முத லாவது மதப்பேயை எடுத்துக்கொண் டால் நம் நாட்டில் எத்தனையோ மதங் கள் உண்டு. அவை இந்து மதம், கிருஸ்துமதம், பௌத்தமதம், இஸ் லாமதம் முதலிய இம்மதங்கள் எதற் காக? மனிதர் என்ற உலகில் பிறந் தால் எல்லோருக்கும் ஒரே அவயவ ங்கள் உண்டு; ஆதலால் மதங்கள் எதற் காக ஏற்பட்டன? இம்மதங்கள் எல் லாம் ஒழிந்தால் சமத்துவம் வளரும். நம்நாட்டில் சமத்துவம் வளராததற்கு காரணம் இதுவே. இரண்டாவதாக, கோயில் குளங்களை நம்பி மோசம் போவோர் எண்ணிலர். இதற்குக் காரணம் என்ன? அறியாமையே கார ணம். கோயிலில் உள்ள கல்லில் தெய்வம் இருப்பதாக எண்ணி தேங் காய், பழம், புஷ்பம்முதலிய வைகளை கடவுளுக்குச் செலுத்துவதாக அங் குள்ள பட்டர்கள் கையில் கொடுக்கி றார்கள். அப்பட்டர்கள் ஜனங்களை ஏமாற்றி, ஜனங்கள் கொண்டுவந்த சாமான்களை வாங்கித் தங்கள் வயிற் றை நிரப்புகிறார்கள். என்ன அறி யாமை! எத்தனைய மூடத்தனம்! எண்ணிப்பாருங்கள். கல்லைத்தொழு வதின் காரணமென்ன? நாம் ஒரு கல் லை எடுத்துக்கொள்வோம். அக்கல்லை நாம் இரண்டாக உடைத்து ஒரு கல் லை வாசலில் பதிக்கிறோம் என்று வைத்துக்கொள்வோம். வாசலில் பதித்த கல்லை மடக்களே மிதிக்கி றோம், தெய்வமாகப் பாவித்த கல்லில் பூவும், நீரும் சாத்துகிறோம். என் நாம் ஒரு கல்லை இழிவாகவும், மற் றொரு கல்லை புனிதமாகவும் கடத் துகிறோம்? இதைக்குறித்தே சிவவாக் கியர் கீழ்க்கண்ட பாடலைப்பாடி இருக் கிறார் அது வருமாறு.

ஓரைபுனை கல்லை நீ புடைத்
திரண்டாய் செய்தமே
வாசலில் பதித்தகல்லை
மடக்களே மிதிக்கிறீர்,

மதிப்புரைகள்

மேஜையில் வைக்கும் உருவப்படம்.

நமது இயக்கத்தலைவரும், தந்தையும் ஆகிய திரு. ஈ. வெ. ராமசாமியின் உருவப்படம் அடங்கிய மேஜையின் மேல் வைக்கும் பேட்ஜ் ஒன்று வரப்பெற்றோம். இது சட்டையில் அணியும், நமது தலைவர்களின் பேட்ஜ்கள் தயாரித்த ஜலகண்டாபுரம் அர்த்தநாரி அவர்களால் தயாரிக்கப்பட்டது. 5" X 35/8" அளவில் மிக அழகாக கண்ணைக்கவரும் திறமுடையதாக இருக்கிறது. இதில் திரு. ஈ. வெ. ராமசாமியின் முழு உருவமும் நிற்கின்றமாதிரியில் அமைக்கப்பட்டிருக்கின்றது. நமது தலைவரின் உருவப்படம் எப்பொழுதும் எதிரில் இருக்கவேண்டும் என்று எண்ணுவோர்க்கு இதைவிடச்சிறந்த உருவப்படம் வேறொன்றும் இல்லை. பேட்ஜ் கோழிமுட்டை வடிவமாகவும், நிலையாக நிறுத்திவைப்பதற்குப் பின் புறத்தில் கொக்கியும் வைக்கப்பட்டிருக்கின்றது. நமது இயக்கத்தின் மேலும், தலைவர்கள மேலும் கொண்ட அளவுகடந்த ஆசையினாலும் ஊக்கத்தினாலும் ஏராளமான பொருட் செலவைக்கவனியாது இதைத் தயாரித்த திரு. அர்த்தநாரி அவர்களை நாம் மிகவும் பாராட்டுகிறோம். சா-சி

விலாசம்;—
அ. ப. அர்த்தனரி & பிரதர்,
ஜலகண்டாபுரம் (சேலம் ஜில்லா.)
(சா. சி.)

இந்திய மணவியல் அல்லது திருமண நிகழ்ச்சிவிளக்கம்.

இது குடிசைக்கிழார் திரு அ. கிதப்பரனர் என்பவரால், எழுதப்பட்டு, மறைமலையடிகள் கல்விக் கழகத்தாரால் வெளியிடப்பட்டது. இதில் முதல் இயலில் ஆரியருடைய மணம் இன்னது என்பதையும், தமிழர் மணம் இன்னது என்பதையும் விளக்கிக் கூறப்பட்டிருப்பதுடன், மணங்களின் செலவுகள் குறைக்கப்பட வேண்டு மென்பதையும், புரோகிதம் நீக்கப்பட வேண்டுமென்பதையும் ஒப்புக் கொள்ளப்பட்டிருக்கிறது. மற்ற இயல்களில் மணம் எப்படிச்செய்யப்பட வேண்டும் என்பதைச் சொல்லும்போது, இப்பொழுது வைதிக மணத்தால் நடைபெறும் சடங்குகளையே மாற்றியும், திருத்தியும், குறைத்தும், ஏறக்குறைய இப்பொழுது நடைபெறும் மணம் போலவே நடத்துவதற்கான விஷயங்களே சொல்லப் படுகின்றன. சமஸ்கிருத மந்திரங்களுக்குப் பதிலாகத் தமிழ் மந்திரங்களாகப்பலபாடல்களும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. பல சடங்குகளின் போது மந்திரங்கள் வேண்டிய அவசியமில்லையென நிராகரிக்கப்பட்டிருக்கின்றன. இப்புத்தகம் தற்காலம் நடைபெறும் வைதிகச் சடங்குள்ள மணங்களின் விஷயங்களைத் தெரிந்து கொள்ள விரும்புகின்றவர்களுக்கும், வைதிக மணத்தையே சமஸ்கிருத மந்திரம், புரோகிதரில்லாமல் நடத்த விரும்புகிறவர்களுக்கும் பயன் படக்கூடிய தொன்றாகும். இதன் விலை 0—6—0. விலாசம்:—

மறைமலையடிகள்,
கல்விக்கழகம், பரங்கிமலை.
(சா. சி.)

பெண்களின் சிருங்காரம்.

(சென்னை கே. எஸ். நாதன்)

1. இங்கிலாந்து தேசத்துப் பெண்கள்காதில்குண்டலமணிவர்.
2. பிரான்சு தேசத்து நார் மண்டிப்பெண்கள் சரிகைத்தொப்பி அணிவர்.
3. ரோமானியா தேசத்துப் பெண்கள் தம் தலைமயிரை நான்காகப் பிரித்து ஜடைப்போட்டுக் கொள்வர்; பலவர்ணமான சரிகையுடைகளைத் தரிப்பர்.
4. ஸ்பெயின் தேசத்துப் பெண்கள் தொப்பி தரிப்பதோடு, கையில் விசிறியும் பிடித்திருப்பர்.
5. இத்தாலியா தேசத்துப் பெண்களுள் பவளமாலை யணியாதவர்களெருவருமில்லை. இம்மாலை திருஷ்டிதோஷத்தைப் போக்குவதாம்.
6. துருக்கிதேசத்துப் பெண்கள் பலவிதமான நகைகளும், பட்டுச்சாய், குல்லாய் முதலியவு மணிவர்.
7. மேயேரி ஜாதிப் பெண்கள் உடம்புமுற்றும் பச்சைக்குத்திக் கொள்வ ,

8. ஜப்பான் தேசத்துப்பெண்கள் இடுப்பில் பட்டுக்கச்சையை கட்டிக்கொள்வர்.
9. சையாம் தேசத்துப் பெண்கள் பட்டுக்கச்சையை பூணூல் போலத்தரித்துக்கொள்வர்; பல வகையான வர்ண உடைகளில் இவர்கட்கு மிகப்பிரியம்.
10. அரபி தேசத்துப் பெண்கள் பல்லிற்கு நீலச்சாயமும், சைனு தேசத்துப் பெண்கள் பல்லிற்கு கறுப்புச்சாயமும், ஜப்பான் தேசத்துப் பெண்கள் பல்லிற்கு விவாகமாகும் பரியந்தம் மஞ்சட் சாயமும், விவாகமான பிறகு சிறுப்புச் சாயமும் போடுவார்கள்.
11. மலேஜர்ச்சி பிலகோ தேசத்துப்பெண்கள் தம்பற்களைகருவியால் தேய்செய்து, அவற்றில் தங்கச்சுரை, அல்லது வெள்ளிச்சுரைகளைத் தரிப்பர்.
12. ஆப்பிரிக்கா தேசத்துப் பெண்கள் தம் நகங்கட்கு மஞ்சள், சிவப்புவர்ணங்களைப் பூசுவர்.
13. பெரூஷியா தேசத்துப் பெண்கள் பெரிதாயும், கனமுமாயுள்ள நகையை தரிப்பதில் மிகு பிரியமுடையவராக விருக்கின்றனர்.
14 இந்து தேசத்துப் பெண்கள் பலவிதமான உடைகளும், அணிகளும் தரித்திருப்பதும், அவர்கள் நகங்களில் சிகப்புவர்ணமுண்டாக, அவற்றில் அழகுநிலைச்சாந்துபூசுவதும் மிகப்பிரசித்தமாம்.

குறிப்பு:—மேற்கூறியவை அந்தந்த நாடுகளில் நடைபெற்ற புராதன வழக்கங்களாகவும், மத வொழுக்கமாகவும் இருந்தன. இப்பொழுது கல்விகற்ற பெண்களிடம் இப்பழக்கங்கள் மாறி வருகின்றன. ப—ர்.

(7ம் பக்கத் தொடர்ச்சி)

யாது என்பது சொல்லுகிறோம்.

அடுத்தபடியாக, காங்கிரஸ்ஒரு காரியமும் செய்யாமலிருக்கும் போதே, காங்கிரசைச் சேர்ந்த சிலர் வாயளவில் ஆலய சத்தியாக்கிரகத்தை ஆதரித்துப் பேசும் போதே, காங்கிரஸ்காரர்கள்தீண்டாமை போகவேண்டுமென்று மேடைக்கூச்சல்இடும்பொழுதே நமது, திரு. ஆச்சாரியார் அவர்கள் காங்கிரஸ் மதாபிமானமை தவறிவிட்டது என்று கூச்சலிட ஆரம்பித்து விட்டார். உண்மையிலேயே காங்கிரஸ் இவ்வேலைகளைச்செய்ய எண்ணுமானால் நிச்சயமாக, நமது திரு. ஆச்சாரியார் போன்ற வைதிகர்கள் அதை ஒழித்து விடுவார்கள் என்பதில் சந்தேகமில்லை.

அடுத்தபடியாக, மேல் நாட்டில் மதம் ஒழிந்து விட்டதாம். நமது நாட்டில் அப்படி ஒழியாமல் பாதுகாக்கவேண்டுமாம், மதம் பாதுகாக்க வேண்டுமென்றால் பிராமண ஆதிக்கம் நிலைநிற்க வேண்டும் என்றுதானே அர்த்தம். இனியும் மதத்தைக்கொண்டு ஏமாற்றிக் கொண்டிருக்க முடியாது என்று எச்சரிக்கிறோம். பகுத்தறிவும், கஷ்டமும், பொருளாதாரச்சங்கடமும் அதிகப்படுகின்ற காலத்தில் மதம் தூள் தூளாகப் பறக்கவேண்டியதைத் தவிர நிலைக்க முடியாது. ஆகையால் திரு. ஆச்சாரியார் வீண் கலக்கம் வேண்டாம் என்று மீண்டும் எச்சரிக்கின்றோம்.

மகா-ரா-ரா-ஸ்ரீ

திருப்பூர் மு. மு. கோர்ட்டு.

1931 O. S. No. 862.

திருப்பூர் டவுன் பாங்கு லிமிடெட் by டைரக்டர்கள் இன்சார்ஜ் 1. C. L. பவான் சிங், 2. K. சாமிநாத செட்டியார்—வாதிகள்.

கோயமுத்தூர் தாலூகா செட்டிபாளையம் கிராமம் மஜரா ஓராட்டுகுப்பி செட்டிபாளையத்திலிருக்கும் சொக்கய்யஞ் செட்டிமகன் சொ. சாமியப்ப செட்டியார்—பிரதிவாதி.

வாதிகள் வக்கீல் பிரதிவாதிக்கு தெரியப்படுத்தும் நோட்டீசு.

வே நெம்பரில் வாதிகள் பிரதிவாதி பேரில் புரோ நோட்டுப்படி ரூ. 744-11-0க்கு தாவா கூடர்ந்து வே நெம்பர் விசாரணைக்காக 1932 ஜனவரி மாதம் 9 தேதி வாய்தா போடப்பட்டிருக்கிறது. அதில் ஏதாவது பிரதிவாதிக்கு ஆக்ஷேபனையிருந்தால் வே தேதிக்கு திருப்பூர் மு. மு. கோர்ட்டுக்கு நேரிலோ வக்கீல் மூலியமாகவோ ஆஜராகி ஆக்ஷேபனையை தெரிவித்துக் கொள்ளலாம், தவறினால் ஒரு தலைப்பக்ஷமாக உத்திரவு ஏற்பட்டு விடும் என்கிற சங்கதி தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

(Sd.) Y. D. ஜேசுதாசன்,
அட்வகேட்.

திருப்பூர் 17-12-31.

மலையாளம் சில்க் அங்கவஸ்திரம்.
தூய்யவெள்ளை உடலுக்கானபட்டு தினசரி துவைத்துஉபயோகிக்கலாம் சலவையும் செய்யலாம். வருஷக் கணக்கில் உபயோகிக்கக்கூடியது. கம்பி அல்லது குண்டஞ்சுகரையுள்ளது.

	ரூ. அ.
2½ வீதி 5 முழம் பட்டு 1க்கு	1-10
டஜன் 1க்கு	17-0
2¼ 5 முழம் பட்டு 1க்கு	1-6
டஜன் 1க்கு	15-0
3 வீதி 8 முழம் வேஷ்டி 1க்கு	3-8

S. K. R. வீவிங் பாக்டரி:
கோட்டார், திருவிதாங்கூர், I. S.

பூசனைக்கு வைத்த கல்லில்
பூவும் நீரும் சாத்துகிறீர்
ஈசனுக்குகந்த கல் எந்தக் கல்
சொல்லுமே என்றார்.

இக்காரணத்தை முன்னிட்டு கடவுள் எங்குமில்லை என்று தெரிகிறோம். சிலர் குறுக்கா கடவுள் இன்றி நீ எவ்விதம் பிறந்தாய் என்று கேட்பார்கள். நாம் அதற்கு கடவுள் எவ்விதம் பிறந்தார் என்று கேட்டலாம், இதற்கு அவர்கள் பதில் சொல்ல மாட்டார்கள். சொன்னால் நாம் பதில் சொல்லலாம்.

முனிசிபல் தலைவர்கள் தேர்தல்

விருதுநகர் முனிசிபல் தலைவர் தேர்தல்.

திரு. வி. வி. இராமசாமி போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டார்.

விருதுநகர் முனிசிபாலிட்டிக்கு தலைவரையும், உபதலைவரையும், தேர்ந்தெடுப்பதற்காக 12-12-31ந்தேதி மாலை 4.30 மணிக்கு முனிசிபல் ஆபீசில் சிவகாசி சப்கலெக்டர் எஸ். கே. செட்டூர் எம். ஏ. ஐ. சி. எஸ். அவர்கள் தலைமையில் நடைபெற்றது. புதிய அங்கத்தினர்கள் யாவரும் ராஜவிஸ்வாசப்பிரமாணம் செய்தனர். பின் மாஜி சேர்மென் மகமது இப்ராகிம் ராவுத்தர் அவர்கள் 3வதுமாகாண சுயமரியாதை மகாநாட்டின் ஸ்வாகதாதரியும், பிரபல வியாபாரியுமான திரு. வி. வி. இராமசாமி அவர்களைத் தலைவராக இருக்கவேண்டுமென பிரேரேபித்தார். அதை திரு. எம். சுப்பிரமணிய பிள்ளை அவர்கள் ஆமோதிக்க வேறு பிரேரேபணைகள் வராதகால் திரு. வி. வி. இராமசாமி அவர்களே போட்டியின்றி தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார் அவருடையநண்பர்கள் பலர்மலர் மாலை சூட்டி அவரின குணாதிசயங்களையும் பொது ஜனசேவையையும் புகழ்ந்து பேசினர்கள்.

பின் புதிய தலைவர் திரு. வி. வி. இராமசாமி அவர்கள் தலைமையில் உபதலைவர் தேர்தல் நடைபெற்றது. திரு. எம். எஸ். பி. எஸ். பெரியசாமி அவர்கள் (திரு. எம். எஸ். பி. செந்திக்குமாரர் அவர்களின் புதல்வர்) உபதலைவராக இருக்கவேண்டுமென்று திரு. எஸ். பி. வின்சென்ட் அவர்கள் பிரேரேபித்தார். அதை திரு. பெ. அழகர்சாமி நாயக்கர் ஆமோதிக்க திரு. பெரியசாமி அவர்கள் போட்டியின்றி உபதலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். சுயமரியாதைச்சங்க அங்கத்தினர்களும், அவருடைய நண்பர்களும், மலர்மாலை சூட்டினர். தலைவர் அவர்களும், உபதலைவர் அவர்களும் வந்திருந்தவர்கட்கெல்லாம் வந்தனமளித்தபின் கூட்டம் கலைந்ததென ஒரு நிருபர் எழுதுகிறார்.

விருந்து.

புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர் திரு. வி. வி. இராமசாமி அவர்கட்கும், உபதலைவர் பெரியசாமி அவர்கட்கும்இவ்வூர் அமெரிக்கன் சுயமரியாதைச் சங்க அங்கத்தினர்களால் தேனீர் விருந்து நடத்திவைக்கப்பட்டது அவ்விருந்திற்கு இராமநாதபுரம் ஜில்லாபோர்டு காரியதரிசி திரு. டி. புருஷோத்தமம் அவர்கள் தலைமைவகித்தார். அவ்விருந்திற்கு உள்ளூர் பிரபலஸ்தர்களும், உத்தியோகஸ்தர்களும் வந்திருந்தனர். தலைவர், உபதலைவர் ஆகிய இருவருக்கும் சுயமரியாதை கட்சியின் சார்பாகவும், திரு. கருப்பையா அவர்களும் உபசாரப்பத்திரங்கள் வாசித்துக் கொடுத்தனர்.

பின் தலைவர், உபதலைவர் தகுந்த பதில் சொன்னார்கள். திரு. உத்தண்டன் வந்தனோபசாரம் கூறகூட்டம் கலைந்ததாகவென ஒரு நிருபர் எழுதுகிறார்.

திண்டுக்கல்.

திண்டுக்கல் முனிசிபாலிட்டிக்குத் தலைவரைத் தேர்ந்தெடுக்க 12.12.31 தேதி டிவிஷனல் ஆபீசர் திரு. ராமவர்ம ராஜா அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அதை போது எம். எஸ். பி. சோலை ராடர் போட்டியின்றி தலைவராகத் தேர்தெடுக்கப்பட்டார். அன்று மாலை புதிய தலைவரின் தலைமையில் உபதலைவர் தேர்தல் நடைபெற்றது. அதில் திரு. அப்துல் வாகப் சாகிபு போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப்பட்டாரென ஒரு நிருபர் எழுதுகிறார்.

பழனி.

திரு. எம். பி. மங்களக்கவுண்டர் இவ்வூர் முனிசிபல் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டாரென ஒரு நிருபர் எழுதுகிறார்.

கும்பகோணம்.

9.1.31ந் தேதி இவ்வூர் முனிசிபல் தலைவர் தேர்தல் சப் கலெக்டர், திரு. ஆர். சிவராமகிருஷ்ணன், ஐ. சி. எஸ். அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அதில் திரு. திருவேங்கடத்தான் அய்யங்கார் தலைவராகவும், திரு. எம். ஸி. எஸ். சாமிநாத செட்டியார் உபத்தலைவராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டாரென ஒரு நிருபர் எழுதுகிறார்.

நிருப்பத்தூர்.

9-12-31 தேதி நடைபெற்ற கூட்டத்தில் திரு. ஆர். ராமசாமி ஐயர் சேர்மெனாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

திருவாரூர்.

இந்நகர் நகரசபைத் தலைவர் தேர்தல்நேற்றுகாலை 10.மணிக்கு முனிசிபல் ஆபீசில் நாகை சப்கலெக்டர் திரு. பி. கி. மேனன், ஐ. ஸி எஸ். அவர்கள் தலைமையில்நடைபெற்றது. சென்ற மூன்று முறையாக தொடர்ச்சியாகப் பொதுஜன நன் மதிப்பைப் பெற்று நகரசபைத்தலைவராக இருந்துவரும் திரு. பாவா கி. கோபாலசாமிமுதலியார் அவர்களே தலைவராக ஏகமனதாய் நான்காம் முறையாகத் தெரிந்தெடுக்கப்பட்டார். தலைவர் தேர்தலை ஆவலுடன் எதிர்நோக்கிக் கூடியிருந்த பொதுஜனங்கள் வெற்றி பெற்ற திரு. கோபாலசாமிமுதலியார் அவர்களுக்கு ஏராளமான பூமாலைகள் சூட்டி தங்கள்மகிழ்ச்சியை அறிவித்தார்கள். பின்னர் சப்கலெக்டர், நகர சபைதலைவர், நகரசபை அங்கத்தினர்கள் உள்ளிட்டபுகைப்படம் ஒன்று எடுக்கப்பட்டதாகவென ஒரு நிருபர் எழுதுகிறார்.

சிதம்பரம்

டிவிஷனல் ஆபீசர் திரு. கி. துரைசாமி அய்யங்கார் அவர்கள் தலைமையில் இவ்வூர் முனிசிபல் அங்கத்தினர்கள் கூட்டமொன்று கூடி, திரு. வேணுகோபால்பிள்ளை அவர்களைச் சேர்மெனாகத் தேர்ந்தெடுக்கப்பட்டதென ஒரு நிருபர் எழுதுகிறார்.

சேலம்.

10-12-31 தேதி டிவிஷனல் ஆபீசர் தலைமையில் இவ்வூர் முனிசிபல் தலைவர்தேர்தல் நடைபெற்றது. அதுசமயம் திரு. டி. எம். சின்னையா பிள்ளை சேர்மெனாகத் தேர்ந்தெடுக்கப்பட்டாரென ஒரு நிருபர் எழுதுகிறார்.

குன்னூர்.

4-12-31ந்தேதி புதிய கலெக்டர் இவ்வூர் முனிசிபல் தலைவர் தேர்தல் நடைபெற்றது. திரு. ஹாட்டன் அவர்கள்போட்டியின்றித்தலைவராகதேர்ந்தெடுக்கப்பட்டார். வைஸ் சேர்மெனாக திரு. சாமண்ணா தேர்ந் தெடுக்கப்பட்டாரென ஒரு நிருபர் எழுதுகிறார்.

விழுப்புரம்.

9-10-31 தேதி இவ்வூர் முனிசிபல் தலைவர் தேர்தல் நடைபெற்றது. திரு. எஸ். சிதம்பர அய்யர் போட்டியின்றி முனிசிபல் தலைவராகவும் உபத்தலைவராக ஹாபன் துரை அவர்கள் தேர்ந்தெடுக்கப் பட்டார்களென ஒரு நிருபர் எழுதுகிறார்.

நாகபட்டணம்.

நாகை முனிசிபல் சபையின் கூட்டமொன்று10-12-31ம்தேதி சப்கலெக்டர் திரு. பி. ஸி. மேனன் அவர்கள் தலைமையில்நடைபெற்றது. அவ்வமயம் திரு. ராமநாத முதலியார் அவர்கள் சேர்மெனாகத் தேர்ந்தெடுக்கப்பட்டாரென ஒரு நிருபர் எழுதுகிறார்.

வேலூர்.

10-12-31 தேதி வேலூர் டெப்டி கலெக்டர் திரு. எகுநாதராவ் அவர்கள் தலைமையில் இவ்வூர் முனிசிபல் கவுன்சிலர்கள் கூட்டம் நடைபெற்றது. அதுபோது திரு. ரங்கசாமி அய்யங்கார் அவர்களை சேர்மெனாகத்தேர்ந்தெடுக்கப்பட்டதென ஒரு நிருபர் அறிவிக்கிறார்.

மாயவரம்.

10-12-31 தேதி இவ்வூர்முனிசிபல் கவுன்சிலர்கள் கூட்டமொன்று ரெனினியூ டிவிஷனல் ஆபீஸர் திரு. டி. கே. சுந்தரராஜ முதலியார் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அப்பொழுது திரு. பி. காசிலிங்கம் பிள்ளை அவர்களை தலைவராக போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டாரென ஒரு நிருபர் தெரிவிக்கிறார்.

விளம்பரம்

கொளம்பில் கீழ்கண்டவிலாசத்தில் 'குடி அரசு' பதிப்பகபுஸ்தகங்களும் இதர சுயமரியாதை புஸ்தகங்களும் சு. ம. தலைவர்கள் போட்டோபேட்ஜ். குடி அரசு. தமிழன். புதுவை முரசு. குமரன். சண்டமாருதம், விடுதலை ஆகிய பத்திரிகைகளும் கிடைக்கப் பெறலாம்.

A S. பரமசிவம்.
45. காலிரோட்,
பம்பலபிட்டி, கொளம்பு.

"சன்மார்க்கன்"
தமிழ்மாதப்பத்திரிகை.
பல அரிய கட்டுரைகளுடன் கைவல்யம் கட்டுரையும் தொடர்ச்சியாகவருகின்றது.
ஆண்டுசந்தா.
உள்நாடு ரூ. 1—0—0.
வெளிநாடு ரூ. 1—4—0.
ஆசிரியர்:-
சுவாமி சிவதேசம்,
"சன்மார்க்கன்" பழனி.

சுயமரியாதைவாலிபர் சங்கம், கோயமுத்தூர்.

ஷ சங்கத்தின் வாராந்திரக்கூட்டமொன்று 13-12-31ந்தேதி மாலை 7மணிக்கு சங்கத்துணைத்தலைவர்தோழர் கே. வைத்தியலிங்கம் அவர்கள் தலைமையில்கூடியது. அதுசமயம்தோழர் ஆர். ரங்கசாமிஅவர்கள் "காதல் மணம்" என்னும் பொருள்பற்றியிக அழகியதோர் சொற்பொழிவாற்றினார்

பின்னர் அவரை யாதரித்துத்தோழர்கள் பி. ரங்கசாமி, எஸ். ஏ மாணிக்கம், எச். எஸ். முனுசாமி, வி கெ ப்பண்ணன், ஆர். கலைச் சுந்தரேசர்கள் பேசினார்கள், உலகமக்கள்வாழ்க்கையின்பரதுயரத்தை, ஒற்றுமையுற்று வாழ முற்படுமபாதையில் அவர்களுக்கு இடையூறு விளைக்கும்ஜாதிமத, மதமூட தகர்க்கப் படுவதற்குக்காதல் மணங்கள்தழைத் தோங்க வேண்டியஅவசியத்தைப்பற்றியும், பெரும்பாலும் காதல் இம்மியுமில்லாதமணங்கள் நடைபெறுவதாலேயே மனமொப்பாத்துணைவருடன் வாழவிரும்பாத தம்பதிகள் விபசாரத்திலீடுபட்டுப் பலவித நோய்கட்கும் அடிமையாவதால், ஒவ்வொருவாலிபனும் ',காதல் மணம்" புரிய முற்படுதலே அவனது இணையமைவாக்கடமைகுமென்றகருத்துப்பற்றியும் விகவிரிவாகவும். உருக்கமாகவும் சொற்பொழிவாற்றினார்கள்.பேசியதுகுறிப்பிடத்தக்கதும், பாராட்டத்தக்கதுமாகும்.

பின்னர் தலைவர் முடிவுரைக்குப் பின்வந்தஉபசாரத் துடன்கூட்டம் 9-மணிக்கு இனிது முடிந்ததென ஒருநிருபர் எழுதுகிறார்.

மதுரை சுயமரியாதைச் சங்கம். திறப்புவிழா வைபவம்.

13-12-31ந் தேதி மாலை 4-30 மணிக்கு, மதுரை நீழமாசிவீதி மேல்சரகில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் சுயமரியாதைச்சங்கத்தின் திறப்புவிழா சிறுஞ் சிறப்புடன் நடைபெறுவதற்கு முன்னதாகவே நகரெங்கும், மக்களுக்கிடையே ஓர் கிளர்ச்சியை உண்டுபண்ணிவிட்டது. இதன் பயனாக திறப்புவிழா நடைபெறும் இடமாகிய மேல்மாடியில் ஜன நெருக்கம் ஏற்பட்டுவிட்டது. நகரின் நாலாபக்கங்களிலிருந்தும், பல மரியாதைக்குரியவர்களென்று சொல்லப்படும் அனேகர்களும், விஜயம் செய்திருந்தார்கள். திறப்புவிழாவை இயற்றும் தலைவர் கௌரவ்வ தோழர். எஸ் ஸ்ரீராமச்சந்திரன் சரியாக 4-30 மணிக்கு சங்கத்திற்கு வரவும், பலத்த கரகோஷத்தினிடையே வரவேற்கப்பட்டார்.

திரு. எஸ். நெல்லைசாமி, திரு. எஸ். இராமச்சந்திரன் அவர்கள் தலைமை வகித்து, சங்கத்தைத்திறந்துவைக்க வேணுமாய்க் கேட்டுக்கொண்டார். அதைத்தோழர் விநாயகமூர்த்திமோதினார். தலைவர் ஆசனம் அமரவும், தோழர் எ. எஸ். அருணாசலம் சங்கத்தின் சார்பாக அவருக்கு ஓர் அழகிய வரவேற்புப்பத்திரம் வாசித்துக்கொடுத்தார்.

தலைவர் தோழர் எஸ். இராமச்சந்திரன் சுயமரியாதைக் கார்களுடைய கொள்கை மக்களிடையே உயர்வு தாழ்வில்லையென்ற அடிப்படையான கொள்கை யுடையவர்களானதால், தனக்கு வாசித்துக்கொடுத்த வரவேற்புப்பத்திரத்தை ஏற்றுக்கொண்டதில் பொறுமை பிரியமில்லையென்று சொல்லி, சென்ற 1925ம் வருடத்தில் ஸ்தாபித்த சங்கதனைக் குறிப்பிட்டு, மதுரையில் சுயமரியாதையில் அதிதீவிர பற்றுள்ளவர்கள் 10 பேர்கள் இருந்தால் போதுமென்றும் பேருக்கு ஆசாத்தினர்களாகச் சேர்ந்து பின்னால் ஒரு வேலையும் செய்யப்படாமலிருக்கக்கூடாதென்றும் கூறினார்.

பின் திரு. எ. எஸ். வெங்கிடசாமி ஐயர் தலையருக்கு மாலை சூட்டியபின் திருவாளர்கள், எஸ். கிருஷ்ணசாமி எம். ஏ., பி. எல்., சிவசங்கர எஸ். ஆர். எம். வெங்கிடாசலம், அழகர்சாமி ஆகியோர்கள் பேசினார்கள். திரு. ரெத்தினம் அவர்கள் சுயமரியாதை பாடல்கள் பாடியபின் திரு. எ. எஸ். அருணாசலம் அவர்களால் இயக்கமும், லாபிபர்கள் தொண்டும் என்பதைப்பற்றி பேசியபின் தலைவர் முடிவுரைடன் கூட்டம் கலைந்தென ஒரு நிருபர் எழுதுகிறார்.

[5ம் பகுதித் தொடர்ச்சி.]

மந்திரிகளாகவும் செய்து வைத்தார் என்பது திருவிளையாடல் புராணத்திலுள்ள ஒரு கதை. சிவபிரான் ஆணா? பெண்ணா? அவர் ஆணையிற்றே எப்படி முலைகொடுத்து காப்பாற்றி இருக்கமுடியும்? அப்படியே காப்பாற்றி இருந்தாலும் இருக்கட்டும்; இப்போது எத்தனையோ தாயில்லாக்குழந்தைகளுக்குப் பாலில்லாமலும், எத்தனையோ குழந்தைகளுக்குத் தாயிருந்தும் தாயிடத்தில் பாலில்லாமல் கஷ்டப்பட்டுக்கையைப்பிசைந்துகொண்டு கத்துபவர்களுக்கு முலை கொடுத்து ரக்ஷிக்கக்கூடாதா? மேலும், எத்தனையோ கோடி படிக்காத மக்களுடன் படித்த மக்களும் வேலை இல்லாது கஷ்டப்பட்டு கஞ்சியும் இல்லாது அலைகிறார்களே அவர்களுக்கு மந்திரி வேலை இல்லாது போனாலும் அவர்கள் வாழ்க்கைக்கு வேண்டிய திரவியம் கிடைக்கும்படி ஏதேனுமொரு உத்தியோகம் கொடுக்கக்கூடாதா? அப்படிக் கொடுக்கவில்லையானால் அந்த தத்தெய்வத்தை உண்மையானதென நம்பி எத்தனை காலைக்குத்தான் கட்டி யழுவது.

ஃஃ ஃஃ

புராணங்களில் எந்தப்புராணத்தை எடுத்துக்கொண்டாலும் அதில் தீர்த்தம் என்று ஒன்றுண்டென்றும், அவை திரேகத்தில் பட்டமாத்திரத்திலே சகல பாவமும், சகல வியாதியும் நீங்கி இஷ்டசித்தியும், முத்தி மோக்ஷமும் கிடைக்குமென்றும் இன்னும் அளவிலடங்காது புகழ்ந்தும் எழுதிவைத்திருப்பதை வாசகர்கள் பார்த்தும், கேட்டுமிருக்கலாம். இவ்வளவு பெருமையாய்ந்த தீர்த்தம் திரேகத்தில் பட்டமாத்திரத்திலேயே சகல பாவமும், சகல வியாதியும் நீங்கிவிடும் தீர்த்தத்தில் "குஷ்டரோகிகளும், ஒட்டியூதொட்டி வியாதிக்காரர்களும் குளிக்கக்கூடாது" என மதுரை மீனாக்ஷி கோவிலிலுள்ள தெப்பக்குளத்தின் கரையில் போர்டு போட்டிருக்கிறது. அறிவற்ற அண்ணாக்களே! இனியுமா தீர்த்தம்மூர்த்தி என நம்பித்திரிகிறீர்கள்? நீங்கள் வியாதி நீங்கும், முத்திமோக்ஷம்கிடைக்குமென நினைத்து இனியுமா சாக்கடைத்தண்ணீர் (தீர்த்தம்) களில்போய்க்குளித்துத்தொந்தவியாதிகளை பரவச்செய்யப்போகின்றீர்கள்? உங்கள் எண்ணப்படியும், சாத்திரங்களில் சொல்லியுள்ளபடியும் சகலவியாதிகளும் குணமாகுமானால் குஷ்டரோகம் போன்ற ஒட்டியூதொட்டி வியாதிகள் ஏன் குணமாகாது? சகல வியாதிகளுடன் குஷ்டரோகம் போன்ற வியாதிகளும் சேர்ந்தது தானே? குஷ்டம், ஒட்டியூதொட்டிமுதலிய வியாதிகள் குணமாவதில் மற்ற எந்த வியாதிகளும் குணமாகாதது ஏனோ? எல்லா வியாதிகளும் குணமாகுமானால் இந்த போர்டுபோட்டவர்களைப்புராணத்தையும், தீர்த்தத்தையும் அமைத்தவர்களென்று சொல்லுவதா? அன்றி தீர்த்தங்களுக்குப்புராணங்களிற்சொல்லிய பெருமை இல்லை என்று சொல்லுவதா? அல்லது அங்குபோய்க்குளிப்பவர்களுக்குப்புத்தி இல்லை என்று சொல்லுவதா? இன்றேல், நாம் சொல்லுவதே போன்று புராணங்களும், தீர்த்தங்களும் இன்னும் புராணங்களிலே சொல்லப்பட்ட சம்பிரதாயங்களும் வஞ்சக நெஞ்சமுடையோர்கள் அறியாமக்களை ஏமாற்றுவதற்காகச்செய்த சூழ்ச்சி என்று சொல்லுவதா? என்பதை வாசகர்களே முடிவுகட்டவேண்டுமென விட்டுவிடுகிறோம். எது எப்படி இருந்தாலும், புராண இதிகாசங்களும், அநுசொல்லப்பட்ட தீர்த்தம், மூர்த்தி முதலியவைகளும் இன்னும் வைதீக சம்பிரதாயங்களும் "பொய்" என்பதைப் பொதுஜனங்கள் அறிந்துகொள்ள வேண்டுமென ஆசைப்படுகிறோம்.

ஃஃ ஃஃ

கதர்எவ்வளவுவிலையானாலும் அதிற்கிடைக்கும் லாபமெல்லாம்இந்தியாவிலேயே தங்கிவிடுகிறதுஎன்றும், ஒரு அணைக்கட்டானியநாட்டிற்குப் போவதில்லை என்றும், ஆனால் ஒவ்வொருவரும் கதராணிய வேண்டியது அவசியமென்றும்சொல்லப்படுகிறது. அப்படியானால், நாற்றுக்குஐந்துவட்டிவீதம் வட்டியாகும் செட்டுகளின் பணமும் இந்நாட்டில்தான் தங்குகின்றன. கல்லையும், மண்ணையும், செம்பையும்கடவுள்என்று சொல்லி அறியாமக்களிடம்பணம் பறிக்கும் குருக்கள்பணமும் இந்தநாட்டில் தான்தங்குகின்றன. சீரார்த்தமென்றும், திட்டு சடங்குஎன்றும்சொல்லிக்கொண்டுபோமர மக்களின் பணத்தைக் கொள்ளைகொள்ளும்புரோகிதன் பணமும்இந்தநாட்டில்தான்தங்குகின்றன. தாசிவீட்டைநோக்கிப்போகும் பணமும்இந்தநாட்டில்தான் தங்குகின்றன. கொள்ளையடிப்பவன்பணமும் இந்தநாட்டில்தான்தங்குகின்றன. சுருக்கச்சொன்னால்நம்நாட்டிலுள்ளபணங்களை எல்லாம்சேர்த்துக்கட்டி நம்நாட்டிலுள்ள சமுத்திரங்களில் போட்டுவிட்டாலும் அதுவும்நம்நாட்டில்தான் தங்கிவிடும். நம்நாட்டில் தங்குவதற்காக செட்டியின் வட்டிதமுழியும் நீங்கதன், புரோகிதன்முதலியவர்களின் உழைப்பில்லாக்கொள்ளையும், தாசித்தொழிலும்,கொள்ளைத்தொழிலும்,கடவில்பணத்தைப்போடும் அறிவற்றசெயலும்நாம்ஒப்புக்கொள்ளுவோமா? இவைகளைஎல்லாம் ஒப்புக்கொண்டால்தான்கதரின் செயலும் ஒப்புக்கொள்ளமுடியும். நாம் இவைகளெல்லாவற்றையும் ஒப்புக்கொள்ளுவதற்குத்தயாராகஇல்லை. முடியவும்முடியாது! கண்டிப்பாய்முடியாது!!

மனிதவகைக் காட்சிசாலை.

அமெரிக்காவில் சிகாகோ நகரிலுள்ள பீல்டி ம்யூஸியத்தில் உலகிலுள்ள மனிதஜாதியின் ஒவ்வொருவர்க்கத்தினரின் உருவத்தையும் சேகரித்துவைக்க முயற்சிகடைபெறுகிறது. அப்படி எல்லாவர்க்கத்தினரின் உருவங்களும் அமைக்கப்படும் இடத்திற்கு மானிடவர்க்கமண்டபம் என்று பெயரிடப்படும்.

இதற்காக அந்த ம்யூஸியத்தின் அதிகாரிகள் இந்தியாவில் ம்யூஸியங்களின் அதிகாரிகளின் உதவியை காடுகின்றனர். பீல்டு ம்யூஸியத்திலிருந்து ஸ்ரீமதி குரோச்சன் சிகாகோ இந்தியாவுக்கு அனுப்பியிருக்கின்றனர். அம்மாது இந்தியாவிலுள்ள ம்யூஸியங்களின் அதிகாரிகளோடு கண்டு பேசி இந்தியாவிலுள்ளஎல்லா விதமான ஜாதியாரின் உருவங்களை அமைக்க ஏற்பாடு செய்வார். பலவிதமான இந்தியாவிலுள்ள ஜாதியார்கள் உருவ அமைப்புகளைச் சேகரித்துபின்னர் அமெரிக்காவிலிருந்து ஒரு சிற்பி இந்தியாவுக்கு அனுப்பப்படுவார். அவர் உருவங்களைச் செய்து சிகாகோ மானிடவர்க்க மண்டபத்திற்கு அனுப்புவார். இந்த வேலையைச் செய்து முடிப்பதற்காக ஸ்ரீமதி சிரீன் இந்தியாவிலும், இலங்கையிலும் சுற்றுப் பிரயாணம் செய்கிறார்.

WANTED Candidates for Electrical Engineering and wireless. Preparation for London City and Guilds Examination, Rail fare Paid Prospectus on 3 annas stamps.

Technical Institute of India, Ltd., Bombay No. 10

(4ம் பக்கத்தொடர்ச்சி)

விதக்கட்டுப்பாடுமின்றி, இடுக்கணு மின்றி பிறப்புரிமைஇன்பத்தை எங் கேநுகர்கிறார்களோ அங்கேயுள்ள ஆண்மக்கள் நாகரீகநுற்பழுணர்ந்த வர்களாகிறார்கள். அந்நாடே நாகரிகம் பேற்ற நாடாதும்' என்றும் 'பெண் ணுரிமை பொதுவாக உலகில் பல விடங்களிலும் சிறப்பாகச்சிலவிடங் களிலும் பின்னேநாளில் கடியப்பட் டது. உரிமையுள்ள நாடுகள் செழ மையுற்றிருப்பதும், அவ்வுரிமையில் லாநாடுகள் செழுமையற்றிருப்பதுங் கண்கூடு. பெண்நாட்டின் தாயாக லான் அவள் அடிமைப்படுமிடம் அடி மைப்படல் இயல்பு' என காந்திய' மதத்தைச்சார்ந்த அன்பர் திரு. வி. கல்யாணசுந்தாமுதலியார் அவர்கள் கூறியதையும் தமிழ் நாட்டுத் தேசிய வீரர்களாகிய காந்தி பக்தர்கள் ஆரா ய்ந்து பார்க்கத்தக்கது.

உரிமையற்றோர் எந்நாட்டினரா லும் தன் மதிப்பிழந்தவராகவே கரு தப்படுவர். உலகிலே வலிமையுள் ளோர் வலிமையற்றவர் உரிமைகளை ப்பறித்து அவர்கள் உழைப்பால் தாம் சுகமடைந்து வாழ்வாம் என்ற போரா சையாலே நாட்டில் 'அடிமை' வாழ் வென்ற ஒரு பேச்சுந்தோன்றியது. இப்பொழுது இந்தியாவிலே நமது தாய்மார்களின், சோதரிகளின் மனை விமார்களின் உரிமைகளைப்பறித்து அவர்களுக்கு உரிமை கொடுத்தால் அவர்கள் புருஷனுக்கடங்கி நடக்க மாட்டார்கள், விபசாரிகளாய்ப்போய் விடுவர், கற்பென்பது இல்லாமல் போய்விடும்; என்றெல்லாம் கூறி பெண்களின் உரிமைக்குக்கேடுசூழும் நாம் தேசியவிடுதலையடைந்து சுதந் தரம் பெற விரும்பி இளர்ச்சி செய் யும் பொழுது வெள்ளைக்காரன் இந் தியர் சுயராஜ்யமடைய இப்பொழுது லாயக்கில்லை; இன்று நாங்கள் உரி மை கொடுத்துவிட்டால் நாளைய தினம் தங்களுடன் வாழும் தாழ்த் தப்பட்ட சோதரர்களே துன்புறுத்து வர். பக்கத்து தேசத்திலுள்ளவர் கள் படையெடுத்து வந்தால் தன்னை க்காத்துக்கொள்ளும் சக்தி இந்தியர் களுக்கில்லை ஆகையால் இந்தியா உரிமைபெற இப்பொழுது லாயக் கில்லை என்று கூறினால் உடனே சிரியெழும் தேசபக்தர்கள் பெண்மக் களுக்கு 'நீவிர் உரிமை பெறலாயக் கிலலே' யென்று கூறிய தனகொடு மொழியை நினைந்து பார்ப்பதில்லை. ஒருவர் உரிமைக்கு மற்றொருவர் கேடு சூழ்வதினும் கொடுஞ்செயல் உலகில் இல்லை. தான் அனுபவிக்கும் உரி மையை பிறருக்கு வழங்க மறுப்ப வன் மனிதனுகான்' வலிமையுள்ள ஆண்மகன் இந்தியாவில் வலியற்ற பெண்களின் உரிமையைப்பறித்து அவர்களை அடிமையாக்கிய கொடுஞ் செயலுக்காக பலமற்ற இந்தியர்களை வலிமையுள்ள வெள்ளைக்காரன் உரி மை கடிந்து அடிமையாக்கி அடக்கி யாளும்படி இறைவன் செய்துளான் போலும்' என்று ஆங்கில அறிஞர் கூறுகின்றது பெரிதும் கவனிக்கத் தக்கது.

தோழர்களே! உலகிலுள்ள பல வேறு சமயங்களும் தங்களை ஜீவகாரு ண்ய நெறியென்று கூறிக்கொண்டி பெண்ணுரிமையைப்பறித்து கடவுள், வேதம், மதம், சாஸ்திரம், முதலிய வற்றின் பேரால் செய்துவந்த கொடு மைகளைப்போலவே இப்பொழுது தோன்றிய 'காந்தியம்' என்ற போலி மதத்தையும் பொழித்து ஆணும், பெண்ணும் சமத்துவ உரிமைபெற்ற உலகிலுள்ள எத்தேசத்தவருடனும் சமத்துவமாய் வாழத் 'தன்மதிப்பியக் கம்' தோன்றி மக்கள் முன்னேற்றத் திற்கு இடையூறாய் நிற்கும் மதங்களை பொழித்து நாடெங்கும் கலப்புவிவா கம், விதவைமணம், காதல்மணம் பெருக்கி இனமமணம், இணக்க மற்ற மணம் முதலியவற்றையொழி த்து, பணக்காரன் ஆதிக்கத்தை வேரு டன் கல்லி உயர்வு தாழ்வு களைவெ ட்டிவீழ்த்தி யாண்டும் ஜீவகாருண்யம் பொங்கி சமத்துவம், சகோதரத்துவம் சுதந்தரம், வீரம், பகுத்தறிவு முதலிய உணர்ச்சிகளை உண்டாக்க 'சுயமரி யாதை இயக்கம்' கண்டமாநதம் போ ல்யெங்கும் வீசி துடிஅரசு நிலவி ழாச றைந்து வருகின்றது. எனவே அன் பர்களே! இவ்வியக்கம் வெற்றி பெரு விடில் இந்தியாவிற்கு விடுதலை யில்லை. கேசம் விடுதலையடைய நமது சகோதரர்களாகிய தாழ்த்தப் பட்ட சகோதரர்களுக்கும் உரிமை யிழந்த சகோதரிகளுக்கும் நீதிவழங்க முதலில் முயற்சிப்போமாக. அதுவே விடுதலை. அதுவே ஜீவகாருண்யம். அதுவே நமது கடமை.

'பெண்ணினாலு ஞானத்தை
வைத்தான்—புவி
பேணிவளர்த்திடுமீசன்
மண்ணுக்குள்வேசிலமூடர்—நல்ல
மாதரறிவைக்கெடுத்தார்.
கண்களிரண்டினி லொன்றைக்—குத்திக்
காட்சிகொடுத்திடலாமோ?
பெண்களறிவை வளர்த்தால்—மிக்க
வல்லமை பேதமையற்றிடும் காணீர்'
(பாரதியார்)

விதவாவிவாகம்.

சென்னைவிதவா விவாகசபை யின்ஆகாவில் 11-12-31ந்தேதி காலை 7மணிக்கு காஞ்சிபுரம் ஜவு ளிவ்யாபாரம் திரு. சாமிநாதமுத லியார் குமாரர் திரு. எஸ். நடே சமுதலியாரவர்கட்கும், சென்னை புரசைவாக்கம் திரு. முனுசாமி முதலியார் குமாரத்தி திருமதி. லட்சுமியம்மாள் அவர்கட்கும் விதவாவிவாகம் நடந்தேறியது. மணமகன்சுமார் 30வயதுள்ளவர் விபர். மணமகள் இரண்டுகுழந் தைகளுடைய 22வயதுள்ளவரென்றும் சபையின் காரியதரிசி எழு துகிறார்.

கொன்னூர் சமதர்மசங்கம்.

சென்னை கொன்னூர் அம்மன்கோ வில்வீதி 58-வதுஎண்ணுள்ளஇல்லத் தில் 13-12-31 ஞாயிற்றுக்கிழமை காலை 9மணிக்கு மேற்படி சங்கத்தின் சார்பாகதிருவாளர் எஸ். ஷண்முகம் உபாத்தியாயர் தலைமையில்ஒரு பொ துக்கூட்டம் நடைப்பெற்றது. சுமார் 50 வாலிபர்களுக்குமேலாகவே கூடி யிருந்தனர். அதுசமயம் திரு. எம். முனிசாமி மேல்திரியாரால், சமதர்ம சங்கத்தின் ஆதரவில் தொழிலாளர் இரவு பள்ளிக்கூடம் ஒன்று ஆரம்பிக் கவேண்டுமென பிரரேபித்ததின்மூல ம்கல்விபைக்குறித்து சில சொற்பொ ழிவுகளினிடையே தலைவராலும், வா லிபர்களாலும் ஏகமானதாக ஆமோ திக்கப்பட்டு 1932வது ஜனவரிமாத ம் 1-ந்தேதி முதல் மேற்படிபள்ளிக் கூடம் திறக்கப்படுமெனதீர்மானிக் கப்பட்டு கூட்டம்இனிது கலைந்த தென காரியதரிசிஎழுதுகிறார்.

படம்எடுப்பவர்மேல் பாய்ச்சல்.

அமெரிக்கதம்பதிகளான திரு. ஹென்றிலின்ட்எல்பயரையும், அவ ர்மனைவிதிருமதி.சாரஞ்னையும், இந்தி யாவில் பொதுஉடமைபிரசாரஞ் செய்ய வந்தவர்களென்றகுற்றஞ்சாட் டிபம்பாய்ப் போலீசார் கைதுசெய்து 12-12-31ந்தேதி அவர்களைவைசிராய் ஆப்இந்தியாஎன்றகப்பலின் மூலம் காடேடத்தினர். அச்சமயம் புகைப் படம்எடுப்பவர்ஒருவர் அத்தம்பதிக ளைப்படம்பிடிக்க முயன்றார். இதைக் கண்ட திருமதி சாரஞ்தமதுமுகத் தைமறைத்துக்கொண்டார். திரு. ஹென்றிலின்ட் இதைக்கண்ட தம்திடீரென்று புகைப் படம்எடுப் பவர்மேல் பாய்ந்தார். உடனேபட ம்பிடிப்பவர் மிகவும்சிரமத்துடன் அவ ர்கையில் அகப்படாமல் தமதுகுழு களுடன்தப்பினர். இதைக்கண்டதும் மிகவும் ஆச்சரியப்பட்டனர்.



ராஜசித்தாதி லேகியம்.

ரிஜிஸ்தர் செய்யப்பட்டது.

இந்த லேகியத்தைச் சுண்டக்காய் பிரமாணம் காலை, மாலை இரு வேளையும் சாப்பிட்டு வந்தால் தாதுபுஷ்டி, ஜீரணசக்தி இவை களைக் கொடுத்து தாம்புகளுக்குப் பலத்தைத் தரும். சிதக்கடிப்பு, நெஞ்சுக்கரிப்பு, வயிற்றுப்போக்கு, ஜயிற்றுவலி, வயிற்றில் கட்டி, மலச்சிக்கல், பாலியருக்குண்டாகும் சொர்ப்பன ஸ்கலிதம் இவை களைக் குணப்படுத்தும்.

1-கெ. ஒரு சேர்	ரூ. 4-0-0,	அரை சேர்	ரூ. 2-0-0.
கால் சேர்	ரூ. 1-0-0,	அரைக்கால்சேர்	ரூ. 0-8-0.
2-கெ. ஒரு சேர்	ரூ. 3-0-0,	அரை சேர்	ரூ. 1-8-0.
கால் சேர்	ரூ. 0-12-0,	அரைக்கால்சேர்	ரூ. 0-6-0.

T. A. ராமலிங்க முதலியார், ஷண்முகாநந்த வைத்தியசாலை.

அங்காளம்மன் கோவில் தெருவு, செவ்வாய்ப்பேட்டை, சேலம்.

மலாய் நாட்டு நண்பர்கள் கீழ்க்கண்ட எங்கள் கம்பெனிசோல் ஏஜண்டு அவர்களுக்கு எழுதி எல்லா விபரங்களும் தெரிந்து கொ ள்ளவும்.

S. S., F. M. S., J. B.,
மலாய்நாடு பூராவுக்கும் சோல் ஏஜண்டு:—
P. M. வேல்முச்சாமி,
கெ. 616 டத்தோகிராமட் ரோடு, பிறாங்கு. S. S.

(3ம் பக்கத் தொடர்ச்சி)

லாவது, வாஸ்தவத்தில் உயிர்மரித்தவர், மூன்று நாள் பொறுத்து பிழைத்தார் என்பது சாதாரண அனுபவமல்ல. ஆனால் சில பிராணிகள், உயிரைத் துறக்காமலே பல நாள் புதைக்கப்பட்டும், அசைவு அற்றும் இருந்த பிறகு, அசைவு அடையும் சம்பவங்களைப்போல், எசுவும் (Suspended animation) உயிரை இழக்காமலேயே இருந்து, கல்லறை திறக்கப்பட்டவுடன், காற்றின் சம்பந்தத்தால் உயிர்த்து ஏழுந்திருக்கலாமென்பது ஓர் யுக்தி. மூன்றாவது, அவர் உயிர்த்தெழுந்ததாகச்சொல்லும் நூல்களிலேயே அந்த சம்பவம் சரித்திர பூர்வகமாக நடந்ததாகச் சொல்வதற்கு இடமில்லை. அதாவது, எசு உயிர்த்தெழுந்தசம்பவத்திற்குச்சாட்சியம் போதா. எசு உயிர்த்தெழுந்த கதை நான்கு சுவிசேஷங்களில் சொல்லியிருப்பதாகச்சொல்லுகின்றார்கள். ஆனால், இந்நான்கில், இரண்டு தான் உயிர்த்தெழுந்த அபூர்வ சம்பவத்தைக்குறித்திருக்கின்றன. செயின்ட் ஜான் (Saint John) சுவிசேஷம், இச்சம்பவம் நடந்ததாகச் சொல்வதில்லை. செயின்ட் லூய்க் (St. Luke) ஓர் போக்காகக்குறிக்கின்றது. இந்த சுவிசேஷத்தில் சொல்லியபடி, செயின்ட் மாத்யு (St. Mathew) வில் சொல்லவில்லை. ஆதி சுவிசேஷமெனக் கூறும் செயின்ட மார்க் (*St. Mark) இதனைக் குறிக்கவே சாத்தியமே. உலகப் பிரசித்தம் பெற்ற இந்த சம்பவத்தின் கதி விசாரணையில் இது வானால், மற்ற அபூர்வ சங்கதிகளின் கதி என்னும். பிரகலாதன் கதைக்கு ருசுவென்ன? தூணிலுமிருப்பார், துரும்பிலுமிருப்பார் என்றுபிரகலாதன்சொன்னதும், அவன் தகப்பனுடைய இரண்யன், தூணை உதைக்க, நரசிம்மம் தூணைப் பிளந்து வந்த கதை எவ்வித விசாரணைக்கும் இடங் கொடுக்கவில்லை. மத வைராக்கியத்தால் எழுதி வைத்த கதையென்றே, முதல் பார்வையிலேயே தோன்றுகின்றது. சைவத்தைத் தாழ்த்தி, வைணவத்தை உயர்த்த ஏற்பட்ட கதையே அல்லாது இது உண்மையல்ல.

இவ்விதமாகப் பண்டைக்கால நூல்களில் கூறியுள்ள அபூர்வக் கதைகள் யாவும், கற்பனைகளென முடிந்தால், கடவுளுக்கு மற்றென்ன வேலை? பூமி மேல நிகழும் பூத பௌதிக சம்பவங்கள், இயற்கையாகவே நிகழ்வுறக்கண்டோம். பூமி மேல் நடமாடும் இவர்கள் நடத்தையெல்லாம் தாங்களே செய்து வருவது பிரத்தியட்சக் காட்சி. மனிதருடனும், மிருகங்களுடனும், தாவரங்களுடனும், மண், மலை, நீர், சமுத்திரம் முதலிய அசேதனங்களுடனும் கடவுள் கலந்து செய்து வந்ததாகச் சொல்லும் வேத புராண திருவிளையாடல்யாவும், விசாரணையில் கற்பனையாக முடிவதைக் கண்டோம். இனி, கடவுளுக்கு உலகில் என்ன வேலை? ஒரு வேளை நமது உலகில் கடளுக்கு யாதாமொரு வேலையில்லாமற் போனபோதிலும், பிரபஞ்சத்திலுள்ள எந்த உலகிலாகிலும் கடவுளுக்கு ஏதாகிலும் வேலை உளதாவென இனி, கண்டறிவாம்.

(*Revised Version)

காலண்டர் வரப்பெற்றோம்

இரங்கூன் நவீனகதா புத்தக சாலையாரால் அனுப்பப்பட்ட 1932ம் வருட காலண்டர் வரப்பெற்றோம்.

டில்லி தர்பார் தினம்.

சுக்கிரவாரப்பட்டி:- இவ்வூரில் டில்லி தர்பார் தினம் 12-12-31ந்தேதி திருத்தங்கல் பஞ்சாயத்துக்கோர்ட்டு பிரசிடெண்டும், சுயமரியாதை அன்பருமான திரு. ஆர். ரங்கசாமி(ஹெட் மாஸ்டர்) அவர்களின் தலைமையில் ஒரு விமரிசையாகக்கொண்டாடப்பட்டது. அன்று மாலை 2-30முதல் 4-30 வரை பக்கவாத்தியங்களுடன் பாட்டுக்கச்சேரியும், பின்பு பாடசாலையிலிருந்து பிரபல கனவான்களுடன் மாணவர்கள் மாட்சிமை தங்கிய சக்ரவர்த்தி-சக்ரவர்த்தினியாரின் படங்களுடனும், கொடிகளுடனும் ஊர்வலமும் நடந்தது. இடையிடையேமரணவர்களுக்குத் தின்பண்டங்கள்வழங்கப்பட்டன. இறுதியாகப்பாடசாலை வந்து 'நேஷனல் அந்தம்' பாடியபின் கூட்டம் இனிது கலைந்ததென காரியதரிசி எழுதுகிறார்.

சர்க்கார் பணத்தைத் துர்விநியோகப்படுத்திய பாதிரியார்.

வேலூர் போலீஸ் டிரெயினிங் ஸ்கூல் தலைமை குமஸ்தா திரு. கிருஷ்ணமாச்சாரியார் என்பவர் கைது செய்யப்பட்டிருப்பதாக வேலூர்ச் செய்தி அறிவிக்கிறது. ஏராளமான கவர்ன்மெண்டு பணத்தைத்துர்விநியோகப்படுத்தியது சம்மந்தமாகவே அவர் கைது செய்யப்பட்டிருப்பதாக நம்பப்படுகிறது என ஒரு நிருபர் எழுதுகிறார்.

"சுயமரியாதைச்சுடர்"

எதிர்பாருங்கள்! எதிர்பாருங்கள்!!

சுயமரியாதை

இயக்கத்தின் அரும்பெரும் தத்துவங்களைப் பல பிரபல சுயமரியாதைத் தலைவர்களைக்கொண்டு, எளிய நடையில் எழுதுவித்து சிறிய புத்தகங்களாக வெளியிட ஏற்பாடு செய்திருக்கின்றோம். யாவரும் வாங்கிபடித்துப் பயனடைவதற்கு அனுகூலமாக ஒவ்வொரு புத்தகத்திற்கும் விலை "ஒரு அணா" ஏற்படுத்தியிருக்கின்றோம். அவற்றை "சுயமரியாதைச்சுடர்" என்ற வரிசையில் ஒவ்வொன்றாக வெளியிடவும் ஏற்பாடு செய்திருக்கின்றோம். இவ்வரிசையில் "முதல் இதழ்" கூடிய விரைவில் வெளிவரும்.

சில ஆயிரம் பிரதிகளே அச்சாவதால் ஆர்டருக்கு முந்திக் கொள்ளுங்கள். சுயமரியாதை அன்பர்கள் யாவரும் இவற்றை வாங்கி ஆதரிக்கக்கேட்டுக்கொள்வதுடன் இயக்க வளர்ச்சியில் ஆர்வமுள்ளவர்கள் இவற்றை ஏராளமாக வாங்கி இலவசமாக ஏழை மக்களுக்கு கொடுத்துதவவும் வேண்டிக்கொள்கின்றோம்.

எல்லா ஊர்களிலும் விற்பனை ஏஜண்டுகள் தேவை.

"தாராளமான நிபந்தனைகள்" "ஏராளமான கமிஷன்"

விபரம் வேண்டுவோர் உடனே எழுதவும்.

விலாசம்:—மானேஜர்,

கற்பகம் கம்பெனி, புஸ்தக இலாக்கா,

நெ. 257, விங்கி செட்டித்தெரு, ஜி. டி. மதராஸ்.

இல்வாழ்க்கையில் இன்பம் அனுபவிக்க விரும்பினால் நமது

தங்கபஸ்பம்

மனோரஞ்சித லேகியத்தில்

சேர்த்துச்சாப்பிடுங்கள்.

தாது கூஷணத்தை நிவர்த்திக்கும். தாது விர்த்தியடையும். நீத்துப்போன இந்திரியத்தை இறுக்கி மணியாக்கி விடும். அடங்காத ஆண்மை, வீரியம் உண்டாகும். சோம்பல், அசதி, சோர்வு நீங்கும். தேக பலம், தேஜஸ், அறிவு வளர்ச்சி, மனோ வலிமை உண்டாகும். 30 வேளை தங்க பஸ்பம் ரூ. 7. 30 வேளை லேகியம் ரூ. 3. வி. பி. செலவு வேறு. வெளிநாட்டார் ஆர்டருடன் ரூ. 5 முன்பணமனுப்பவும்.

குறிப்பு:— நம்மிடம் சகல வியாதிகளுக்கும் வேண்டிய உயர்ந்த மருந்துகள் கிடைக்கும். வியாதி விபரம் எழுதவும்.

S. ராஜகோபால் பிள்ளை, தெண்டபாணி வைத்தியசாலை, பழநி. (S. I.)

விற்பனைக்காக நம்மிடம் உள்ள
இதர பதிப்புப் புஸ்தகங்கள்.

1.	இயற்கைமதம் ...	0—8—0
2.	சிதம்பர ரகசியம் ...	0—8—0
3.	சுதந்தரப்போர் அல்லது உப்பள முற்றுகை	0—4—0
4.	சுயமரியாதைத் தத்துவக் கீதங்கள் ...	0—4—0
5.	பகுத்தறிவே விடுதலை அல்லது ஜீவாத்மா இல்லை (சித்திரப்படங்களுடன் 100 பக்கங்களுக்கு மேல் உள்ளது) ...	0—6—0
6.	மாதர் சுதந்தரம் or பெண்மக்கள் பெருமை	0—8—0
7.	ஆராய்ச்சி அணிகலம் ...	0—12—0
8.	சென்னை லோக்கல் போர்ட் ஆக்ட் ...	2—0—0
9.	மோட்டார்கார் இயந்திர சாஸ்திரமும் அதன் அனுபோகப் பயிற்சியும் (50 படங்களுடன் 200 பக்கங்கள் அடங்கிய பெரிய புஸ்தகம். ஆர்டருடன் 4 அணா ஸ்டாம்பு அனுப்பவேண்டும்.) ...	2—0—0
	ஈ. வெ. ராமசாமியின் போட்டோ படம் ...	0—8—0

குறிப்பு:—புஸ்தகங்களுக்கு ஸ்டாம்பு வைத்து அனுப்புகின்றவர்கள் புஸ்தக கிரயத்துக்கு மேலாக புஸ்தகம் ஒன்றுக்கு ஒன்றரை அணா ஸ்டாம்பு அனுப்பவேண்டும். 8 அணாவுக்குக் குறைந்த ஆர்டருக்கு வி. பி. அனுப்பப்படமாட்டாது, ஆர்டர்களுக்கு மாதிதொகையாவது மூன்பணம் அனுப்பவேண்டும்.

'குடி அரசு' 'ரிவோல்ட்' மாலைகள்.

குடி அரசு மாலைகள் கோர்வையாக மூதல் வருஷத்திலிருந்து சென்ற வருஷம் வரை 5 வருஷகாலம் வெளியான மலர்களைத் தனித்தனி வருஷமாக பைண்ட் செய்து புஸ்தகமாக வைக்கப்பட்டிருக்கிறது.

ஒவ்வொரு வருஷமாலை கிரயம் ரூ. 4—0—0
ரிவோல்ட்டு ஒரு வருஷமாலை பைண்ட் செய்தது கிரயம் ரூ. 4—0—0

மானேஜர், குடி அரசு புத்தகாலயம்,
ஈரோடு.

பண்டிதர், உயர்திரு. சாமி சிதம்பரனார் அவர்களியற்றிய

மாதர் சுதந்திரம் அல்லது
பெண் மக்கள் பெருமை.

என்னும் அரிய நூல் விலை அணா 8. (எட்டு)

கிடைக்குமிடங்கள்:- "குடி அரசு" புத்தகாலயம். ஈரோடு.
இம்பீரியல் பிரஸ், மாயவரம்.

மனைவி தேவை.

மலேயா நாட்டில் வசிக்கும் வயது 30 முதல் 40-க்குட்பட்ட ஒரு பிரபல கனவானின் வாழ்க்கைத் துணைக்கு ஒரு பெண் வேளாளர், நாயுடு, செட்டி, முதலியார் தேவை. அக்கனவானின் யோக்கியதைகளாவன:-வயது 55 ஜாதி ஜாதியார்களாய் இருந்தால் நலம். வேளாளர், யோக்கியதை ஆங்கில யோக்கியதை-தமிழ் கல்வி கற்றிருக்கற்றவர். பென்ஷன் மாதம் ருந்தால் போதும். தன்னுடைய மாதம் 1-க்கு பல நூறு ரூபாய் வருகின்றது. இதுதவிர நல்ல சரீரக்கட்டுடன் வியாதியில்லாமல் மற்றபடியான தகுந்த பெருமை இருத்தல்வேண்டும். நிறமும் சொத்தும் உடையவர். இஷ்டமுள்ளவர்கள் முழுவிபரத்தையும் நல்ல கைடசரீரமும் அழகிய தோற்றத்துடன் தங்கள் உருவப்படத்தையும் அனுப்பவும். நல்ல குண நடத்தை உடையவர். மலேயாவும் ஒழுக்கமும் உடையவர். ஈரோடு "குடி அரசு" நிருபருக்கு.

நீங்கள்

கதரின் புராட்டை உணராவேண்டுமா?

அப்படியானால்

திரு. எஸ். ராமநாதன் எம். ஏ., பி. எல்.,
அவர்களால் தொகுக்கப்பட்ட

'கதர்-மூட நம்பிக்கை' என்னும் ஆங்கில புத்தகத்தைப் படியுங்கள்.

இதன் விலை அணா 0-2-0. ஒரு புத்தகம் வேண்டுவோர் 3 அணா ஸ்டாம்பனுப்பவும்.

மானேஜர் "குடி அரசு" ஈரோடு.

'சண்டமாருதம்'
சுயமரியாதைத்தமிழ் தினப்பதிப்பு.

லண்டன் மகாநாட்டுச் செய்திகள்
அச்சமற்ற கண்டனங்கள்
ஆணித்தரமான அபிப்பிராயங்கள்
ருசிகரமான குறிப்புகள்
தேனின் இனிய "திரட்டுப்பால்"
நகைச்சுவை மிக்க நாவல்கள்
மெய்கூச்செறிக்கும் "மின்வெட்டு"
அறிவைப்பெருக்கும் "அஷ்டதிக்கு"
முதலியன "சண்டமாருத"த்தில் வெளியாகின்றன.

சந்தா விவரம்.

உள்நாடு மாத சந்தா	ரூ. 1—2—0
தனிப்பிரதி	ரூ. 0—0—6
வெளிநாடு வருட சந்தா	ரூ. 18—0—0
தூமாதம் ...	ரூ. 10—0—0

மானேஜர்:
'சண்டமாருதம்'
திருச்சிராப்பள்ளி.

சுயமரியாதைப் பொக்கிஷம்
எனும்
புதுவைமுரசு விசேஷ அநுபந்தம்.

இதில், சுயமரியாதை இயக்க அறிஞர், தலைவர், அதிகாரப்பூர்வமான படங்கள், அறிவுபூர்வமான கட்டுரைகள், விளக்கப்படங்கள், கவிதைகள் அடங்கியிருக்கின்றன. பத்திரிகைகள் புகழ்ந்தும் நமது அநுபந்தத்தைப்பற்றித் தெரிவித்துள்ள கருத்துக்களையும் வாசகர் அறிவர். 130 பக்கங்கள் கொண்டது விலை தூரே அணா.

3 காப்பிகளுக்கு குறைந்த ஆர்டருக்கு வி. பி. யில் அனுப்ப முடியாது. ஒரு காப்பி வேண்டுவோர் 7 அணா ஸ்டாம்பு அனுப்புக.

மானேஜர்,
புதுவைமுரசு,
புதுச்சேரி, S. இந்தியா.

மதியமும், தேதியமும் எலக்ஷன் சூழ்ச்சி.

குடி அரசுப் பதிப்பக வெளியீடுகள்.

சந்தாதார்களுக்கு முக்கால் விலை.

கைவல்யம் அல்லது கஷுக்கியானம்.

இது கைவல்ய சாமியாசவர்களால் எழுதப்பட்ட கட்டுரை களைத்தொகுத்து வெளியிடப்பட்டது. இக்கட்டுரைகளைப்படிப் பதால் அனேக சாஸ்திர, புராண, இதிகாசங்களையும் அவற்றில் உள்ள சாதிப்புரட்டு, சமயப்புரட்டு, முதலியவைகளையும் உணர்ந்து கொற்ற பண்டிதராகலாம். இதன் விலை அணு. 0—8—0

இராமாயண ஆராய்ச்சி.

இதில் இராமாயணத்தின் ஆபாசங்களை அறியலாம். கம்ப இராமாயணம், வால்மீக இராமாயணம் இரண்டிலும் உள்ள மூழல் களையும், ஒன்றற்கொன்று உள்ள வேறுபாடுகளையும் ஆராய்ந்து அவற்றில் உள்ள தெய்வீகப்புரட்டுக்களை வெளியாக்குவது.

இதன் விலை முதற்பாகம் பாலகாண்டம் அணு. 0—4—0

இரண்டாம் பாகம் அயோத்தியாகாண்டம் அணு. 0—8—0

ஞானசூரியன்.

இதில் வேதம், புராணம், ஸ்மிருதி முதலிய வைகளின் ஆபாசங்களைக் காணலாம். மதங்களின் ஆபாசங்களையும், மதச் சடங்குகளின் ஆபாசங்களையும் அறியலாம், இதை ஒரு முறை படித் தால் ஆரியர்களின் புராதன நாகரீகத்தின்வண்டவாளம்முழுதும்தெ ரியும். பெரியபுத்தகம். 150 பக்கம். இதன் விலை அணு. 0—4—0

மநுநீதி மருமம்.

இது மநுதரும சாஸ்திரத்தில் உள்ள அநீதிகளையும், பார்ப் பனர், பார்ப்பனரல்லாதாரை அடிமைப்படுத்துவதற்கு ஏற்படுத்தி யுள்ள சூழ்ச்சிகளையும் விளக்குவது. இதன் விலை அணு. 0—2—0

இராமலிங்க சுவாமிகள் பாடல் திரட்டு.

இது இராமலிங்க சுவாமியால் பாடிய அருட்பாவில், ஆறும் திருமுறையில் உள்ள பாடல்களிலிருந்துதொகுக்கப்பட்டது. இதில் உள்ள பாடல்களால், வேதம், புராணம், மதம் முதலிய வைகளின் சூழ்ச்சிகளையும், அவைகள் பொய் என்பதையும் உணரலாம்.

இதன் விலை அணு. 0—2—0

சுயமரியாதைத் தாலாட்டு.

இதில் தீண்டாமைக் கொடுமை, சாதி சமயக் கொடுமை, வரை பணக்காரக் கொடுமை முதலிய வற்றைக் கண்டித்துக் கூறப் பட்டிருக்கிறது. இனிய பாடல். எளிதில் பொருள் விளங்கும்.

இதன் விலை அணு. 0—2—0

சோதிடப் புரட்டு.

இதில், சோதிடம் என்பது பொய் என்பதையும், பார்ப் பனர்களும், புரோகிதர்களும், ஜன சமூகத்தை ஏமாற்றுவதுதான் சோதிடமென்பதையும் இனிமையான--சுலபமான பாடல்களால் விளக்கிக் கூறப்பட்டிருக்கிறது. இதன் விலை அணு. 0—2—0

ஈ. வெ. ராமசாமியின் சீர்திருத்த மகாநாட்டுச் சொற்பொழிவு.

இதில் ஜனசமூகம், சீர்திருத்தம்பெற்றுச் சுகமாக வாழ வேண்டியதற்கான வழிகளைக்காணலாம். மக்கள் அடிமைப்பட்டுப்பகுத்தறிவின்றி வாழ்வதற்குக் காரணங்களை உணரலாம். ஈ. வெ. ராமசாமியின் சொற்பொழிவுகளில் இது தலை சிறந்ததாகும். இதன் விலை அணு 0—2—0.

சுயமரியாதைதப்பாடல்.

இதில் சுயமரியாதைக்கொள்கைகளை விளக்கி, இனிமையான புதியவர்ணமெட்டுகளில் பாடியபாடல்கள் அடங்கியுள்ளன.

இதன் விலை அணு 0—2—0.

தர்ம பரீக்ஷை அல்லது புராண ஆபாசம்.

இது ஒரு பழைய நூல். இதில் புராணங்களின் பொருத்த மற்ற கதைகளையும், முன்னுக்குப்பின் முரணான கொள்கைகளையும் தெள்ளத்தெளிய உணரலாம். இரண்டு இளைஞர்கள் மாறு வேடம் பூண்டு பொது ஜனங்களுக்குப் புராணபுரட்டுக்களை வெளிப்படுத் தும் முறையில் எழுதப்பட்டிருக்கிறது.

இதன் விலை அணு 0—3—0

பங்களும் அல்லது பார்ப்பனக்கொடுமை.

இது ஒருநாடகம், பார்ப்பனர்களின் புரட்டுக்களையும், ஜாதி வேற்றுமை, மதக்கொடுமை, சாஸ்திரக்கொடுமை, முதலியவற்றை யும் விளக்கிச் சமதர்மத்தைப்போதிப்பது. இதுவே தமிழில் உள்ள முதல் சுயமரியாதை நாடகம்.

இதன் விலை அணு 0—4—0.

மேயோ கூற்று மெய்யா? பொய்யா?

இது அமெரிக்க நாட்டு மாதாகிய "கன்னி மேயோ" எழுதி யதில்உள்ள உண்மைகளையும், அதில் சொல்லப்படாமல் இருக்கும்— நமது நாட்டில் உள்ள வேறுபல ஆபாசங்களையும் எடுத்துக்காட்டிச் சீர்திருத்த வேண்டுமென்னும் உணர்ச்சியை உண்டாக்குவது.

இதன் விலை அணு 0—3—0

அகத்தியர் ஆராய்ச்சி.

இதில் முச்சங்கங்களின் புரட்டுக்களையும், அகத்தியர் சரித் திரப்புரட்டுக்களையும் தமிழ் நூல் ஆதாரங்களோடுவிளக்கப்பட்டிருக் கிறது. சென்னை, பண்டிதர் கா. நமச்சிவாய முதலியாரால் எழுதப் பட்டது.

இதன் விலை அணு 0—2—0

கடவுளை நிந்திக்கும் கயவர்கள் யார்?

இதில், கடவுளை நிந்திப்பவர்கள் சுயமரியாதைக்காரர்கள் அல்லவென்றும், புராணமரியாதைக்காரர்கள் தான் கடவுளை நிந்திக் கும் கயவர்களென்றும், இதிகாச புராணங்களின் ஆதாரங்களைக் கொண்டே விளக்கிக் காட்டப்பட்டிருக்கிறது. பண்டிதர் அ. ரா வன் அவர்களால் எழுதப்பட்டது.

இதன் விலை அணு 0—2—0.

கதர்-மூட நம்பிக்கை (இங்கிலீஷ்)

இதில், திரு S. ராமநாதன், அவர்கள் கதரைப்பற்றிச்செய்த உபன்யாசமும், அதற்குத் திருவாளர்கள், பட்டாபி சீத்தாராமையா வும், என். எஸ். வரதாச்சாரியும் எழுதிய மறுப்புரைகளும், அவை களுக்கு எஸ். ராமநாதன் எழுதிய பதில்களும் ஆங்கிலத்தில்வெளியி டப்பட்டிருக்கின்றன. இதைப் படித்தால் கதர்ப் புரட்டை உணர லாம்.

இதன் விலை அணு 0—2—0.

முக்கிய கவனிப்பு:— மேல்கண்ட புத்தகங்கள், "குடி அரசு" சந்தாதாரர்களுக்கு முக்கால் விலைக்குக்கொடுக்கப்படும். ஆனால் பாதித்தொகை முன்பணமாக அனுப்பவேண்டும்.

மானேஜர், குடி அரசு புத்தகாலயம், ஈரோடு.

உண்மை விளக்கம் பதிப்பகத்தில் அச்சிடப்பட்டு திருமதி நாகம்மாள் அவர்களால் வெளியிடப்பட்டது.